
திருஞானசம்பந்தப் பெருமான் திங்கள் புனை முடியார்தம்
தாலந்தோறுஞ் சென்று தமிழிசைபாடுஞ் செய்கையின் உறைப்பும்
திருத்தொண்டென்னும்
வான்பயிர் தான் ஓங்குதற்குப் பெருவேலியான திறமும்



பெரிய புராணத் தொடர் சொற்பொழிவு
... ஆண்டு நிறைவு விழா மலர்

...கன் புகழ்பாடும் சபை,
...வாரத் திருப்பணிக் குழு, பெங்களூர்



அப்பரும் சம்பந்தரும் கண்டு வணங்கல்

திருஞானசம்பந்தப் பெருமான் திங்கள் புனை முடியார்தம்
தானந்தோறுஞ் சென்று தமிழிசை பாடுஞ் செய்கையின் உறைப்பும்
திருத்தொண்டென்னும்
வான்பயிர் தான் ஓங்குதற்குப் பெருவேலியான திறமும்



பெரிய புராணத் தொடர் சொற்பொழிவு
ஆறாவது ஆண்டு நிறைவு விழா மலர்

முருகன் புகழ்பாடும் சபை,
ஆண்ட அரசு உழவாரத் திருப்பணிக் குழு,
(பதிவு செய்யப்பெற்றது)
பெங்களூர்

''அங்கண்வட திசைமேலுங் குடக்கின் மேலும்
அருந்தமிழின் வழக்கங்கு நிகழா தாகத்
திங்கள் புனை முடியார்தந் தானந் தோறுஞ்
சென்றுதமி ழிசைபாடுஞ் செய்கை போல
மங்கையுடன் வானவர்கள் போற்றிசைப்ப
வீற்றிருந்தார் வடகயிலை வணங்கிப் பாடிச்
செங்கமல மலர்வாவித் திருக்கே தாரந்
தொழுதுதிருப் பதிகவிசை திருந்தப் பாடி''

''காழியினில் வந்த கவுணியர் தம் போரேற்றை
ஆழிமிசைக் கன்மி தப்பின் வந்தா ரடிவணங்கி
வாழிதிருத் தொண்டென்னும் வான்பயிர்தா
னோங்குதற்குச்
சூழும் பெருவேலி யானீ ரெனத்தொழுதார்''

– சேக்கிழார்

முன்னுரை

பண்டு திருவடி மறவாப் பான்மையராகிய திருஞானசம்பந்தப் பெருமானை, நாமெல்லாம் உய்தி பெறுவதற்காக நம்மிடையே எழுந்தருளச் செய்தார் சிவபெருமான். திருஞானசம்பந்தப் பெருமான் வரலாற்றினை அவர்தம் திருவடி உணர்த்துமாறு தம் திருத்தொண்டர் வரலாற்றிலே பாதிக்குமேல் திருப்பாடல்கள் அமைத்துச் சேக்கிழார் பெருமான் அருளிய திருமொழிகளைச் சென்ற ஆண்டு முழுதும் பெரியபுராண வகுப்பில் கிழமை தோறும் கற்றுணர்ந்து வந்தோம்.

இந்த மலரில் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய முன்னூற்றி எண்பத்து நான்கு (384) பதிகங்களில் முதற்பாடல், முதற்குறிப்பு அனைத்தும் அமையுமாறு சேர்த்துள்ளோம்.

திருஞானசம்பந்தப் பெருமான் துதியாக நால்வர் நான்மணி மாலையில் திருஞானசம்பந்தரின் பத்துப் பாடல்கள், ஆளுடைய பிள்ளையார் அருள்மாலையில் பன்னிரண்டு பாடல்கள், பன்னிரு திருமுறைகளில் வரும் துதிப்பாடல்கள் ஆகியனவற்றைத் தொகுத்துத் தந்துள்ளோம்.

சேக்கிழார் பெருமான், திருஞானசம்பந்தப் பெருமானை வெவ்வேறு திருப்பெயர்களிட்டு அழைத்தமையும் தொகுத்துத் தந்துள்ளோம். அவற்றுள் பெருமான் வியத்தகு அற்புதங்கள் ஆற்றியவற்றைக் குறிப்பிடுவனவான சிலவற்றை அவர்தம் திருப்பெயர்களாகவே குறித்துள்ளோம்.

திருஞானசம்பந்தரின் வினைக் கொள்கை, அவர்தம் பாடல்களின் பண்கள், அவர்தம் அருளிச் செயலில் பதிகங்கள் கிடைக்காத பாடல்கள் இன்னின்ன என்ற குறிப்பும், பெரியபுராண வகுப்பில் உணர்ந்த கருத்துச் சிலவும், உழவாரப் பணியின் விவரங்கள் சிலவும் இந்த மலரில் இடம் பெறுகின்றன.

திருவருளால் தானங்கள் தோறும் பாடும் செய்கையராகிய பெருமான் நெறியும், திருஆலவாய்க்குச் செல்லும் முன் உற்ற "நாள்கோள்" தடையை "வேயுறு தோளிபங்கன்" பாடி நீக்கி, ஈனர்களுக்கு எளியராகாது திருஆலவாய் அரனை முன்னிறுத்தி வையகம் துயர் தீர "அனல்-புனல்" வாதங்களில் வெற்றி பெற்றுத் திரும்பியவரைத் *"திருத்தொண்டென்னும் வான்பயிர்தான் ஓங்குதற்கு பெருவேலி ஆயினீர்"* என்று திருநாவுக்கரசு நாயனாரே வரவேற்கும் சிறப்பையே இந்த மலர்க்குத் தலைப்பாக அமைக்க இயன்றது.

அன்பர்கள் வழிபாட்டிற்கு இந்த மலர் ஒரு சிறு மலராக அமையும் என்று நம்புகிறோம்.

இப்படிக்கு
பெரியபுராண வகுப்பு மாணவர்கள் மற்றும்
ஆண்ட அரசு உழவாரத் திருப்பணிக்
குழுத் தொண்டர்கள்.

இங்கிதமாலை

வள்ளலார் அருளிய இங்கிதமாலை 7 பாடல்கள் விளக்கம் மூன்றாவது ஆண்டு விழா மலர் பக்கம் 124 முதல் 130 வரை தந்தோம். மேலும் 8 பாடல்விளக்கம் தந்ததையும் குறித்திருந்தோம். அதன் பின் 15-10-2007 அன்று 114, 124, 131, 28, 1 ஆகிய 5 பாடல்கட்கும் 6.10-2008 அன்று 9, 11, 15, 18, 42, 51 ஆகிய 6 பாடல்கட்கும் விளக்கம் தந்தனர் ஆசிரியர். தற்போது சம்பந்தர் மலராகிய இம்மலரில் 136-ஆம் பாடலாகிய'

ஆழி விடையீர் திருவொற்றி
　　யமர்ந்தீ ரிருவர்க்ககமகிழ்வான்
வீழியதனிற் படிக்காசு
　　வேண்டி யளித்தீ ராமென்றேன்
வீழி யதனிற் படிக்காசு
　　வேண்டா தளித்தா யளவொன்றை
யேழிலகற்றி யென்கின்றார்
　　இது தான் சேடி என்னேடி

திருவொற்றிப் பெருமான் தலைவியின் இல்லத்திற்கு வந்து பலி கேட்ட போது திருமாலாகிய விடையேறிய பெருமானே திருநாவுக்கரசருக்கும் திருஞான சம்பந்தர்க்கும் படிக்காசை அளித்தீர் என்றேன். அப்போது ஒற்றிப் பெருமான் என்னைப் பார்த்து ஏழில் ஒருமாத்திரை அகற்றினால் எழில் என்றாகும் அல்லவா அந்த எழிலை உலகக் காமமும் காசும் அகற்றும் படி உலகம் ஆசு - குற்றம் படிக் காசு.

அவ் உலகக் காமமும் காசும் அற்று நந்தம் பெருமக்கள் போல இறைவர் திருவருட் படிக்காசு பெற்று உய்தல் நம் கடன்.

தமிழோடிசை கேட்கும் இச்சையால் காசு நித்தல் நல்கினீர். நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த நிறைமறையோர் உறை வீழி மிழலை தனில் நித்தல் காசருளிச் செய்தீர் இன்று எனக்கருள வேண்டும் - சுந்தரர்.

அகவல்

அருட் பெருஞ்சோதி அகவல் ஓதுதற்கு ஒடுக்கத்தூர் மடத்தார் இந்த ஆண்டும் (தைப் பூசம் 8.2.2009) வேண்ட அகவலின் 54 தலைப் புகட்கும் அடியார் 54 பேர் ஒவ்வொரு தலைப்புப் பகுதி எழுதித் தந்தனர். அகவல் காலை 10-30 முதல் 12.00 மணிக்குள் ஓதினோம். ஏழுதிரை பற்றி ஒருமணி நேரம் ஆசிரியர் சொற் பொழிவாற்றினர்.

திருச்சிற்றம்பலம்



முருகன் புகழ் பாடும் சபை;
ஆண்ட அரசு உழவாரத் திருப்பணிக் குழு, பெங்களூர்.
பதிவு எண் : **SJN - S193 2007-08, 20.02.2008.**

புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவை யாறே.

- திருஞானசம்பந்தர்.

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின்எழு பிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்

– சேக்கிழார்.

தெய்வச் சேக்கிழார் அருளிய பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு
ஆறாவது ஆண்டு நிறைவு விழா.

ஆண்ட அரசு உழவாரத் திருப்பணிக் குழுவின் ஐம்பதாவது திருப்பணி
''திருஞானசம்பந்தப் பெருமான் திங்கள் புனை முடியார்தம் தானந்தோறுஞ் சென்று தமிழிசை பாடுஞ் செய்கையின் உறைப்பும்; திருத்தொண்டென்னும் வான்பயிர் தான் ஓங்குதற்குப் பெருவேலியான திறமும்.''
விழாமலர் வெளியீடு.

நாள்	:	**31.05.2009** ஞாயிற்றுக்கிழமை
நேரம்	:	காலை **9.00** மணி முதல் இரவு **8.00** வரை
இடம்	:	மஹான் ஸ்ரீ ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம் அலசூர் ஏரிக்கரை, கங்காதர செட்டித்தெரு, பெங்களூர்-42.

அன்புடையீர், வணக்கம் !

தெய்வச் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத் தொடர்ச் சொற்பொழிவு 25.05.2003 அன்று தொடங்கப்பெற்று, முதலாண்டு நிறைவு விழா 30.05.2004 அன்றும், இரண்டாவது ஆண்டு நிறைவு விழா 28.05.2005 அன்றும், மூன்றாவது ஆண்டு நிறைவு விழா 28.05.2006 அன்றும், நான்காவது ஆண்டு நிறைவு விழா 10.06.2007 அன்றும், ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா 15.06.2008 அன்றும் கொண்டாடினோம்.

இந்த ஆறாவது ஆண்டில் திருஞானசம்பந்தர் திருஆலவாய் வெற்றியுடன் திரும்பி வரும் வழியில் திருத்தெளிச்சேரிப் பதியில் ''பூவலர்ந்தன'' பாடியது முதல் திருவாலங்காட்டில் ''துஞ்சவருவாரும்'' பாடியது வரைப் பார்த்தோம். இந்த ஆண்டு சுந்தரர் கண் இழந்தது முதல் கண் பெற்றது வரை உள்ள பதின்மூன்று தலங்களுக்கும் உழவாரத் திருப்பணி மேற்கொண்டு வணங்கி வந்தோம். மேலும் ஐம்பதாவது உழவாரத் திருப்பணியின் நிறைவாக 26.03.2009 அன்று நேச நாயனார் புராணம் வகுப்பில் சிந்தித்தோம்; 27.03.2009 அன்று, நேச நாயனாரின் திருவவதாரத் தலமான கர்நாடக மாநிலத்தில் அமைந்த ''காம்பீலி''யில் உழவாரத் திருப்பணி செய்தோம். 30.03.2009 அன்று நாயனாரின் குருபூசை கொண்டாடினோம்.

இந்த ஆறாவது ஆண்டு விழா மலர் திருஞானசம்பந்தப் பெருமான் பற்றிய சிறப்பு மலராக வெளிவரத் திருவருள் கூட்டியுள்ளது. சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றிலிருந்து சில பகுதிகள் நாடகமாக ஐந்தாவது ஆண்டு விழாவில் அமைத்தோம். இந்த ஆண்டு ''ஆண்ட சண்பை அரசராகிய'' திருஞானசம்பந்தப் பெருமானைப் ''புனிதவாய் மலர்ந்தழுதார்'' என்ற தலைப்பில் அவர்தம் பெருவாழ்வின் சில பகுதிகளை நாடகமாக அமைக்க இருக்கிறோம். இந்த ஆறாவது ஆண்டு நிறைவு விழா அழைப்பு நிகழ்ச்சிக் குறிப்பைக் கண்ணுற்று எல்லா நிகழ்ச்சிகளிலும் தெய்வச் சேக்கிழார் குரு பூசையிலும் கலந்துதவுமாறு வேண்டுகிறோம்.

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை அலர்மேயப்
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் இவன்தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.

- திருஞானசம்பந்தர்.

முன்புறு நிலையும் பின்புறுநிலையும் முன்னி நின்று உளமயக் குறுங்கால்
அன்புறு நிலையால் திருநெறித் தமிழ்கொண்டு ஐய நீத் தருளிய அரசே
என்புபெண் ணுருவோ டின்னுயி ரதுகொண்டு எழுந்திடப் புரிந்துல கெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே என்னுயிர்க் குயிரெனும் குருவே.

- ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை.

இப்படிக்கு
முருகன் புகழ்பாடும் சபை;
ஆண்ட அரசு உழவாரத் திருப்பணிக் குழ
அடியார்கள்.

நிகழ்ச்சி நிரல்

நாள்	:	31.05.2009 ஞாயிற்றுக்கிழமை
நேரம்	:	காலை 9.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை
இடம்	:	மஹான் ஸ்ரீ ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம் - சோதி மன்றம்
இறைவணக்கம்	:	திருமதி. சந்திரா சிவகுமார் திருமதி. விஜயலட்சுமி
நிகழ்ச்சித் தொகுப்பாளர்	:	திரு. கோபால், வகுப்பு மாணவர்

காலை	07.30	- திருவமுது
	08.45	- திருத்தொண்டத்தொகை
	09.00	- இறைவணக்கம்
	09.15	- வரவேற்புரை
	09.20	- தோடுடைய செவியன் - நாடகம்
	09.50	- தோடுடைய செவியன் - நாட்டியம்
	10.00 - 1.00	- திருமுறை விண்ணப்பம் பொதுவாகவும் திருஞானசம்பந்தரின் 23 பண்களில் வரும் தேவாரம் சிறப்பாகவும் பாடும் இசை நிகழ்ச்சி : திருமுறை இசை மாமணி *பா. சற்குரு நாத தேசிகர்*, மயிலை.
மதியம்	01.00	- கோலாட்டம்
	01.30	- மாகேசுவர பூசை
	02.00	- நாடகம்
	02.30	- N.R. ஜெயந்தி & குழுவினரின் "*திருஞானசம்பந்தர்*" இசைச் சொற்பொழிவு
	04.00	- கலந்துரையாடல் - பெரிய புராண மாணவர்கள் மற்றும் உழவாரத் திருப்பணியில் கலந்து கொண்டவர்கள்
மாலை	05.00	- சிறப்புச் சொற்பொழிவு / தலைமை உரை "*திருஞானசம்பந்தர் திருநெறிய தமிழ்*" செந்தமிழ் அரசு *சிவ. கி. சிவகுமார்* அவர்கள், நிறுவனர் : முருகன் புகழ்பாடும் சபை, சென்னை.
	06.00	- நாடகம்
	06.30	- தொகுப்புரை : பெரிய புராண வகுப்பின் தொகுப்புரை பெரிய புராண வகுப்பு ஆசிரியர், செந்தமிழ்ச் செல்வன் *சிவ. சி. மதன் முரளி* அவர்கள்
	07.30	- நாடகம்
	08.00	- நன்றியுரை, அடியார்க்கு அமுது

தொடர் எண்	கோயில்	அம்மையப்பர்	தொலைவு	திருப்பணி ஆற்றிய நாள்
41.	அலசூர்	சோமேசுவரர் - காமாட்சியம்மை	3	22.06.2008
42.	ஆனேகல்	மல்லிகார்ச்சுனேசுவரர்-பார்வதி	40	20.07.2008
43.	திருவொற்றியூர் முதல் திருவாரூர் வரை 13 தலங்கள்	சுந்தரர் கண் இழந்து கண் பெறும் வரை வழிபட்ட தலங்கள்	600	14.08.2008 - 17.08.2008
44.	குதூர்	கங்காதரேசுவரர் - பார்வதி	100	09.09.2008
45.	அலசூர்	சோமேசுவரர் - காமாட்சியம்மை	3	26.10.2008
46.	அரோ அல்லி	அருணாசலேசர்-உண்ணாமுலையம்மை	45	23.11.2008
47.	அலசூர்	சோமேசுவரர் - காமாட்சியம்மை	3	28.12.2008
48.	சிவ சமுத்திரம்	சோமேசுவரர் - பிரசன்ன பார்வதி	150	25.01.2009
49.	அலசூர்	சோமேசுவரர் - காமாட்சியம்மை	3	22.02.2009
50.	காம்பீலி	விருபாட்சேசுவரர் - கெம்பாம்பாள்	350	26.03.2009 - 28.03.2009
51.	கம்பைநல்லூர்	தேசநாதேசுவரர் - பார்வதி	200	26.04.2009

உள்ளுறை

திருஞானசம்பந்தப் பெருமான் தேவாரம்

சேக்கிழார், திருஞானசம்பந்தப் பெருமான் வழிபட்ட தலங்களைக் குறிப்பிட்டுப் பதிகம் அருள்செய்ததாகச் சொல்லும் இடங்கள்.

பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் புராணப் பாடல் எண் / திருஞானசம்பந்தர் தேவாரம் பக்க எண்

(மூன்றாவது ஆண்டு விழா மலரில் திருஞானசம்பந்தப் பெருமான் தேவாரம் சேக்கிழார் பெருமான் எடுத்துத் தந்தவை நூறு அமைத்திருந்தோம். அவற்றின் முதற்குறிப்பு இங்கும் குறிக்கின்றோம்.)

1. 76 - 79 / 38
   தோடுடைய, வியரிலங்குவரை, தானுதல் செய்திறை, புத்தரோடு.

2. 102 / 167
   மடையில் வாளை.

3. 107 / 100
   பூவார் கொன்றை.

4. 115 / 353
   காரைகள் கூகைமுல்லை.

119 / 358

திரு மறையோர்கள் சூழ்ந்து சிந்தையின் மகிழ்ச்சி பொங்கப்
பெரு மறை யோசை மல்கப் பெருந் திருக் கோயில் யெய்தி
அரு மறைப் பொருள் ஆனாரைப் பணிந்து அணிநல் சங்கத்தின்
தரு முறை நெறியக் கோயில் சார்ந்தமை அருளிச் செய்தார்

5. **திருத்தலைச்சங்காடு** பண் - **காந்தாரம்**

நலச்சங்க வெண்குழையுந் தோடும்பெய்தோர் நால்வேதஞ்
சொலச்சங்கை யில்லாதீர் சுடுகாடல்லால் கருதாதீர்
குலைச்செங்காய்ப் பைங்கமுகின் குளிர்கொள்சோலைக் குயிலாலுந்
தலைச்சங்கைக் கோயிலே கோயிலாகத் தாழ்ந்தீரே

6. 120 / 356
   கொடியுடை மும்மதில்.

121 / 25, 27

பன்னகப் பூணினாரைப் பல்லவ னீச்சரத்துச்
சென்னியால் வணங்கி யேத்தித் திருந்து இசைப்பதிகம் பாடி
பொன்னி சூழ் புகாரில் நீடு புனிர்தம் திருச்சாய்க் காட்டு
மன்னுசீர்த் தொண்டர் எல்லாம் மகிழ்ந்து எதிர் கொள்ளப் புக்கார்

7. **காவிரிப்பூம்பட்டினத்துத்**
திருப்பல்லவனீச்சரம் **பண் - தக்கேசி**

அடையார்தம் புரங்கள்மூன்றும் ஆரழலில்லழுந்த
விடையார்மேனிய ராய்ச்சீறும் வித்தகர்மேயவிடம்
கடையார்மாடம் நீடியெங்குங் கங்குல்புறந்தடவப்
படையார்புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவனீச்சரமே

8. **ஈரடி** **பண்-பழம்பஞ்சுரம்**

பரசு பாணியர் பாடல் வீணையர்
பட்டி னத்துறை பல்லவ னீச்சரத்
தரசு பேணிநின் றாரி வர்தன்மை யறிவா ரார்.

9. **- / 22 திருச்சாய்க்காடு** **பண்-இந்தளம்**

நித்தலுந் நியமஞ் செய்துநீர் மலர்தூவிச்
சித்தமொன் றவல்லார்க் கருளுஞ் சிவன்கோயில்
மத்தயா னையின்கோ டும்வண்பீ லியும்வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகரமேவு சாய்க்காடே.

10. 122 / 23

மண்புகார் வான்புகுவர்.

11. 126 / 29

கண்காட்டு நுதலானும், பேயடையா பிரிவெய்தும்.

126 / 30, 31

மெய்ப் பொருள் ஆயினாரை வெண்காடு மேவினாரைச்
செப்பரும்பதிக மாலை கண் காட்டு நுதல் முன் சேர்த்தி
முப்புரம் செற்றார் பாதம் சேரும் முக்குளமும் பாடி
ஒப்பரும் ஞானம் உண்டார் உளம் மகிழ்ந்து ஏத்தி வாழ்ந்தார்

12. **திருவெண்காடு** **பண் - காந்தாரம்**

உண்டாய் நஞ்சை உமையோர் பங்கா என்றுள்கித்
தொண்டாய்த் திரியும் அடியார் தங்கள் துயரங்கள்
அண்டா வண்ணம் அறுப்பான் எந்தை ஊர்போலும்
வெண்டா மரைமேல் கருவண் டியாழ்செய் வெண்காடே.

13. திருவெண்காடு பண்-காந்தாரபஞ்சமம்

மந்திர மறையவை வான வரொடும்
இந்திரன் வழிபட நின்ற எம்மிறை
வெந்தவெண் ணீற்றர்வெண் காடு மேவிய
அந்தம் முதலுடை அடிக ளல்லரே

127 / 17

அருமையால் புறம்பு போந்து வணங்கி அங்கு அமரும் நாளில்
திருமுல்லை வாயில் எய்திச் செழுந்தமிழ் மாலைச் சேர்த்தி
மருவிய பதிகள் மற்றும் வணங்குவார் மறையோர் ஏத்தத்
தருமலி புகலி வந்து ஞானசம்பர் சார்ந்தார்

14. தென்திருமுல்லைவாயில் பண்-பியந்நதைக்காந்தாரம்

துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்டன்
நடமன்னு துன்னு சுடரோன்
ஒளிமண்டி யும்ப ருலகங் கடந்த
உமைபங்க னெங்க ளரனூர்
களிமண்டு சோலை கழனிக் கலந்த
கமலங்கள் தங்கு மதுவில்
தெளிமண்டி யுண்டு சிறைவண்டு பாடு
திருமுல்லை வாயி லிதுவே.

128 / 74, 75, 77

தோணிவீற்றிருந்தார் தம்மைத் தொழுது முன்னின்று தூய
ஆணியாம் பதிகம்பாடி அருட்பெருவாழ்வு கூரச்
சேணுயர் மாடமோங்குந் திருப்பதி யதனிற்செய்ய
வேணியார் தம்மை நாளும் போற்றிய விருப்பின் மிக்கார்.

15. திருத்தோணிபுரம் பண்-பழந்தக்கராகம்

வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடும் அளியரசே ஒளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்நிலைமை பரிந்தொருகாற் பகராயே.

16. திருத்தோணிபுரம் - திருவிராகம் பண் - சாதாரி

சங்கமரு முன்கைமட மாதையொரு பாலுடன் விரும்பி
அங்கமுடல் மேலுறவ ணிந்துபிணி தீரஅருள் செய்யும்
எங்கள்பெரு மானிடமெ னத்தகுமு னைக்கடலின் முத்தந்
துங்கமணி இப்பிகள் கரைக்குவரு தோணிபுர மாமே.

17. திருத்தோணிபுரம் பண் - பழம்பஞ்சுரம்

கரும்பமர் வில்லியைக் காய்ந்துகாதற் காரிகை மாட்டருளி
அரும்பமர் கொங்கையோர் பால்மகிழ்ந்த அற்புதஞ் செப்பரிதாற்
பெரும்பக லேவந்தென் பெண்மைகொண்டு பேர்ந்தவர் சேர்ந்தஇடம்
சுரும்பமர் சோலைகள் சூழ்ந்தசெம்மைத் தோணி புரந்தானே.

129 / 15, 37

வைகும் அந்நாளில் கீழ்பான் மயேந்திரப் பள்ளி வாசம்
செய் பொழில் குருகா வூரும் திருமுல்லை வாயில் உள்ளிட்டு
எய்திய பதிகள் எல்லாம் இன்புற இறைஞ்சி ஏத்தித்
தையலாள் பாகர் தம்மைப் பாடினார் தமிழ்ச் சொன் மாலை

18. திருமயேந்திரப்பள்ளி பண் - கொல்லி

திரைதரு பவளமுஞ் சீர்திகழ் வயிரமுங்
கரைதரும் அகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலால் எயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை அழகனை அடியிணை பணிமினே

19. திருக்குருகாவூர் வெள்ளடை பண் - அந்தாளிக்குறிஞ்சி

சுண்ணவெண் ணீறணி மார்பில் தோல்புனைந்
தெண்ணரும் பல்கணம் ஏத்தநின் றாடுவார்
விண்ணமர் மைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர் மேனியெம் பிஞ்ஞக னாரே

130 / ..

அவ்வகை மருங்கு சூழ்ந்த பதிகளிலரனார் பொற்றாள்
மெய்வகை ஞானமுண்ட வேதியர் விரவிப் போற்றி
உய்வகை மண்ணுளோர்க்கு உதவிய பதிகம் பாடி
எவ்வகை யோருமேத்த இறைவரை ஏத்து நாளில்

(செம்பங்குடி-திருக்கொண்டல்-திருமயிலாடி இப்பதிகங்கள் கிடைத்தில)

20. 162 / 1
கற்றாங் கெரியோம்பி.

166 / 5
செய்ய சடையார் திருவேட்களம் சென்று
கை தொழுது சொல் பதிகம் பாடிக் கழுமலக் கோன்
வைகி அருளும் இடம் அங்கு ஆக மன்றாடும்
ஐயன் திருக் கூத்துக் கும்பிட்டு அனை வுறும் நாள்

21. **திருவேட்களம்** பண் - **தக்கராகம்**

அந்தமும் ஆதியு மாகிய வண்ணல்
ஆரழ லங்கை அமர்ந்திலங்க
மந்த முழவம் இயம்ப
மலைமகள் காண நின்றாடிச்
சந்த மிலங்கு நகுதலை கங்கை
தண்மதியம் மயலே ததும்ப
வெந்தவெண் ணீறு மெய்பூசும்
வேட்கள் நன்னக ராரே

167 / 10, 12, 8
கைம் மான் மறியார் கழிப்பாலை உள் அணைந்து
மெய்ம் மாலைச் சொல் பதிகம் பாடி விரைக் கொன்றைச்
செம்மாலை வேணித் திரு யுச்சி மேவியுறை
அம்மானைக் கும்பிட்டு அருந்தமிழும் பாடினார்

22. **திருக்கழிப்பாலை** பண் - **இந்தளம்**

புனலா டியபுன் சடையாய் அரணம்
அனலா கவிழித் தவனே அழகார்
கனலா டலினாய் கழிப்பா லையுளாய்
உனவார் கழல்கை தொழுதுள் குதுமே.

23. **திருக்கழிப்பாலை** பண் - **கௌசிகம்**

வெந்த குங்கிலி யப்புகை விம்மவே
கந்தம் நின்றுல வுங்கழிப் பாலையார்
அந்த மும்மள வும்மறி யாததோர்
சந்த மாலவர் மேவிய சாந்தமே

24. திருநெல்வாயில்-திருவுச்சி **பண் - இந்தளம்**

புடையி னார்புள்ளி கால்பொ ருந்திய
மடையி னார்மணி னீர்நெல் வாயிலார்
நடையி னால்விரற் கோவ ணந்நயந்
துடையி னாரெம துச்சி யாரே

25. 174 / 3

ஆடினாய் நறுநெய்.

179 / 622

ஐயர் நீர் அவதரித்திட இப்பதி அளவில் மாதவம் முன்பு
செய்தவாறு எனச் சிறப்பு ரைத்து அருளியச் செழும்பதி
இடம் கொண்ட
மை கொள் கண்டர் தம் கோயிலின் உட்புக்கு வலம்
கொண்டு வணங்கி பார்
உய்ய வந்தவர் செழுந் தமிழ்ப் பதிகம் அங்கு இசையுடன்
உரை செய்தார்

26. **திருஎருக்கத்தம்புலியூர்** **பண் - குறிஞ்சி**

படையார் தருபூதப் பகடார் உரிபோர்வை
உடையான் உமையோடும் உடனா யிடுகங்கைச்
சடையான் எருக்கத்தம் புலியூர்த் தகுகோயில்
விடையான் அடியேத்த மேவா வினைதானே

27. 181 / 627

மத்தாவரை நிறுவி.

182 / 630

வான நாயகர் திருமுது குன்றினை வழிபட வலம் கொள்வார்
தூ நறும் தமிழ்ச் சொல் இருக்குக் குறள் துணை மலர்
மொழிந்து ஏத்தி
ஞான போனகர் நம்பர் தம் கோயிலை நண்ணி அங்கு
உள்புக்கு
தேன் அலம்பு தன் கொன்றை யார் சேவடி திளைத்த
இன்பொடு தாழ்ந்தார்

28. திருமுதுகுன்றம் - திருவிருக்குக்குறள் பண் - குறிஞ்சி

நின்று மலர்தூவி, இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க், கென்றும் இன்பமே

29. 183 / 638

முரசதிர்ந்து எழுதரு.

183 / 629, 632, 635, 636

தாழ்ந்து எழுந்து முன் முரசு அதிர்ந்து எழும் எனும் தன் தமிழ் தொடை சாத்தி
வாழ்ந்து போந்து அங்கன் வளம்பதி அதன் இடை வைகுவார் மணி வெற்புச்
சூழ்ந்த தன் புனல் சுலவு முத்தாறொடு தொடுத்த சொல் தொடை மாலை
வீழ்ந்த காதலால் பல முறை விளம்பியே மேவினார் சில நாள்கள்

30. திருமுதுகுன்றம் பண் - பழந்தக்கராகம்

தேவராயும் அசுரராயுஞ் சித்தர் செழுமறைசேர்
நாவராயும் நண்ணுபாரும் விண்ணெரி கால்நீரும்
மேவராய விரைமலரோன் செங்கண்மால் ஈசனென்னும்
மூவராய முதலொருவன் மேயது முதுகுன்றே

31. திருமுதுகுன்றம் பண் - மேகராகக்குறிஞ்சி

மெய்த்தாறு சுவையும் ஏழிசையும்
எண்குணங்களும் விரும்பும்நால்வே
தத்தாலும் அறிவொண்ணா நடைதெளியப்
பளிங்கேபோல் அரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்
கருதுமூர் உலவுதெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா
ரிக்கொழிக்கும் முதுகுன்றமே

32. திருமுதுகுன்றம் பண் - காந்தாரம்

தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாய் பெரியோனே
ஆவா வென்றங்கு அடியார் தங்கட் கருள்செய்வாய்
ஓவா யுவரி கொள்ள உயர்ந்தா யென்றேத்தி
மூவா முனிவர் வணங்குங் கோயில் முதுகுன்றே.

33. **திருமுதுகுன்றம்** **பண் - கொல்லி**

வண்ணமா மலர்கொடு வானவர் வழிபட
அண்ணலார் ஆயிழை யாளொடும் அமர்விடம்
விண்ணின்மா மழைபொழிந் திழியவெள் ளருவிசேர்
திண்ணிலார் புறவணி திருமுது குன்றமே

34. 184 / 619
ஒடுங்கும் பிணிபிறவி.

35. 214 / 617
எந்தை யீசனெம்பெருமான்

229 / 639

தேவர் தம்பிரான் திரு அரத் துறையினில் இறைஞ்சி
மேவு நாட்களில் விமலனார் நெல் வெண்ணெய் முதலாத்
தாவில் அன்பர்கள் தம் உடன் தொழுது பின் சண்பைக்
காவலர் அருள் பெற்று உடன் கலந்து மீண்டு அணைந்தார்

36. **திருநெல்வெண்ணெய்-திருமுக்கால்** **பண் - சாதாரி**

நல்வெணெய் விழுதுபெய் தாடுதிர் நாடொறும்
நெல்வெணெய் மேவிய நீரே
நெல்வெணெய் மேவிய நீருமை நாடொறுஞ்
சொல்வணம் இடுவது சொல்லே

37. 237 / 249
அந்தணர்கள் ஆனமலை.

38. 239 / 220
கீதமுன் இசைதர.

240 / 222

விசய மங்கையின் இடம் அகன்று மெய்யர் தாள்
அசைவில் வைகாவினில் அணைந்து பாடிப் போந்து
இசை வளர் ஞான சம்பந்தர் எய்தினார்
திசை உடை ஆடையர் திருப்புறம் பயம்

39. திருவைகாவூர் - திருவிராகம் பண் - சாதாரி
கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை கூடுவகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொன்மகிழும் ஈசனிடமாந்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல் சேறுசெயும் வைகாவிலே

241 / 218

புறம் பயத்து இறைவரை வணங்கிப் போற்றி செய்
திறம் புரி நீர்மையில் பதிகச் செந்தமிழ்
நிறம் பயில் இசையுடன் பாடி நீடிய
அறம் தரு கொள்கையார் அமர்ந்து மேவினார்

40. திருப்புறம்பயம் - திருவிராகம் பண் - இந்தளம்
மறம்பய மலைந்தவர் மதிற்பரி சறுத்தனை
நிறம்பசுமை செம்மையொ டிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொருள் தெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புரம்பய மமர்ந்தோய்

41. 248 / 212
பீரடைந்த பாலதாட்ட

249 / 209

இன் இசை வண் தமிழ் பாடி ஏத்தியே
நன்னெடும் பதி உளோர் நயக்க வைகிய
பின்னர் வெண்பிறை அணி வேணிப் பிஞ்ஞகர்
மன்னிய திருப்பனந்தாள் வணங்கினார்

42. திருப்பனந்தாள் பண் - பஞ்சமம்
கண்பொலி நெற்றியினான் திகழ்கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகுபீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தருசெஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத்தாடகை யீச்சரமே

250 / 202

ஆங்கணி சொன் மலர் மாலை சாத்தி அப்
பாங்கு பந்தணை நலூர் பணிந்து பாடிப் போய்த்
தீங்கு தீர் மா மறைச் செம்மை அந்தனர்
ஓங்கும் ஓமாம் புலியூர் வந்து உற்றனர்

43. திருப்பந்தணைநல்லூர் பண் - புறநீர்மை

இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை
யிவைசொல்லி யுலகெழுந் தேத்தக்
கடறினா ராவர் காற்றுளா ராவர்
காதலித் துறைதரு கோயில்
கொடிறனார் யாதுங் குறைவிலார் தாம்போய்க்
கோவணங் கொண்டு கூத்தாடும்
படிறனார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே.

251 / 190

மற்ற நல் பதி வட தளியின் மேவிய
அற்புதர் அடி பணிந்து அலர்ந்த செந்தமிழ்ச்
சொல் தொடைபாடி அங்கு அகன்று சூழ் மதில்
பொன் பதி வாழ் கொளி புத்தூர் புக்கனர்

44. திருஓமமாம்புலியூர் பண் - புறநீர்மை

பூங்கொடி மடவாள் உமையொரு பாகம்
புரிதரு சடைமுடி யடிகள்
வீங்கிருள் நட்டம் ஆடுமெம் விகிர்தர்
விருப்பொடும் உறைவிடம் வினவில்
தேங்கமழ் பொழிலிற் செழுமலர் கோதிச்
செறிதரு வண்டிசை பாடும்
ஓங்கிய புகழார் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி யதுவே.

252 / 186, 189, 200

சீர் வளர் கோயிலை அணைந்து தேமலர்க்
கார் வளர் கண்டர் தாள் பணிந்து காண்பவர்
பார் புகழ் பதிகங்கள் பாடி நீடுவார்
வார் பொழில் கடம்பையும் வணங்கி வாழ்ந்தனர்

45. திருவாழ்கொளிபுத்தூர் பண் - தக்கராகம்

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப்
பூதகணம் புடை சூழக்
கொடியுடை யூர்திரிந் தையங்
கொண்டு பலபல கூறி
வடிவுடை வாள்நெடுங் கண்ணுமை பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக்
கறைமிடற் றானடி காண்போம்.

46. திருவாழ்கொளிபுத்தூர் பண் - பியந்தைக்காந்தாரம்

சாகை யாயிர முடையார் சாமமும் ஓதுவ துடையார்
ஈகை யார்கடை நோக்கி யிரப்பதும் பலபல வுடையார்
தோகை மாமயி லனைய துடியிடை பாகமும் உடையார்
வாகை நுண்துளி வீசும் வாழ்கொளி புத்தூ ருளாரே

47. திருக்கடம்பூர் பண் - காந்தாரம்

வானமர் திங்களும் நீரும் மருவிய வார்சடை யானைத்
தேனமர் கொன்றையி னானைத் தேவர் தொழப்படு வானைக்
கானம ரும்பிணை புல்கிக் கலைபயி லுங்கடம் பூரில்
தானமர் கொள்கையி னானைத் தாள்தொழ வீடெளி தாமே.

253 / 193, 197, 198

நம்பரை நலம் திகழ் நாரை ஊரினில்
கும்பிடும் விருப்பொடு குறுகிக் கூடிய
வம்பலர் செந்தமிழ் மாலை பாடி நின்று
எம்பிரான் கவுணியர் தலைவர் ஏத்தினார்

48. திருநாரையூர் பண் - பியந்தைக்காந்தாரம்

உரையினில் வந்தபாவம் உணர்நோய்க ளும்ம
  செயல்தீங்கு குற்ற முலகில்
வரையினி லாமைசெய்த அவைதீரும் வண்ணம்
  மிகவேத்தி நித்தம் நினைமின்
வரைசிலை யாகவன்று மதில்மூன் றெரித்து
  வளர்கங்குல் நங்கை வெருவ
திரையொலி நஞ்சமுண்ட சிவன்மேய செல்வத்
  திருநாரை யூர்கை தொழவே.

49. திருநாரையூர் பண் - பழம்பஞ்சுரம்

காம்பினை வென்றமென் தோளிபாகங் கலந்தான் நலந்தாங்கு
தேம்புனல் சூழ்திகழ் மாமடுவின் திருநாரை யூர்மேய
பூம்புனல் சேர்புரி புன்சடையான் புலியின் னுரிதோன்மேற்
பாம்பினை வீக்கிய பண்டரங்கன் பாதம் பணிவோமே.

50. திருநாரையூர் பண் - பழம்பஞ்சுரம்

கடலிடை வெங்கடு நஞ்சமுண்ட கடவுள் விடையேறி
உடலிடை யிற்பொடிப் பூசவல்லான் உமையோ டொருபாகன்
அடலிடை யிற்சிலை தாங்கியெய்த அம்மான் அடியார்மேல்
நடலைவி னைத்தொகை தீர்த்துகந் தானிடம் நாரையூர்தானே.

255 / 184
பரமர் தம் திருக் கருப் பறியல் ஊரினைச்
சிரபுரச் சிறுவர் கை தொழுது செந்தமிழ்
உரை இசை பாடி அம் மருங்கின் உள்ளவாம்
சுரர் தொழும் பதிகளும் தொழுது பாடினார்

51. **திருக்கருப்பறியலூர் - திருவிராகம் பண் - இந்தளம்**
சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடும்அடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே.

52. 266 / 746
மந்திர நான்மறையாகி.

276 / 145, 120, 159, 147, 144, 149, 162, 82
செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுள்களான மொழி மாற்றும்
வந்த சொல் சீர் மாலை மாற்றும் வழி மொழி எல்லா மடக்குச்
சந்த வியமகம் ஏகபாதம் தமிழ் இருக்குக் குறள் சாத்தி
எந்தைக்கு எழு கூற்றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு

53. **சீகாழி - மொழிமாற்று பண் - வியாழக்குறிஞ்சி**
காட தணிகலங் காரர வம்பதி காலதனிற்
தோட தணிகுவர் சுந்தரக் காதினில் தூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற் குருவம்வில் லுங்கொடுப்பர்
பீட தணிமணி மாடப் பிரம புரத்தாரே

54. **சீகாழி - திருமாலைமாற்று பண் - கௌசிகம்**
யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா

55. **சீகாழி - வழிமொழித்திருவிராகம் பண் - சாதாரி**
சுரருலகு நரர்கள்பயில் தரணிதலம் முரணழிய அரணமதில்முப்
புரமெரிய விரவுவகை சரவிசைகொள் கரமுடைய பரமனிடமாம்
வரமருள வரன்முறையி னிரைநிறைகொள் வருசுருதி சிரவுரையினாற்
பிரமனுயர் அரனெழில்கொள் சரணவிணை பரவவளர் பிரமபுரமே

56. **சீகாழி - திருஏகபாதம் பண் - வியாழக்குறிஞ்சி**

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்

57. **திருப்பிரமபுரம் - திருவிருக்குக்குறள் பண் - குறிஞ்சி**

அரனை உள்குவீர், பிரம னூருளெம்
பரனை யேமனம், பரவி உய்ம்மினே

58. **திருவெழுகூற்றிருக்கை பண் - வியாழக்குறிஞ்சி**

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
இருநதி யரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை

பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறை முதல் நான்கும்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லை நீள்நிலத்தே.

59. திருப்பிரமபுரம் - ஈரடி பண் - பழம்பஞ்சுரம்

வரம தேகொளா உரம தேசெயும்
புரமெ ரித்தவன் பிரம நற்புரத்
தரன்நன் நாமமே பரவு வார்கள்சீர்
விரவு நீள்புவியே

60. திருப்பூந்தராய் - ஈரடிமேல் வைப்பு பண்-காந்தாரபஞ்சமம்

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன்தானே

277 / 62, 127, 57, 115, 98, 94, 153, 151, 142, 156, 132

நாலடி மேல் வைப்பு மேன்மை நடையின் முடுகும் இராகம்
சால்பினில் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிக
மூல இலக்கியமாக எல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத்து உயர் காழியாரைப் பாடினார் ஞான சம்பந்தர்

61. **திருப்புகலி - நாலடிமேல் வைப்பு**
பண் - காந்தாரபஞ்சமம்

இயலிசை யெனும்பொரு ளின்திறமாம்
புயலன மிடறுடைப் புண்ணியனே
கயலன அரிநெடுங் கண்ணியொடும்
அயலுல கடிதொழ அமர்ந்தவனே
கலனாவது வெண்டலை கடிபொழிற் புகலிதன்னுள்
நிலனாள்தொறும் இன்புற நிறைமதி யருளினனே

62. **திருக்கழுமலம் - திருவிராகம் பண் - நட்டபாடை**

பிறையணி படர்சடை முடியிடைப்
பெருகிய புனலுடை யவனிறை
இறையணி வளையிணை முலையவ
ளிணைவன தெழிலுடை யிடவகை
கறையணி பொழில்நிறை வயலணி
கழுமலம் அமர்கனல் உருவினன்
நறையணி மலர்நறு விரைபுல்கு
நலம்மலி கழல்தொழன் மருவுமே

63. **திருப்புகலி - திருவிராகம் பண் - இந்தளம்**

முன்னிய கலைப்பொருளும் மூவுலகில் வாழ்வும்
பன்னிய வொருத்தர்பழ வூர்வினவின் ஞாலந்
துன்னிஇமை யோர்கள்துதி செய்துமுன் வணங்குஞ்
சென்னியர் விருப்புறு திருப்புகலி யாமே

64. **சீகாழி - திருவிராகம் பண் - நட்டராகம்**

நம்பொருள்நம் மக்களென்று நச்சிஇச்சை செய்துநீர்
அம்பரம்அ டைந்துசால அல்லலுய்ப்ப தன்முனம்
உம்பர்நாதன் உத்தமன் ஒளிமிகுத்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே

65. **திருச்சன்பைநகர் - திருவிராகம் பண் - சாதாரி**

எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானெனஇ றைஞ்சியிமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்யஅமர் கின்றஅழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சன்பைநகரே

66. **திருப்புறவம் - திருவிராகம் பண் - சாதாரி**

பெண்ணிய லுருவினர் பெருகிய புனல்விர வியபிறைக்
கண்ணியர் கடுநடை விடையினர் கழல்தொழும் அடியவர்
நண்ணிய பிணிகெட அருள்புரி பவர்நணு குயர்பதி
புண்ணிய மறையவர் நிறைபுகழ் ஒலிமலி புறவமே

67. **திருப்பிரமபுரம் - திருச்சக்கரமாற்று பண் - காந்தாரம்**

விளங்கியசீர்ப் பிரமனூர் வேணுபுரம்
புகலிவெங் குருமேற் சோலை
வளங்கவருந் தோணிபுரம் பூந்தராய்ச்
சிரபுரம்வண் புறவ மண்மேல்
களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயங்
கொச்சைகழு மலமென் றின்ன
இளங்குமரன் றன்னைப்பெற் றிமையவர்தம்
பகையெறிவித் திறைவ னூரே.

68. **திருப்பிரமபுரம் - பல்பெயர்ப்பத்து பண் - தக்கேசி**

எரியார்மழுவொன் றேந்தியங்கை இடுதலையேகலனா
வரியார்வளையா ரையம்வவ்வாய் மாநலம்வவ்வுதியே
சரியாநாவின் வேதகீதன் தாமரைநான்முகத்தன்
பெரியான்பிரமன் பேணியாண்ட பிரமபுரத்தானே.

69. **திருப்பிரமபுரம் - திருக்கோமூத்திரி பண் - காந்தாரம்**

பூமகனூர் புத்தேளுக் கிறைவனூர்
குறைவிலாப் புகலி பூமேல்
மாமகளூர் வெங்குருநல் தோணிபுரம்
பூந்தராய் வாய்ந்த இஞ்சிச்
சேமமிகு சிரபுரஞ்சீர்ப் புறவநிறை
புகழ்ச்சண்பை காழி கொச்சை
காமனைமுன் காய்ந்தநுதற் கண்ணவனூர்
கழுமலம்நாங் கருது மூரே.

70. திருக்கழுமலம் - திருத்தாளச்சதி பண்-வியாழக்குறிஞ்சி

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின் றவும்பரப்
 பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
 சேர்வார்நாள்நாள் நீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கள்நின்று தங்கணாற்
 தாமேகாணா வாழ்வாரத் தகவுசெய் தவனதிடங்
கந்தத்தால் எண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
 காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே

285 / 171

திருமறைச் சண்பையர் ஆளி சிவனார் திருக்கண்ணார் கோயில்
பெரு விருப்பால் அணைந்து ஏத்திப் பிஞ்ஞகர் கோயில் பிறவும்
உருகிய அன்பால் இறைஞ்சி உயர் தமிழ் மாலை கொண்டு ஏத்தி
வரு புனல் பொன்னி வடபால் குட திசை நோக்கி வருவார்

71. திருக்கண்ணார்கோயில் பண் - குறிஞ்சி

தண்ணார்திங்கட் பொங்கரவந்தாழ் புனல்சூடிப்
பெண்ணாணாய பேரருளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவோர்கட் கிடர்பாவம்
நண்ணாவாகும் நல்வினையாய நணுகும்மே

72. 286 / 169

கள்ளார்ந்த பூங்கொன்றை

287 / 175, 176

நீடு திரு நின்றி ஊரின் நிமலனார் நீள் கழல் ஏத்திக்
கூடிய காதலில் போற்றிக் கும்பிட்டு வண் தமிழ் கூறி
நாடு சீர் நீடூர் வணங்கி நம்பர் திருப் புன்கூர் நண்ணி
ஆடிய பாதம் இறைஞ்சி அரும் தமிழ் பாடி அமர்ந்தார்

73. திருநின்றியூர் பண் - நட்டபாடை

சூலம்படை சுண்ணப்பொடி சாந்தஞ்சுடு நீறு
பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்
காலன்வலி காலினொடு போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்நிலை யோர்க்கே

74. திருப்புன்கூர் பண் - தக்கராகம்

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்தம் இல்லா அடிக ளவர்போலுங்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே

289 / 178,

திருக்குறுக்கைப் பதி மன்னித் திரு வீரட்டானத்து அமர்ந்த
பொருப்புவில்லாளரை ஏத்திப் போந்து அன்னியூர் சென்று போற்றிப்
பருக்கை வரை உரித்தார் தம் பந்தணை நல்லூர் பணிந்து
விருப்புடன் பாடல் இசைத்தார் வேதம் தமிழால் விரித்தார்

75. திருஅன்னியூர் - திருவிருக்குக்குறள் பண் - குறிஞ்சி

மன்னி யூரிறை, சென்னி யார்பிறை
அன்னி யூரமர், மன்னு சோதியே.

290 / 182

அப்பதி போற்றி அகல்வார் அரனார் திருமணம் சேரி
செப்பரும் சீர்த் தொண்டரோடும் சென்று தொழுது இசை பாடி
எப்பொருளும் தரும் ஈசர் எதிர் கொள் பாடிப் பதி எய்தி
ஒப்பில் பதிகங்கள் பாடி ஓங்கு வேள்விக் குடி உற்றார்

76. திருமணஞ்சேரி பண் - இந்தளம்

அயிலாரும் அம்பத னாற்புர மூன்றெய்து
குயிலாரும் மென்மொழி யாளொரு கூறாகி
மயிலாரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே

77 291 / 180

ஓங்கிமேல் உழிதரும்

292 / 205

திருக்கோடி காவில் அமர்ந்த தேவர் சிகாமணி தன்னை
எருக்கோடு இதழியும் பாம்பும் இசைந்து அணிந்தானை வெள்ளேனப்
பருக்கோடு அணிந்த பிரானைப் பணிந்து சொல் மாலைகள் பாடிக்
கருக்கோடி நீப்பார்கள் சேரும் கஞ்சனூர் கை தொழச் சென்றார்

78. திருக்கோடிகா - திருவிராகம் பண் - நட்டராகம்
இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே

293 / 253
கஞ்சனூ ராண்டதங் கோவைக் கண்ணுற் றிறைஞ்சிமுன் போந்து
மஞ்சணி மாமதில் சூழ மாந்துறை வந்து வணங்கி
அஞ்சொற் றமிழ்மாலை சாத்தி யங்ககன் றன்பர்முன் னாகச்
செஞ்சடை வேதியர் மன்னுந் திருமங் கலக்குடி சேந்த்தார்.

(கஞ்சனூர் பதிகம் கிடைத்தில.)

79. திருமாந்துறை பண் - நட்டராகம்
செம்பொனார்தரு வேங்கையும் ஞாழலுஞ் செருந்திசெண்
பகம்ஆனைக்
கொம்பும் ஆரமும் மாதவி சுரபுனை குருந்தலர் பரந்துந்தி
அம்பொன் நேர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைகின்ற
எம்பி ரானிமை யோர்தொழு பைங்கழல் ஏத்துதல் செய்வோமே.

80. மங்கலக்குடி பண் - இந்தளம்
சீரி னார்மணி யும்மகில் சந்துஞ்செ றிவரை
வாரி நீர்வரு பொன்னிவ டமங்க லக்குடி
நீரின் மாமுனி வன்நெடுங் கைகொடு நீர்தனைப்
பூரித் தாட்டியர்ச் சிக்கஇ ருந்த புராணனே.

294 / 214
வெங் கண் விடை மேல் வருவார் வியலூர் அடிகளைப் போற்றித்
தங்கிய இன்னிசை கூடும் தமிழ்ப் பதிகத் தொடை சாத்தி
அங்கண் அமர்வார் தம் முன்னே அருள் வேடம்
காட்டத் தொழுது
செங்கண் மாலுக்கு அரியார் தந்திருந்து தேவன் குடி சேர்ந்தார்

81. திருவியலூர் பண் - நட்டபாடை
குரவங்கமழ் நறுமென்குழல் அரிவையவள் வெருவ
பொருவெங்கரி படவென்றதன் உரிவையுடல் அணிவோன்
அரவும்மலை புனலும்மிள மதியுந்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே

82. 295 / 213

மருந்து வேண்டிலிவை

297 / 216

இன்னம்பர் மன்னும் பிரானை இறைஞ்சி இடை மடக்கான பன்னும் தமிழ்த் தொடை மாலைப் பாடல் புனைந்து பரவி பொன்னங் கழல் இணை போற்றிப் புறம் போந்து அணைந்து புகுந்தார் மன்னும் தடம் கரைப் பொன்னி வட குரங்காடுதுறையில்

83. **திருஇன்னம்பர் - திருமுக்கால் பண் - சாதாரி**

எண்டிசைக் கும்புகழ் இன்னம்பர் மேவிய
வண்டிசைக் குஞ்சடை யீரே
வண்டிசைக் குஞ்சடை யீருமை வாழ்த்துவார்
தொண்டிசைக் குந்தொழி லோரே

84. 298 / 224

கோலமா மலரொடு

299 / 225

பழனத்து மேவிய முக்கண் பரமேட்டியார் பயில் கோயில் உழைபுக்கு இறைஞ்சி நின்று ஏத்தி உருகிய சிந்தையர் ஆகி விழை சொல் பதிகம் விளம்பி விருப்புடன் மேவி அகல்வார் அழனக்க பங்கய வாவி ஐயாறு சென்று அடைகின்றார்

85. **திருப்பழனம் பண் - தக்கேசி**

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பாஎனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே

86. 301 / 231

புலனைந்தும் பொறிகலங்கி

87. 303 / 234

கோடல் கோங்கு

304 / 240

பல முறையும் பணிந்து எழுந்து புறம் போந்து பரவு திருத் தொண்டரோடு
நிலவு திருப்பதி அதன் கண் நிகழும் நாள் நிகர் இலா நெடுநீர்க் கங்கை
அலையும் மதி முடியார் தம் பெரும்புலியூர் முதலான அணைந்து போற்றிக்
குலவு தமிழ்த் தொடை புனைந்து மீண்டு அணைந்து பெருகு ஆர்வம் கூரு நாளில்

88. திருப்பெரும்புலியூர் பண் - காந்தாரம்

மண்ணுமோர் பாக முடையார் மாலுமோர் பாக முடையார்
விண்ணுமோர் பாக முடையார் வேத முடைய விமலர்
கண்ணுமோர் பாக முடையார் கங்கை சடையிற் கரந்தார்
பெண்ணுமோர் பாக முடையார் பெரும்புலி யூர்பிரி யாரே.

305 / 238

குடதிசை மேல் போவதற்குக் கும்பிட்டு அங்கு அருள் பெற்றுக் குறிப்பின் ஓடும்
படரும் நெறி மேல் அணைவார் பரமர் திருநெய்த்தானப் பதியில் நண்ணி
அடையும் மனம் உற வணங்கி அரும் தமிழ் மாலைகள் பாடி அங்கு நின்றும்
புடைவளர் மென் கரும்பினொடு பூகம் இடை மழபாடி போற்றச் சென்றார்

89. திருநெய்த்தானம் பண் - நட்டபாடை

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடியகேடில் கரியுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தானமெ னீரே

90. 306 / 345

அங்கையார்ழல்

307 / 242

மழபாடி வயிர மணித் தூண் அமர்ந்து மகிழ்கோயில்
வலம் கொண்டு எய்தி
செழுவாச மலர்க் கமலச் சேவடிக் கீழ்ச் சென்று தாழ்ந்து
எழுந்து நின்று
தொழுது ஆடிப் பாடி நறும் சொல் மாலைத் தொடை
அணிந்து துதித்துப் போந்தே
ஒழியாத நேசம் உடன் உடையவரைக் கும்பிட்டு அங்கு
உறைந்தார் சின்னாள்

91. திருமழபாடி பண் - இந்தளம்

களையும் வல்வினை யஞ்சல்நெஞ் சேகரு தார்புரம்
உளையும் பூசல்செய் தானுயர் மால்வரை நல்விலா
வளைய வெஞ்சரம் வாங்கியெய் தான்மதுத் தும்பிவண்
டளையுங் கொன்றையந் தார்மழ பாடியுள் அண்ணலே.

92. திருமழபாடி பண் - கொல்லி

காலையார் வண்டினங் கிண்டிய காருறுஞ்
சோலையார் பைங்கிளி சொற்பொருள் பயிலவே
வேலையார் விடமணி வேதியன் விரும்பிடம்
மாலையார் மதிதவழ் மாமழ பாடியே.

308 / 249, 251

அதன் மருங்கு கடந்து அருளால் திருக்கானூர் பணிந்து
ஏத்தி ஆன்ற சைவ
முதன் மறையோர் அன்பிலாலந் துறையின் முன்னவனைத்
தொழுது போற்றிப்
பதம் நிறை செந்தமிழ் பாடிச் சடைமுடியார் பயில் பதியும்
பணிந்து பாடி
மத கரட வரை உரித்தார் வட கரை மாந்துறை அணைந்தார்
மணி நூல் மார்பர்

93. திருக்கானூர் பண் - தக்கேசி

வானார்சோதி மன்னுசென்னி வன்னிபுனங்கொன்றைத்
தேனார்போது தானார்கங்கை திங்களொடுசூடி
மானேர்நோக்கி கண்டங்குவப்ப மாலையாடுவார்
கானூர்மேய கண்ணார்நெற்றி ஆனூர் செல்வரே

94. திருஅன்பிலாலந்துறை பண் - தக்கராகம்

கணைநீடெரி மாலர வம்வரை வில்லா
இணையாஎயில் மூன்றும் எரித்த இறைவர்
பிணைமாமயி லுங்குயில் சேர்மட அன்னம்
அணையும்பொழி லன்பி லாலந் துறையாரே

95. 309 / 253

பெருகுசந்தனம் காரகில்

96. 318 / 254

துணிவளர் திங்கள்

322 / 262

பண்பயில் வண்டு இனம்பாடும் சோலைப் பைஞ்ஞீலி வானர் கழல் பணிந்து
மண் பரவும் தமிழ் மாலை பாடி வைகி வணங்கி மகிழ்ந்து போந்து
திண்பெரும் தெய்வக் கயிலையில் வாழ் சிவனார் பதி பல சென்று இறைஞ்சிச்
சண்பை வளம் தரும் நாடர் வந்து தடம் திரு ஈங்கோய் மலையைச் சார்ந்தார்

97. திருப்பைஞ்ஞீலி பண் - காந்தாரபஞ்சமம்

ஆரிடம் பாடிலர் அடிகள் காடலால்
ஓரிடங் குறைவிலர் உடையர் கோவணம்
நீரிடஞ் சடைவிடை யூர்தி நித்தலும்
பாரிடம் பணிசெயும் பயில்பைஞ் ஞீலியே

323 / 267

செங்கண் குறவரைத் தேவர் போற்றும் திகழ் திரு ஈங்கோய் மலையில் மேவும்
கங்கை சடையார் கழல் பணிந்து கலந்த இசைப் பதிகம் புனைந்து
பொங்கர்ப் பொழில் சூழ் மலையும் மற்றும் புறத்துள்ள தானங்கள் எல்லாம் போற்றிக்
கொங்கில் குடபுலம் சென்று அணைந்தார் கோதில்
மெய்ஞ்ஞானக் கொழுந்து அனையார்

98. **திருஈங்கோய்மலை** பண் - தக்கேசி

வானத்துயர்தண் மதிதோய்சடைமேல் மத்தமலர்சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியாள் தேவிபாகமாக்
கானத்திரவில் எரிகொண்டாடுங் கடவுளுலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சாரல் ஈங்கோய்மலையாரே

326 / 612

**தம் பெருமான் கோயிலினுள் எழுந்து அருளித் தமிழ் விரகர்
நம் பரவர் திரு முன்பு தாழ்ந்து எழுந்து நலம் சிறக்க
இம்பரும் உம்பரும் ஏத்த இன்னிசை வண் தமிழ் பாடிக்
கும்பிடும் ஆதரவு உடன் அக்கோ நகரில் இனிது அமர்ந்தார்**

99. **திருக்கொடிமாடச்செங்குன்றூர்** பண் - வியாழக்குறிஞ்சி

வெந்தவெண் ணீறணிந்து விரிநூல் திகழ்மார்பின் நல்ல
பந்தணவும் விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே

327 / 610

**அப்பாலைக் குட புலத்தில் ஆறணிந்தார் அமர் கோயில்
எப்பாலும் சென்று ஏத்தித் திரு நணாவினை இறைஞ்சிப்
பைப் பாந்தள் புணைந்த வரைப் பரவிப் பண்டு அமர்கின்ற
வைப்பான செங்குன்றூர் வந்து அணைந்து வைகினார்**

100. **திருநணா** பண் - காந்தாரம்

பந்தார் விரல்மடவாள் பாகமா நாகம்பூண் டேற தேறி
அந்தார் அரவணிந்த அம்மா னிடம்போலும் அந்தண் சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டு பாடச்
செந்தேன் தெளியொளிரத் தேமாக் கனியுதிர்க்குந் திருந ணாவே

101. 335 / 738

அவ்வினைக் கிவ்வினை.

338 / 614

**பருவம் அறாப் பொன்னிப் பாண்டிக் கொடு முடியார் தம்பாதம்
மருவி வணங்கி வளத் தமிழ் மாலை மகிழ்ந்து சாத்தி
விரி சுடர் மாளிகை வெஞ்சமாக் கூடல் விடையவர் தம்
பொருவில் தானம் பல போற்றிக் குணதிசைப் போதுகின்றார்**

102. **திருப்பாண்டிக்கொடுமுடி** பண் - காந்தாரம்
பெண்ணமர் மேனியி னாரும் பிறைபுல்கு செஞ்சடை யாருங்
கண்ணமர் நெற்றியி னாருங் காதம ருங்குழை யாரும்
எண்ணம ருங்குணத் தாரும் இமையவ ரேத்த நின்றாரும்
பண்ணமர் பாடலி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே.

(வெஞ்சமாக்கூடல் பதிகம் கிடைத்திலது)

339 / 615
செல்வக் கருவூர்த் திருவானிலைக் கோயில் சென்று இறைஞ்சி
நல் இசை வண் தமிழ்ச் சொல் தொடை பாடி அந்நாடு அகன்று
மல்கிய மாணிக்க வெற்பு முதலா வணங்கி வந்து
மல்கு திரைப் பொன்னித் தென் கரைத் தானம் பல பணிவார்

103. **திருக்கருவூரானிலை** பண் - இந்தளம்
தொண்டெ லாமலர் தூவி யேத்தநஞ்
சுண்ட லாருயி ராய தன்மையர்
கண்ட னார்கரு வூரு ளானிலை
அண்ட னாரரு ளீயும் அன்பரே

341 / 269
நீடும் பராயத் துறை நெற்றித் தனிக் கண்ணர் கோயில் நண்ணிக்
கூடும் கருத்தொடு கும்பிட்டுக் கோதில் தமிழ்ச் சொல் மாலை
பாடும் கவுனியர் கண்பனி மாரி பரந்து இழியச்
சூடும் கரதலத்து அஞ்சலி கோவித் தொழுது நின்றார்

104. **திருப்பராய்த்துறை** பண் - மேகராகக்குறிஞ்சி
நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை அண்ணலே

343 / 271, 273
கற்குடி மாமலை மேல் எழுந்த கனகக் கொழுந்தினைக்
கால் வளையப்
பொன் திரள் மேருச் சிலை வளைத்த போர்
விடையாளியைப் போற்றி இசைத்து
நற்றமிழ் மாலை புனைந்து அருளி ஞான சம்பந்தர்
புலன்கள் ஐந்தும்
செற்றவர் மூக்கீச்சரம் பணிந்து திருச்சிராப் பள்ளிச் சிலம்பு
அணைந்தார்

105. **திருக்கற்குடி** பண் - தக்கராகம்

வடந்திகழ் மென்முலை யாளைப் பாகம தாக மதித்துத்
தடந்திரை சேர்புனல் மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர் துன்பமொ டின்பம தெல்லாங்
கடந்தவர் காதலில் வாழுங் கற்குடி மாமலை யாரே.

106. **திருமூக்கீச்சரம்** பண் - செவ்வழி

சாந்தம்வெண்ணீ றெனப்பூசி வெள்ளஞ்சடை வைத்தவர்
காந்தளாரும் விரலேழை யோடாடிய காரணம்
ஆய்ந்துகொண்டாங் கறியந் நிறைந்தாரவ ரார்கொலோ
வேந்தன்மூக்கீச் சரத்தடிகள் செய்கின்றதோர் மெய்ம்மையே.

344 / 274

செம்மணி வாரி அருவி தூங்கும் சிராப் பள்ளி மேய செழும் சுடரை
கைம் மலை ஈருரி போர்வை சாத்தும் கண் நுதலாரைக் கழல் பணிந்து
மெய்ம் மகிழ்வு எய்தி உளம் குளிர விளங்கிய சொல் தமிழ் மாலை வேய்ந்து
மைம் மலர் கண்டர் தம் ஆனைக் காவை வணங்கும் விருப்பொடு வந்து அணைந்தார்

107. **திருச்சிராப்பள்ளி** பண் - குறிஞ்சி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே

345 / 258

விண்ணவர் போற்றி செய் ஆனைக் காவில் வெண் நாவல் மேவிய மெய்ப் பொருளை
நண்ணி இறைஞ்சி முன் வீழ்ந்து எழுந்து நால் கோட்டு நாகம் பணிந்ததுவும்
அண்ணல் கோச்செங்கண் அரசன்செய்த அடிமையும் அஞ்சொல்தொடையில் வைத்துப்
பண் உறு செந்தமிழ் மாலைப் பாடி பரவி நின்று ஏத்தினர் பான்மையினால்

108. திருவானைக்கா - திருவிராகம் பண் - கௌசிகம்

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதும்ஏதம் இல்லையே

109. 345 / 257

செங்கட் பெயர்கொண்டவன்

110. 346 / 260

மண்ணது வுண்டரி

348 / 255

ஏறு உயர்த்தார் திருப்பாற்றுறையும் எறும்பியூர் மாமலையே முதலா
வேறு பதிகள் பலவும் போற்றி விரவும் திருத்தொண்டர் வந்து சூழ
ஈறில் புகழ்ச் சண்பை ஆளியார் தாம் எண் திசையோரும் தொழுது இறைஞ்ச
நீறணி செம்பவளப் பொருப்பின் நெடுங்கள மா நகர் சென்று சேர்ந்தார்

111. திருப்பாற்றுறை பண் - பழந்தக்கராகம்

காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச்செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
ஆரா ராதி முதல்வரே.

112. 349 / 276

மறையுடையாய் தோலுடையாய்

113. 350 / 278

வாரும் மன்னும்

114. 353 / 280

வினவினேன் அறியாமையில்

115. 354 / 283

செப்ப நெஞ்சே

357 / 285

வேத வேதியர் வேதி குடியினில்
நாதர் கோயில் அணைந்து நலம் திகழ்
பாத பங்கயம் போற்றிப் பணிந்து எழுந்து
ஓதினார் தமிழ் வேதத்தின் ஓங்கு இசை

116. **திருவேதிகுடி - திருவிராகம் பண் - சாதாரி**

நீறுவரி ஆடரவொ டாமைமன என்புநிரை பூண்பரிடபம்
ஏறுவரி யாவரும் இறைஞ்சுகழல் ஆதியர் இருந்தவிடமாந்
தாறுவிரி பூகமலி வாழைவிரை நாறவிணை வாளைமடுவில்
வேறுபிரி யாதுவிளை யாடவள மாரும்வயல் வேதிகுடியே

359 / 511

வெண்ணி மேய விடையவர் கோயிலை
நண்ணி நாடிய காதலின் நான் மதிக்
கண்ணியார் தம் கழல் இணை போற்றியே
பண்ணில் நீடும் பதிக முன் பாடினார்

117. **திருவெண்ணியூர் பண் - இந்தளம்**

சடையானைச் சந்திர னோடுசெங் கண்ணரா
உடையானை உடைதலை யிற்பலி கொண்டூரும்
விடையானை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியை
உடையானை யல்லதுள் காதென துள்ளமே

362 / 290

சக்கரப் பள்ளியார் தம் திருக் கோயில் உள்
புக்கு அருத்தியின் உடன் புனை மலர்த் தாள் பணிந்து
அக்கரைப் பரமர்பால் அன்பு உறும் பரிவு கூர்
மிக்க சொல் தமிழினால் வேதமும் பாடினார்

118. **திருச்சக்கரப்பள்ளி பண் - கொல்லி**

படையினார் வெண்மழுப் பாய்புலித் தோலரை
உடையினார் உமையொரு கூறனார் ஊர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினார் உறைவிடஞ் சக்கரப் பள்ளியே

364 / 289

மன்னும் அக்கோயில் சேர் மான் மறிக் கையர்தம்
பொன் அடித்தலம் உறப் புரிவொடும் தொழுது எழுந்து
இன் இசைத் தமிழ் புனைந்து இறைவர் சேல் ஊருடன்
பன்னு பாலைத் துறைப் பதி பணிந்து ஏகினார்

119. **திருப்புள்ளமங்கை - திருஆலந்துறை பண் - நட்டபாடை**

பாலுந்துறு திரளாயின பரமன்பிர மன்தான்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்சூழ்புள மங்கைக்
காலன்திற லறச்சாடிய கடவுள்ளிடங் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை யடையாவினை தானே

369-370 / 294, 296, 297

பரவு சொல் பதிகம் முன் பாடினார் பரிவுதான்
வர அயர்த்து உருகு நேர் மனன் உடன் புறம் அணைந்து
அரவு உடைச் சடையர் பேர் அருள் பெறும் பெருமையால்
விரவும் அப்பதி அமர்ந்து அருளியே மேவினார்

அன்ன தன்மையில் அப்பதியினில் அமர்ந்து அருளி
மின் நெடும் சடை விமலர் தாள் விருப்பொடு வணங்கிப்
பன்னும் இன்னிசைப் பதிகமும் பல முறை பாடி
நல் நெடும் குல நான் மறையவர் தொழ நயந்தார்

120. **திருநல்லூர் பண் - குறிஞ்சி**

கொட்டும் பறைசீராற் குழும அனலேந்தி
நட்டம் பயின்றாடும் நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோதும் முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்கள் அறியார் பாவமே

121. **திருநல்லூர் பண் - காந்தாரம்**

பெண்ணமருந் திருமேனி யுடையீர்பிறங்கு சடைதாழப்
பண்ணமரும் நான்மறையே பாடியாடல் பயில்கின்றீர்
திண்ணமரும் பைம்பொழிலும் வயலுஞ்சூழ்ந்த திருநல்லூர்
மண்ணமருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே

122. **திருநல்லூர் - திருவிராகம் பண் - சாதாரி**

வண்டிரிய விண்டமலர் மல்குசடை தாழவிடை யேறிப்
பண்டெரிகை கொண்டபர மன்பதிய தென்பரத னயலே
நண்டிரிய நாரையிரை தேரவரை மேலருவி முத்தந்
தெண்டிரைகள் மோதவிரி போதுகம ழுந்திருந லூரே

123. 372 / 292

முத்திலங்கு முறுவல்

124. 374 / 507

கொம்பிரிய வண்டுலவு

375 / 509

பழுது இல் சீர்த் திருப் பரிதி நல் நியமும் பனிந்து அங்கு
எழுது மாமறையாம் பதிகத்து இசை போற்றி
முழுதும் ஆனவர் கோயில்கள் வணங்கியே முறைமை
வழுவு இலார் திருப்பூவனூர் வணங்கி வந்து அணைந்து

125. **திருப்பருதிநியமம்** பண் - **பழம்பஞ்சுரம்**

விண்கொண்ட தூமதி சூடிநீடு விரிபுன் சடைதாழப்
பெண்கொண்ட மார்பில்வெண் ணீறுபூசிப் பேணார் பலிதேர்ந்து
கண்கொண்ட சாயலோ டேர்கவர்ந்த கள்வர்க் கிடம்போலும்
பண்கொண்ட வண்டினம் பாடியாடும் பருதிந் நியமமே.

377 / 299

பனியும் அப்பதிப் பசுபதி ஈச்சரத்தின் இனிது இருந்த
மனியை உள் புக்கு வழிபடும் விருப்பினால் வணங்கித்
தனிவு இல் காதலிற் தன் தமிழ் மாலைகள் சாத்தி
அனி விளங்கிய திருநலூர் மீண்டும் வந்து அணைந்தார்

126. **திருஆவூர்ப்பசுபதீச்சரம்** பண் - **நட்டபாடை**

புண்ணியர் பூதியர் பூதநாதர்
புடைபடு வார்தம் மனத்தார்திங்கட்
கண்ணிய ரென்றென்று காதலாளர்
கைதொழு தேத்த இருந்தவூராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி
விரைகமழ் சோலை சுலாவியெங்கும்
பண்ணியல் பாடல றாதஆவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே

127. 382 / 305

விண்டெலாம் மலர

383 / 307, 309
புலன் கொள் இன் தமிழ் போற்றினர் புறத்தினில் அணைந்தே
இலங்கு நீர்ப் பொன்னி சூழ் திருப்பதியினில் இருந்து
நலம் கொள் காதலின் நாதர்தாள் நாள்தொறும் பரவி
வலம் சுழிப் பெருமான் தொண்டர் தம் உடன் மகிழ்ந்தார்

128. **திருவலஞ்சுழி** **பண் - நட்டராகம்**
என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே

129. **திருவலஞ்சுழி** **பண் - பழம்பஞ்சுரம்**
பள்ளம தாய படர்சடைமேற் பயிலுந் திரைக்கங்கை
வெள்ளம தார விரும்பிநின்ற விகிர்தன் விடையேறும்
வள்ளல் வலஞ்சுழி வாணனென்று மருவி நினைந்தேத்தி
உள்ளம் உருக உணருமின்கள் உறுநோ யடையாவே

397 / 302
சென்று அணைந்து திருவாயில் புறத்து இறைஞ்சி உள்புக்கு
வென்றி விடையவர் கோயில் வலம் கொண்டு வெண்
கோட்டுப்
பன்றி கிளைத்து அறியாத பாத தாமரை கண்டு
முன் தொழுது விழுந்து எழுந்து மொழி மாலை போற்றி
இசைத்தார்

130. **திருப்பட்டீச்சரம் - திருவிராகம்** **பண் - சாதாரி**
பாடன்மறை சூடன்மதி பல்வளையோர் பாகமதில்
மூன்றோர்கணையாற்
கூடயெரி யூட்டியெழில் காட்டிநிழல் கூட்டுபொழில்
சூழ்பழையையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி காட்டிவினை வீடுமவரே

131. 402 / 504
சீரார்கழலே தொழுவீர்

403 / 505, 500, 502, 497, 499, 430, 432, 433, 437

பாடும் அரதைப் பெரும் பாழியே முதலாகச்
சேடர் பயில் திருச்சேறை திருநாலூர் குட வாயில்
நாடிய சீர் நறையூர் தென் திருப்புத்தூர் நயந்து இறைஞ்சி
நீடு தமிழ் தொடை புனைந்து அந்நெடு நகரில் இனிது
அமர்ந்தார்

132. **திருஅரதைப்பெரும்பாழி** பண் - **கொல்லி**

பைத்தபாம் போடரைக் கோவணம் பாய்புலி
மொய்த்தபேய் கண்முழக் கம்முது காட்டிடை
நித்தமா கந்நட மாடிவெண் ணீறணி
பித்தர்கோ யில்லர தைப்பெரும் பாழியே

133. **திருச்சேறை - திருவிராகம்** பண் - **சாதாரி**

முறியுறு நிறமல்கு முகிழ்முலை மலைமகள் வெருவமுன்
வெறியுறு மதகரி யதள்பட வுரிசெய்த விறலினர்
நறியுறும் இதழியின் மலரொடு நதிமதி நகுதலை
செறியுறு சடைமுடி யடிகள்தம் வளநகர் சேறையே

134. **திருநாலூர்த்திருமயானம்** பண் - **சீகாமரம்**

பாலூரும் மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும்
மேலூருஞ் செஞ்சடையான் வெண்ணூல்சேர் மார்பினான்
நாலூர் மயானத்து நம்பான்றன் அடிநினைந்து
மாலூருஞ் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே

135. **திருக்குடவாயில்** பண் - **இந்தளம்**

திகழுந் திருமா லொடுநான் முகனும்
புகழும் பெருமான் அடியார் புகல
மகிழும் பெருமான் குடவா யில்மன்னி
நிகழும் பெருங்கோ யில்நிலா யவனே

136. **திருக்குடவாயில்** பண் - **காந்தாரம்**

கலைவாழும் அங்கையீர் கொங்கையாருங் கருங்கூந்தல்
அலைவாழுஞ் செஞ்சடையில் அரவும்பிறையும் அமர்வித்தீர்
குலைவாழை கமுகம்பொன் பவளம்பழுக்குங் குடவாயில்
நிலைவாழுங் கோயிலே கோயிலாக நின்றீரே

137. **திருநறையூர்ச்சித்தீச்சரம்** பண் - **தக்கராகம்**

ஊரு லாவு பலிகொண் டுலகேத்த
நீரு லாவு நிமிர்புன் சடையண்ணல்
சீரு லாவு மறையோர் நறையூரிற்
சேருஞ் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே

138. திருநறையூர்ச்சித்தீச்சரம் **பண் - தக்கேசி**

பிறைகொள்சடையர் புலியினுரியர் பேழ்வாய்நாகத்தர்
கறைகொள்கண்டர் கபாலமேந்துங் கையர்கங்காளர்
மறைகொள்கீதம் பாடச்சேடர் மனையில்மகிழ்வெய்திச்
சிறைகொள்வண்டு தேனார்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே

139. திருநறையூர் **பண் - பியந்தைக்காந்தாரம்**

நேரிய னாகுமல்ல னொருபாலு மேனி
யரியான்மு னாய வொளியான்
நீரியல் காலுமாகி நிறைவானு மாகி
யுறுதீயு மாய நிமலன்
ஊரியல் பிச்சைபேணி யுலகங்க ளேத்த
நல்குண்டு பண்டு சுடலை
நாரியோர் பாகமாக நடமாட வல்ல
நறையூரின் நம்ப னவனே

140. திருஅரிசிற்கரைப்புத்தூர் **பண் - காந்தாரம்**

மின்னுஞ் சடைமேல் இளவெண் திங்கள் விளங்கவே
துன்னுங் கடல்நஞ் சிருள்தோய் கண்டர் தொன்மூதூர்
அன்னம் படியும் புனலார் அரிசில் அலைகொண்டு
பொன்னும் மணியும் பொருதென் கரைமேற் புத்தூரே

404 / 438, 442, 444

அங்கண் இனிது அமரு நாள் அடல் வெள் ஏனத்து உருவாய்
செங்கண் நெடுமால் பணியும் சிவபுரத்துச் சென்று அடைந்து
கங்கைச் சடைக் கரந்தவர் தம் கழல் வணங்கிக் காதலினால்
பொங்குமிசைத் திருப்பதிகம் முன் நின்று போற்றி இசைத்தார்

141. திருச்சிவபுரம் - திருவிராகம் **பண் - நட்டபாடை**

புவம்வளி கனல்புனல் புவிகலை
யுரைமறை திரிகுணம் அமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர்
திகழ்தரும் உயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு
பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர்
செழுநில னினில்நிலை பெறுவரே

142. **திருச்சிவபுரம்** பண் - **வியாழக்குறிஞ்சி**
இன்குர லிசைகெழும் யாழ்முரலத்
தன்கரம் மருவிய சதுரன்நகர்
பொன்கரை பொருபழங் காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே

143. **திருச்சிவபுரம் - திருவிராகம்** பண் - **வியாழக்குறிஞ்சி**
கலைமலி யகலல்குல் அரிவைதன் உருவினன்
முலைமலி தருதிரு வுருவம துடையவன்
சிலைமலி மதில்பொதி சிவபுர நகர்தொழ
இலைநலி வினையிரு மையுமிடர் கெடுமே

144. 407 / 3119
அரவிரிகோடல் நீடலணி

410 / 312
கண்ணாரும் அருமணியைக் காரோணத்து ஆர் அமுதை
நண்ணாதார் புரம் எரித்த நான் மறையின் பொருளானைப்
பண் ஆர்ந்த திருப்பதிகம் பணிந்து ஏத்திப் பிறபதியும்
எண் ஆர்ந்த சீர் அடியார் உடன் பணிவுற்று எழுந்து அருளி

145. **திருக்குடந்தைக்காரோணம்** பண் - **தக்கேசி**
வாரார்கொங்கை மாதோர்பாக மாகவார்சடை
நீரார்கங்கை திங்கள்சூடி நெற்றிஒற்றைக்கண்
கூரார்மழுவொன் றேந்தியந்தண் குழகன்குடமூக்கிற்
காரார்கண்டத் தெண்டோளெந்தை காரோணத்தாரே

411 / 314, 316
திரு நாகேச் சரத்து அமர்ந்த செங்கனகத் தனிக் குன்றை
கரு நாகத்து உரி புனைந்த கன் நுதலைச் சென்று இறைஞ்சி
அருஞானச் செந்தமிழின் திருப்பதிகம் அருள் செய்து
பெரு ஞான சம்பந்தர் பெருகு ஆர்வத்தின் புற்றார்

146. **திருநாகேச்சரம்** பண் - **இந்தளம்**
பொன்னேர் தருமே னியனே புரியும்
மின்னேர் சடையாய் விரைகா விரியின்
நன்னீர் வயல்நா கேச்சர நகரின்
மன்னே யெனவல் வினைமாய்ந் தறுமே

147. திருநாகேச்சரம் பண் - செவ்வழி

தழைகொள்சந்தும் மகிலும் மயில்பீலியுஞ் சாதியின்
பழமுமுந்திப் புனல்பாய் பழங்காவிரித் தென்கரை
நழுவில்வானோர் தொழநல்கு சீர்மல்கு நாகேச்சரத்
தழகர்பாதந் தொழுதேத்த வல்லார்க்கழ காகுமே

148. 413 / 318

ஓடேகலன் உண்பதும்

415 / 318, 321, 322, 324, 326

பரவுறு செந்தமிழ்ப் பதிகம் பாடி அமர்ந்த அப்பதியில்
விரவுவார் திருப்பதிகம் பல பாடி வெண் மதியோடு
அரவு சடைக்கு அணிந்தவர் தம் தாள் போற்றி ஆர்வத்தால்
உரவு திருத் தொண்டருடன் பணிந்து ஏத்தி உறையும் நாள்

149. திருவிடைமருதூர் - திருவிருக்குக்குறள் பண் - குறிஞ்சி

தோடொர் காதினன், பாடு மறையினன்
காடு பேணிநின், றாடு மருதனே

150. திருவிடைமருதூர் பண் - வியாழக்குறிஞ்சி

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொ டிறவுமானான்
அருந்தவ முனிவரொ டால்நிழற்கீழ்
இருந்தவன் வளநகர் இடைமருதே

151. திருவிடைமருதூர் - திருவிராகம் பண் - வியாழக்குறிஞ்சி

நடைமரு திரிபுரம் எரியுண நகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன்
புடைமரு திளமுகில் வளமமர் பொதுளிய
இடைமரு தடையநம் இடர்கெடல் எளிதே

152. திருவிடைமருதூர் - திருவிராகம் பண் - வியாழக்குறிஞ்சி

விரிதரு புலியுரி விரவிய அரையினர்
திரிதரும் எயிலவை புனைகணை யினிலெய்த
எரிதரு சடையினர் இடைமரு தடைவுனல்
புரிதரு மன்னவர் புகழ்மிக வுளதே

153. திருவிடைமருதூர் பண் - காந்தாரம்

பொங்குநூன் மார்பினீர் பூதப்படையீர் பூங்கங்கை
தங்குசெஞ் சடையினீர் சாமவேதம் ஓதினீர்
எங்குமெழிலார் மறையோர்கள் முறையாலேத்த இடைமருதில்
மங்குல்தோய் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே

416 / 328

மருங்கு உள நல் பதிகள் பல பணிந்து மா நதிக்கரை போய்க்
குரங்கு ஆடு துறை அணைந்து குழகனார் குரை கழல்கள்
பெரும் காதலினால் பணிந்து பேணிய இன்னிசை பெருக
அரும் கலை நூல் திருப்பதிகம் அருள் செய்து பரவினார்

154. திருத்தென்குரங்காடுதுறை பண் - இந்தளம்

பரவக் கெடும்வல் வினைபா ரிடஞ்சூழ
இரவிற் புறங்காட் டிடைநின் றெரியாடி
அரவச் சடையந் தணன்மேய அழகார்
குரவப் பொழில்சூழ் குரங்காடு துறையே

155. 424 / 335

இடரினுந் தளரினும்

432 / 333

கொன்றைவார் சடைமுடியரைக் கோழம்பத்து இறைஞ்சி
என்றும் நீடிய இன் இசைப் பதிகம் முன் இயம்பி
மன்று உளார் மகிழ் வைகல் மாடக் கோயில் மருங்கு
சென்று சார்ந்தனர் திருவளர் சிரபுரச் செல்வர்

156. திருக்கோழம்பம் பண் - இந்தளம்

நீற்றானை நீள்சடை மேல்நிறை வுள்ளதோர்
ஆற்றானை அழகமர் மென்முலை யாளையோர்
கூற்றானைக் குளிர்பொழிற் கோழம்பம் மேவிய
ஏற்றானை யேத்துமின் நும்மிடர் ஏகவே

433 / 330

வைகல் நீடு மாடக் கோயில் மன்னிய மருந்தைக்
கைகள் அஞ்சலி கொண்டு தாழ்ந்து எழுந்து கண் அருவி
செய்ய இன் இசைச் செந்தமிழ் மாலைகள் மொழிந்து
நையும் உள்ளத்தர் ஆய்த்திரு நல்லத்தில் நண்ணி

157. **திருவைகன்மாடக்கோயில்** பண் - காந்தாரபஞ்சமம்

துளமதி யுடைமறி தோன்று கையினர்
இளமதி யணிசடை எந்தை யாரிடம்
உளமதி யுடையவர் வைக லோங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே

434 / 331

நிலவு மாளிகைத் திரு நல்லம் நீடு மாமணியை
இலகு சேவடி இறைஞ்சி இன் தமிழ் கொடு துதித்துப்
பலவும் ஈசர் தம் திருப்பதி பணிந்து செல்பவர் தாம்
அலை புனல் திருவழுந்தூர் மாடக் கோயில் அடைந்தார்

158. **திருநல்லம்** பண் - குறிஞ்சி

கல்லால் நிழல்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த
வில்லால் அரண்மூன்றும் வெந்து விழவெய்த
நல்லான் நமையாள்வான் நல்லம் நகரானே

435 / 340

மன்னுமாடம் மகிழ்ந்த வான் பொருளினை வணங்கிப்
பன்னு பாடலில் பதிக இன் இசை கொடு பரவிப்
பொன்னி மா நதிக் கரையினில் மீண்டு போந்து அணைந்து
சொன்னவாறு அறிவார் தமைத் துருத்தியில் தொழுதார்

159. **திருஅழுந்தூர்** பண் - இந்தளம்

தொழுமா றுவல்லார் துயர்தீ ரநினைந்
தெழுமா றுவல்லார் இசைபா டவிம்மி
அழுமா றுவல்லார் அழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா மடம்மன் னினையே

160. 436 / 338

வரைத்தலை பசும்பொன்னோடு

439 / 342, 344

உள்ளம் இன்புற உணர் உறும் பரிவு கொண்டு உருகி
வெள்ளம் தாங்கிய சடையரை விளங்கு சொல் பதிகத்
தெள்ளும் இன்னிசைத் திளைப்பொடும் புறத்து அணைந்து அருளி
வள்ளலார் மற்ற வளம் பதி மருவுதல் மகிழ்ந்தார்

161. **திருமயிலாடுதுறை** பண் - தக்கராகம்

கரவின் றிநன்மா மலர்கொண்டே
இரவும் பகலுந் தொழுவார்கள்
சிரமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா மயிலா டுதுறையே

162. **திருமயிலாடுதுறை-திருவிராகம்** பண் - சாதாரி

ஏனவெயி றாடரவோ டென்புவரி யாமையிவை பூண்டிளைஞராய்க்
கானவரி நீடுழுவை யதளுடைய படர்சடையர் காணியெனலாம்
ஆனபுகழ் வேதியர்கள் ஆகுதியின் மீதுபுகை போகியழகார்
வானமுறு சோலைமிசை மாசுபட மூசுமயி லாடுதுறையே

440 / 351, 347

அத்திருப்பதி அன்று போய் அணிகிளர் சூலங்
கைத்தலப் படை வீரர் செம் பொன் பள்ளி கருதி
மெய்த்த காதலில் விள நகர் விடையவர் பாதம்
பத்தர் தம் உடன் பணிந்து இசைப் பதிகம் முன் பகர்ந்தார்

163. **திருச்செம்பொன்பள்ளி** பண் - தக்கராகம்

மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே

164. **திருவிளநகர்** பண் - காந்தாரம்

ஒளிரிளம்பிறை சென்னிமேல் உடையர் கோவணஆடையர்
குளிரிளம்மழை தவழ்பொழிற் கோலநீர்மல்கு காவிரி
நளிரிளம்புனல் வார்துறை நங்கைகங்கையை நண்ணினார்
மிளிரிளம்பொறி அரவினார் மேயதுவிள நகரதே

442 / 349

பரமர் தம் திருப் பறியலூர் வீரட்டம் பரவி
விரவு காதலின் வேலையின் கரையினை மேவி
அரவு அணிந்தவர் பதி பல அணைந்து முன் வணங்கிச்
சிரபுரத்தவர் திருத்தொண்டர் எதிர் கொளச் செல்வார்

165. **திருப்பறியலூர் திருவீரட்டம்** பண் - மேகராகக்குறிஞ்சி

கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்தன் எனத்தகும் வீரட்டத் தானே

443 / 366

அடியவர்கள் களி சிறப்பத் திருவேட்டக்குடி பணிந்து அங்கு
அலைவாய்ப் போகிக்
கடி கமழும் மலர் பழனக் கழிநாடு அகன் பதிகள் கலந்து
நீங்கிக்
கொடி மதில் சூழ் தரும் புரம் குறுகினார் குண்டர் சாக்கியர்
தம் கொள்கை
படி அறியப் பழுது என்றே மொழிந்து உய்யும் நெறி
காட்டும் பவள வாயர்

166. திருவேட்டக்குடி பண் - பஞ்சமம்

வண்டிரைக்கும் மலர்க்கொன்றை விரிசடைமேல் வரியரவங்
கண்டிரைக்கும் பிறைச்சென்னிக் காபாலி கனைகழல்கள்
தொண்டிரைத்துத் தொழுதிறைஞ்சத் துளங்கொளிநீர்ச்
சுடர்ப்பவளந்
தெண்டிரைக்கண் கொணர்ந்தெறியுந் திருவேட்டக் குடியாரே

167. 447 / 370

மாதர்மடப் பிடியும்

455 / 378

நள்ளாற்றில் எழுந்து அருள நம்பர் திருத்தொண்டர் குழாம்
நயந்து சென்று
கொள்ளாற்றில் எதிர் கொண்டு குலவி உடன் சூழ்ந்து
அணையக் குறுகிக் கங்கைத்
தெள்ளாற்று வேணியர் தம் திருவளர் கோபுரம் இறைஞ்சிச்
செல்வக் கோயில்
உள்ளாற்ற வலம் கொண்டு திருமுன்பு தாழ்ந்து எழுந்தார்
உணர்வின் மிக்கார்

168. திருநள்ளாறு - திருவிராகம் பண் - இந்தளம்

ஏடுமலி கொன்றையர விந்துஇள வன்னி
மாடவல செஞ்சடையெம் மைந்தனிட மென்பர்
கோடுமலி ஞாழல்குர வேறுசுர புன்னை
நாடுமலி வாசமது வீசியநள் ளாறே

169. 456 / 376

போகமார்த்த பூண்முலையாள்

170. 464 / 471

மறையினார் மல்குகாழி

466 / 471

மற்றவர்தம் பெரும் கேண்மை மகிழ்ந்து கொண்டு மால்
அயனுக்கு அரிய பிரான் மருவு தானம்
பற்பலவும் சென்று பணிந்து ஏத்திப்பாடிப் பரமர்
திருத்தொண்டர்குழாம் பாங்கின் எய்தக்
கற்றவர் வாழ் கடல் நாகைக் காரோணத்துக் கண் நுதலைக்
கைதொழுது கலந்த ஓசைச்
சொல் தமிழ் மாலைகள் பாடிச் சில நாள் வைகித் தொழுது
அகன்றார் தோணி புரத் தோன்றலார் தாம்

171. திருக்கடனாகைக்காரோணம் பண் - குறிஞ்சி

புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையுஞ் சடைமேலோர் நகுவெண் டலைசூடி
வினையில் லடியார்கள் விதியால் வழிபட்டுக்
கனையுங் கடல்நாகைக் காரோ ணத்தானே

172. திருநாகைக்காரோணம் பண் - செவ்வழி

கூனல்திங்கட் குறுங்கண்ணி கான்றந்நெடு வெண்ணிலா
வேனற்பூத்தம் மராங்கோதை யோடும்விரா வுஞ்சடை
வானநாடன் னமரர் பெருமாற் கிடமாவது
கானல்வேலி கழிசூழ் கடல்நாகைக் காரோணமே.

467 / 476

கழிக் கானல் மருங்கு அனையும் கடல் நாகை அது நீங்கிக்
கங்கையாற்றுச்
சுழிக் கானல் வேணியர் தம் பதிபலவும் பரவிப் போய்த்
தோகைமார் தம்
விழிக் காவி மலர் பழனக் கீழ் வேளூர் விமலர் கழல்
வணங்கி ஏத்தி
மொழிக் காதல் தமிழ் மாலை புனைந்தருளி அங்கு
அகன்றார் மூதூர் நின்றும்

173. திருக்கீழ்வேளூர் பண் - நட்டராகம்
மின்னு லாவிய சடையினர் விடையினர்
மிளிர்தரும் அரவோடும்
பன்னு லாவிய மறைஒலி நாவினர்
கறையணி கண்டத்தர்
பொன்னு லாவிய கொன்றையந் தாரினர்
புகழ்மிகு கீழ்வேளூர்
உன்னு லாவிய சிந்தையர் மேல்வினை
யோடிட வீடாமே.

471 / 462
போந்து மா மாத்திரர் தம் போர் ஏற்றின் திருமனையில் புகுந்து சிந்தை
வாய்ந்த மாதவர் அவர் தாம் மகிழ்ந்து அருள அமர்ந்து அருளி மதில்கள் மூன்றும்
காய்ந்த மால் விடையார் தம் கணபதீச் சரம் பரவு காதல் கூர
ஏந்து நூல் அணி மார்பர் இன்புற்று அங்கு அன்பருடன் இருந்த நாளில்

174. 470 / 463
பைங்கோட்டு.....

175. திருச்செங்காட்டங்குடி பண் - பழந்தக்கராகம்
நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே

176. 482 / 468
சடையாய் யெனுமால்

177. 486 / 465
அங்கமும் வேதமும்

490 / 455
புக்கு எதிர் தாழ்ந்து விழுந்து எழுந்து பூம் புகலூர் மன்னு புண்ணியரை
நெக்கு உருகும் சிந்தை அன்பு பொங்க நிறை மலர் கண்ணீர் அருவி செய்ய
மிக்க தமிழ்த் தொடை மாலை சாத்தி மேவிய ஏழ் இசை பாடிப் போந்து
திக்கு நிறை சீர் முருகர் முன்பு செல்ல அவர் மடம் சென்று புக்கார்

178. திருப்புகலூர் பண் - செவ்வழி

வெங்கள்விம்மு குழலிளைய ராடவ்வெறி விரவுநீர்ப்
பொங்குசெங்கட் கருங்கயல்கள் பாயும்புக லூர்தனுள்
திங்கள்சூடித் திரிபுரமோ ரம்பாலெரி யூட்டிய
எங்கள்பெம்மான் அடிபரவ நாளும்மிடர் கழியுமே

179. 491 / 459

தொண்டர் தண்கயம்

497 / 452

சொல் பெரு வேந்தரும் தோணி மூதூர் தோன்றல் பின்
காதல் தொடரத் தாமும்
பொன் புகலூர் தொழச் சென்று அணைந்தார் புகலிப்
பிரானும் புரிந்த சிந்தை
விற்குடி வீரட்டம் சென்று மேவி விடையவர் பாதம் பணிந்து
போற்றிப்
பற்பல ஆயிரம் தொண்டரோடும் பாடலன் நான் மறைப்
பாடிப் போந்தார்

180. திருவிற்குடிவீரட்டானம் பண் - நட்டராகம்

வடிகொள் மேனியர் வானமா மதியினர்
நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சடையினர் கொடியினர்
உடைபுலி யதளார்ப்பர்
விடைய தேறும்எம் மானமர்ந் தினிதுறை
விற்குடி வீரட்டம்
அடிய ராகிநின் றேத்தவல் லார்தமை
அருவினை யடையாவே.

181. 497 / 485

பாடலன் நான்மறை

182. 499 / 488

பருக்கையானை மத்தகத்து

500 / 484

பொங்கிய சிந்தை விருப்பின் வெள்ளம் பொழிந்து புவிமேல்
பொலிவது என்ன
எங்கும் குளிர் ஒளி வீசு முத்தின் இலங்கு சிவிகை
இழிந்தருளிச்
செங்கை நிறை மலர் கொண்டு தூவித் திரு இருக்குக் குறள்
பாடி ஏத்தித்
தங்கள் பிரான் அருள் ஆளும் ஆரூர் தனைப் பணிவு
உற்றார் தமிழ் விரகர்

183. திருஆரூர் - திருவிருக்குக்குறள் பண் - குறிஞ்சி

சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே

184. 507 / 490

அந்தமா யுலகாதியுமாயினான்

515 / 540, 541, 545

மல்லல் நீடிய வலிவலம் கோளிலி முதலாத்
தொல்லை நான்மறை முதல்வர்தம் பதிபல தொழுதே
எல்லை யில்திருப்ப திகங்க ளாற்பணிந் தேத்தி
அல்லல் தீர்ப்பவர் மீண்டும்ஆ ரூர்தொழ அணைந்தார்

185. திருவலிவலம் பண் - பழந்தக்கராகம்

ஒல்லையாறி உள்ளமொன்றிக் கள்ளம்ஒழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே உன்றன்நாமம் நாவில்நவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவலமே யவனே

186. திருவலிவலம் - திருவிராகம் பண் - வியாழக்குறிஞ்சி

பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்
ஏவியல் கணைபிணை எதிர்விழி யுமையவள்
மேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலமுறை யிறையே

187. திருக்கோளிலி பண் - பழந்தக்கராகம்

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமங்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே

188. 518 / 487

பவனமாய்ச் சோடையாய்

519 / 450

காழியார் வாழ வந்து அருள் செயும் கவுனியப் பிள்ளையார் தாம்
ஆழியான் அறிஒணா அன்னல் ஆரூர் பணிந்து அரிது செல்வார்
பாழி மால் யானையின் உரி புனைந்தார் பனையூர் பணிந்து
வாழி மாமறை இசைப் பதிகமும் பாடி அப்பதியினில் வைகி

189. திருப்பனையூர் பண் - தக்கராகம்

அரவச் சடைமேல் மதிமத்தம்
விரவிப் பொலிகின் றவனூராம்
நிரவிப் பலதொண் டர்கள்நாளும்
பரவிப் பொலியும் பனையூரே

190. 524 / 455

குறிகலந்த இசை

191. 532 / 389, 386

புல்கு பொன்னிறம்,

192. எரிதர அனல்கையில்

193. 534 / 362

சடையுடை யானும்நெய்

534 / 358, 391

கும்பிடுங் கொள்கையிற் குறிகலந் திசையெனும்
 பதிகமுன் னான பாடல்
தம்பெருந் தலைமையால் நிலைமைசால் பதியதன்
 பெருமைசால் புறவி எம்பி
உம்பரும் பரவுதற் குரியசொற் பிள்ளையா
 ருள்ளமெய்க் காதல் கூர
நம்பர தம் பதிகளா யினவெனைப் பலவுமு
 னன்னியே தொழந யந்தார்

194. **திருஅம்பர்மாகாளம்** பண் - சாதாரி

அடையார் புரம்மூன்றும் அனல்வாய்விழ வெய்து
மடையார் புனலம்பர் மாகா ளம்மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழலேத்தச் சாரா வினைதானே.

195. **திருஅம்பர்மாகாளம்** பண் - சாதாரி

படியுளார் விடையினர் பாய்புலித் தோலினர் பாவநாசர்
பொடிகொள்மா மேனியர் பூதமார் படையினர் பூணநூலர்
கடிகொள்மா மலரிடும் அடியினர் பிடிநடை மங்கையோடும்
அடிகளார் அருள்புரிந் திருப்பிடம் அம்பர்மா காளந்தானே.

535 / 364

பரவி ஏத்திஅங் கரிதினிற் போந்துபார் பரவுசீர் அரசோடு
விரவு நண்புடைக் *குங்கிலி யப்பெருங் கலயர்*தம் மனைமேவிக்
கரையில் காதல்மற் றவர்அமைத் தருளிய விருந்தினி தமர்ந்தங்குச்
சிரபு ரத்தவர் திருமயா னமும்பணிந் திருந்தனர் சிறப்பெய்தி

196. **திருக்கடவூர்மயானம்** பண் - காந்தாரம்

வரிய மறையார் பிறையார் மலையோர் சிலையா வணக்கி
எரிய மதில்கள் எய்தார் எறியு முசலம் உடையார்
கரிய மிடறும் உடையார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவா ரவரெம் பெருமான் அடிகளே.

537 / 360, 393

தக்க அந்தனர் மேவும்அப் பதியினில் தான்தோன்றி மாடத்துச்
செக்கர் வார்சடை அண்ணலைப் பணிந்திசைச் செந்தமிழ்த் தொடை பாடி
மிக்க கோயில்கள் பிறவுடன் தொழுதுபோய் மீயச்சூர் பணிந்தேத்திப்
பக்கம் பாரிடம் பரவநின் றாடுவார் பாம்புர நகர் சேர்ந்தார்

197. திருஆக்கூர் பண் - சீகாமரம்

அக்கிருந்த ஆரமும் ஆடரவும் ஆமையுந்
தொக்கிருந்த மார்பினான் தோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே.

198. திருமீயச்சூர் பண் - காந்தாரம்

காயச் செவ்விக் காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூரன் றறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுமே

538 / 396

பாம்பு ரத்துறை பரமரைப் பணிந்துநற் பதிகஇன் னிசைபாடி
வாம்பு னற்சடை முடியினார் மகிழ்விடம் மற்றுமுள் ஏனபோற்றிக்
காம்பி னில்திகழ் கரும்பொடு செந்நெலின் கழனியம் பணைநீங்கித்
தேம்பொ ழில்திரு வீழிநன் மிழலையின் மருங்குறச் செல்கின்றார்.

199. திருப்பாம்புரம் பண் - தக்கராகம்

சீரணி திகழ்திரு மார்பில் வெண்ணூலர்
திரிபுர மெரிசெய்த செல்வர்
வாரணி வனமுலை மங்கையோர் பங்கர்
மான்மறி யேந்திய மைந்தர்
காரணி மணிதிகழ் மிடறுடை யண்ணல்
கண்ணுதல் விண்ணவ ரேத்தும்
பாரணி திகழ்தரு நான்மறை யாளர்
பாம்புர நன்னக ராரே.

200. 542 / 405

அரையார் விரிகோவண

201. 545 / 401

சடையார் புனலுடையான்

549 / 427, 395
ஓங்குபுனற் பேணு பெருந்துறையும் உள்ளிட்ட
பாங்கார் திலதைப் பதிமுற்ற மும்பணிந்து
வீங்கொலிநீர் வீழி மழலையினில் மீண்டும் அணைந்(து)
ஆங்கினிது கும்பிட் டமர்ந்தொழுகு மந்நாளில்

202. திருப்பேணுபெருந்துறை பண் - தக்கராகம்
பைம்மா நாகம் பன்மலர்க் கொன்றை
பன்றிவெண் கொம்பொன்று பூண்டு
செம்மாந் தையம் பெய்கென்று சொல்லிச்
செய்தொழில் பேணியோர் செல்வர்
அம்மா னோக்கிய அந்தளிர் மேனி
அரிவையோர் பாக மமர்ந்த
பெம்மான் நல்கிய தொல்புக ழாளர்
பேணு பெருந்துறை யாரே

203. திருத்திலதைப்பதி - மதிமுத்தம் பண் - செவ்வழி
பொடிகள்பூசிப் பலதொண்டர் கூடிப்புலர் காலையே
அடிகளாரத் தொழுதேத்த நின்றவ்வழ கன்னிடங்
கொடிகளோங்கிக் குலவும் விழவார்தில தைப்பதி
வடிகொள்சோலைம் மலர்மணங் கமழும்மதி முத்தமே

550 / 403, 406, 409, 411, 414, 416, 418, 419, 421, 422, 424
சேணுயர் மாடப் புகலியுள்ளார்
திருஞான சம்பந்தப் பிள்ளையாரைக்
காணும் விருப்பிற் பெருகுமாசை
கைம்மிகு காதல் கரையிகப்பப்
பூணு மனத்தொடு தோணிமேவும்
பொருவிடை யார்மலர்ப் பாதம்போற்றி
வேணு புரத்தை யகன்றுபோந்து
வீழி மிழலையில் வந்தணைந்தார்.

204. திருவீழிமிழலை - திருவிராகம் பண் - நட்டபாடை
தடநில வியமலை நிறுவியொர் தழலுமிழ் தருபட அரவுகொ
டடல்அசு ரரொடம ரர்கள்அலை கடல்கடை வுழியெழு மிகுசின
விடம்அடை தருமிட றுடையவன் விடைமிசை வரும்மவ னுறைபதி
திடமலிதருமறை முறையுணர் மறையவர் நிறையவர் நிறைதிரு
மிழலையே.

205. **திருவீழிமிழலை** **பண் - குறிஞ்சி**

இரும்பொன் மலைவில்லா எரியம் பாநாணில்
திரிந்த புரமூன்றுஞ் செற்றான் உறைகோயில்
தெரிந்த அடியார்கள் சென்ற திசைதோறும்
விரும்பி யெதிர்கொள்வார் வீழி மிழலையே

206. **திருவீழிமிழலை - திருவிராகம் பண் - வியாழக்குறிஞ்சி**

அலர்மகள் மலிதர அவனியில் நிகழ்பவர்
மலர்மலி குழலுமை தனையிடம் மகிழ்பவர்
நலம்மலி யுருவுடை யவர்நகர் மிகுபுகழ்
நிலமலி மிழலையை நினையவ லவரே

207. **திருவீழிமிழலை** **பண் - மேகராகக்குறிஞ்சி**

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங் கீரிருவர்க் கிரங்கிநின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர் நெறியளித்தோன் நின்றகோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோது மோசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருள்சொல்லும் மிழலையாமே

208. **திருவீழிமிழலை** **பண் - காந்தாரப்பஞ்சமம்**

கேள்வியர் நாடொறும் ஓதும்நல் வேதத்தர் கேடிலா
வேள்விசெய் அந்தணர் வேதியர் வீழிமி ழலையார்
வாழியர் தோற்றமுங் கேடும்வைப் பாருயிர் கட்கெலாம்
ஆழியர் தம்மடி போற்றியென் பார்கட்க ணியரே

209. **திருவீழிமிழலை** **பண் - சாதாரி**

சீர்மருவு தேசினொடு தேசமலி செல்வமறை யோர்கள்பணியத்
தார்மருவு கொன்றையணி தாழ்சடையி னானமர்ச யங்கொள்பதிதான்
பார்மருவு பங்கயமு யர்ந்தவயல் சூழ்பழன நீடருகே
கார்மருவு வெண்கனக மாளிகை கவின்பெருகு வீழிநகரே

210. திருவீழிமிழலை - திருவிராகம் பண் - சாதாரி
மட்டொளி விரிதரு மலர்நிறை சுரிகுழல் மடவரல்
பட்டொளி மணியல்குல் உமையமை யுருவொரு பாகமாக்
கட்டொளிர் புனலொடு கடியர வுடனுறை முடிமிசை
விட்டொளி யுதிர்பிதிர் மதியவர் பதிவிழி மிழலையே

211. திருவீழிமிழலை - திருமுக்கால் பண் - சாதாரி
வெண்மதி தவழ்மதில் மிழலையு ளீர்சடை
ஒண்மதி அணியுடை யீரே
ஒண்மதி அணியுடை யீருமை உணர்பவர்
கண்மதி மிகுவது கடனே

212. திருவீழிமிழலை - ஈரடி பண் - பழம்பஞ்சுரம்
வேவி னேர்தரு கண்ணி னாளுமை பங்க னங்கணன்
மிழலை மாநகர்
ஆல நீழலின் மேவி னானடிக் கன்பர் துன்பிலரே

213. திருவீழிமிழலை - திருவியமகம் பண் - பழம்பஞ்சுரம்
துன்று கொன்றைநஞ் சடையதே தூய கண்டம்நஞ் சடையதே
கன்றின் மானிடக் கையதே கல்லின் மானிடக் கையதே
என்று மேறுவ திடவமே என்னி டைப்பலி யிடவமே
நின்ற தும்மிழலை யுள்ளுமே நீரெனைச் சிறிதும் உள்ளுமே

214. திருவீழிமிழலை பண் - புறநீர்மை
புள்ளித்தோ லாடை பூண்பது நாகம் பூசுசாந் தம்பொடி நீறு
கொள்ளீத்தீ விளக்கு கூளிகள் கூட்டங் காளியைக்
குணஞ்செய்கூத் துடையோன்
அள்ளற் காராமை அகடு வான்மதியம் ஏய்க்கமுட் டாழைக
ளானை
வெள்ளைக்கொம் பீனும் விரிபொழில் வீழி மிழலையா
னெனவினை கெடுமே

215. 557 / 66
மைம்ரு பூங்குழல்

216. 570 / 408
வாசி தீரவே

573 / 448, 495, 494, 492

நீடுதிரு வாஞ்சியத்தில் அமர்ந்த முக்கண்
நீலமிடற்று அருமணியை வணங்கிப் போற்றிப்
பாடொலி நீர்த் தலையாலங்காடு மாடு
பரமர் பெருவேளூரும் பணிந்து பாடி
நாடு புகழ்த் தளிச் சாத்தங் குடியில் நண்ணி
நம்பர் திருக்கர வீரம் நயந்து பாடித்
தேடு மறைக்கு அரியார் தம் விளமர் போற்றித்
திருவாரூர் தொழ நினைந்து சென்று புக்கார்

217. **திருவாஞ்சியம்** **பண் - இந்தளம்**

வன்னி கொன்றை மதமத்தம் எருக்கொடு கூவிளம்
பொன்னி யன்ற சடையிற் பொலிவித்த புராணனார்
தென்ன வென்றுவரி வண்டிசை செய்திரு வாஞ்சியம்
என்னை யாளுடை யானிட மாகவு கந்ததே

218. **திருப்பெருவேளூர்** **பண் - பஞ்சமம்**

அண்ணாவுங் கழுக்குன்றும் ஆயமலையவை வாழ்வார்
விண்ணோரும் மண்ணோரும் வியந்தேத்த அருள்செய்வார்
கண்ணாவார் உலகுக்குக் கருத்தானார் புரமெரித்த
பெண்ஆணாம் பெருமானார் பெருவேளூர் பிரியாரே

219. **திருக்கரவீரம்** **பண் - பழந்தக்கராகம்**

அரியும் நம்வினை யுள்ளன ஆசற
வரிகொள் மாமணி போறக்கண்டங்
கரிய வன்றிக ழுங்கர வீரத்தெம்
பெரிய வன்கழல் பேணவே

220. **திருவிளமர் - திருவிராகம்** **பண் - சாதாரி**

மத்தக மணிபெற மலர்வதோர் மதிபுரை நுதல்கரம்
ஒத்தக நகமணி மிளிர்வதோர் அரவினர் ஒளிகிளர்
அத்தக வடிதொழ அருள்பெறு கண்ணொடும் உமையவள்
வித்தகர் உறைவது விரிபொழில் வளநகர் விளமரே

574 / 538, 479, 481, 536, 543, 534, 532, 526, 529,
நம்பர் மகிழ் திருவாரூர் வணங்கிப் போந்து
நலம் கொள் திருக் காறாயில் நண்ணி ஏத்திப்
பைம் புனல் மென் பணைத்தேவூர் அணைந்து
போற்றிப் பரமர் திருநெல்லிக்காப் பணிந்து பாடி
உம்பர் பிரான் கைச்சினமும் பரவித் தெங்கூர்
ஓங்கு புகழ்த் திருக் கொள்ளிக்காடும் போற்றி
செம் பொன் மதில் கோட்டூரும் வணங்கி ஏத்தித்
திரு மலி வெண் துறை தொழுவான் சென்று சேர்ந்தார்

221. திருக்காறாயில் — பண் - இந்தளம்
நீரானே நீள்சடை மேலொர் நிரைகொன்றைத்
தாரானே தாமரை மேலயன் தான்றொழுஞ்
சீரானே சீர்திக ழுந்திருக் காறாயில்
ஊரானே யென்பவர் ஊனமி லாதாரே

222. திருத்தேவூர் — பண் - காந்தாரம்
பண்ணி லாவிய மொழியுமை பங்கனெம் பெருமான்
விண்ணில் வானவர் கோன்விம லன்விடை யூர்தி
தெண்ணி லாமதி தவழ்தரு மாளிகைத் தேவூர்
அண்ணல் சேவடி அடைந்தனம் அல்லலொன் றிலமே.

223. திருத்தேவூர் - திருவிராகம் — பண் - சாதாரி
காடுபயில் வீடுமுடை யோடுகலன் மூடுமுடை யாடைபுலிதோல்
தேடுபலி யுணதுடை வேடமிகு வேதியர் திருந்துபதிதான்
நாடகம தாடமஞ்ஞை பாடவரி கோடல்கைம்ம றிப்பநலமார்
சேடுமிகு பேடையனம் ஊடிமகிழ் மாடமிடை தேவூரதுவே

224. திருநெல்விக்கா — பண் - இந்தளம்
அறத்தா லுயிர்கா வலமர்ந் தருளி
மறத்தால் மதில்மூன் றுடன்மாண் பழித்த
திறத்தால் தெரிவெய் தியதீ வெண்டிங்கள்
நிறத்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே

225. திருக்கைச்சினம் — பண் - சீகாமரம்
தையலோர் கூறுடையான் தன்மதிசேர் செஞ்சடையான்
மையுலா மணிமிடற்றன் மறைவிளங்கு பாடலான்
நெய்யுலா மூவிலைவே லேந்தி நிவந்தொளிசேர்
கையுடையான் மேவியுறை கோயில் கைச்சினமே

226. திருத்தெங்கூர் பண் - பியந்தைக்காந்தாரம்
புரைசெய் வல்வினை தீர்க்கும் புண்ணியர் விண்ணவர் போற்றக்
கரைசெய் மால்கடல் நஞ்சை உண்டவர் கருதலர் புரங்கள்
இரைசெய் தாரழ லூட்டி யுழல்பவர் இடுபலிக் கெழில்சேர்
விரைசெய் பூம்பொழிற் றெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே

227. திருக்கொள்ளிக்காடு பண் - காந்தாரபஞ்சமம்
நிணம்படு சுடலையின் நீறு பூசிநின்
றிணங்குவர் பேய்களோ டிடுவர் மாநடம்
உணங்கல்வெண் டலைதனில் உண்ப ராயினுங்
குணம்பெரி துடையர்நங் கொள்ளிக் காடரே

228. திருக்கோட்டூர் பண் - நட்டராகம்
நீல மார்தரு கண்டனே நெற்றியோர் கண்ணனே ஒற்றைவிடைச்
சூல மார்தரு கையனே துன்றுபைம் பொழில்கள்சூழ்ந் தழகாய
கோல மாமலர் மணங்கமழ் கோட்டூர்நற் கொழுந்தேயென்
றெழுவார்கள்
சால நீள்தல மதனிடைப் புகழ்மிகத் தாங்குவர் பாங்காலே.

229. திருவெண்டுறை பண் - பஞ்சமம்
ஆதியன் ஆதிரையன் னனலாடிய ஆரழகன்
பாதியோர் மாதினொடும் பயிலும்பர மாபரமன்
போதிய லும்முடிமேற் புனலோடர வம்புனைந்த
வேதியன் மாதிமையால் விரும்பும்மிடம் வெண்டுறையே

575 / 525, 514,
மற்றவ்வூர் தொழுது ஏத்தி மகிழ்ந்து பாடி மால்
அயனுக்கு அரிய பிரான் மருவும் தானம்
பற் பலவும் சென்று பணிந்து ஏத்திப் பாடிப் பரவும்
திருத்தொண்டர் குழாம் பாங்கின் எய்தக்
கற்றவர் வாழ் தண்தலை நீள் நெறி உள்ளிட்ட கனக
மதில் திருக் களரும் கருதார் வேள்வி
செற்றவர் சேர் பதி பிறவும் சென்று போற்றித் திருமறைக்
காட்டு அதன் மருங்கு சேர்ந்தார் அன்றே

230. **திருத்தண்டலைநீணெறி** **பண் - கௌசிகம்**

விரும்புந் திங்களுங் கங்கையும் விம்மவே
சுரும்புந் தும்பியுஞ் சூழ்சடை யார்க்கிடங்
கரும்புஞ் செந்நெலுங் காய்கமு கின்வளம்
நெருங்குந் தண்டலை நீணெறி காண்மினே

231. **திருக்களர்** **பண் - சீகாமரம்**

நீருளார் கயல் வாவி சூழ்பொழில்
  நீண்ட மாவய லீண்டு மாமதில்
தேரினார் மறுகில் விழாமல்கு திருக்களருள்
  ஊரு ளாரிடு பிச்சை பேணும்
ஒருவனே யொளிர் செஞ்ச டைம்மதி
  ஆரநின் றவனே அடைந்தார்க் கருளாயே

232. 587 / 551

சதுரம் மறைதான்

233. 596 / 547

தளிரிள வளரென

598 / 550, 553, 555

சண்பை நாடு உடைய பிள்ளை தமிழ் மொழித் தலைவரோடு
மண் பயில் சீர்த்திச் செல்வ மா மறைக் காட்டு வைகிக்
கண் பயில் நெற்றியார் தம் கழல் இணை பணிந்து போற்றிப்
பண் பயில் பதிகம் பாடிப் பரவி அங்கு இருந்தார் அன்றே

234. **திருமறைக்காடு - திருவிராகம்** பண் - நட்டபாடை

சிலைதனை நடுவிடை நிறுவியொர் சினமலி அரவது கொடுதிவி
தலமலி சுரரசு ரர்களொலி சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ அவருடல் குலைதர வதுநுகர் பவனெழில்
மலைமலி மதில்புடை தழுவிய மறைவனம் அமர்தரு பரமனே

235. **திருமறைக்காடு** **பண் - பியந்தைக்காந்தாரம்**

பொங்கு வெண்மணற் கானற் பொருகடல் திரைதவழ் முத்தங்
கங்கு லாரிருள் போழுங் கலிமறைக் காடமர்ந் தார்தாந்
திங்கள் சூடின ரேனுந் திரிபுரம் எரித்தன ரேனும்
எங்கும் எங்கள் பிரானார் புகழல திகழ்பழி யிலரே

236. திருவேதவனம் (மறைக்காடு) - திருவிராகம்

பண் - சாதாரி

கற்பொலிசு ரத்தினெரி கானினிடை மாநடம தாடிமடவார்
இற்பலிகொ ளப்புகுதும் எந்தைபெரு மானதிடம் என்பர்புவிமேல்
மற்பொலிக லிக்கடன்ம லைக்குவடெ னத்திரைகொ ழித்தமணியை
விற்பொலிநு தற்கொடியி டைக்கணிகை மார்கவரும் வேதவனமே

237. 616 / 743

வேயுறு தோளி பங்கன்

622 / 558

தென் திரை சூழ் கடல் கானல் திரு அகத்தியான்பள்ளி
அண்டர் பிரான் கழல் வணங்கி அருந்தமிழ் மா மறை பாடிக்
கொண்டல் பயில் மணல் கோடு சூழ் கோடிக் குழகர் தமைத்
தொண்டருடன் தொழுது அணைந்தார் தோணிபுரத் தோன்றலார்

238. 2.76 திருஅகத்தியான்பள்ளி பண் - காந்தாரம்

வாடிய வெண்டலை மாலைசூடி வயங்கிருள்
நீடுயர் கொள்ளி விளக்குமாக நிவந்தெரி
ஆடிய எம்பெரு மான்அகத்தியான் பள்ளியைப்
பாடிய சிந்தையி னார்கட்கில்லையாம் பாவமே

623 / 522, 520

கன் ஆர்ந்த திரு நுதலார் மகிழ்ந்த கடிக்குளம் இறைஞ்சி
என் ஆர்ந்த திரு இடும்பா வனம் ஏத்தி எழுந்து அருளி
மன் ஆர்ந்த பதி பிறவும் மகிழ் தரும் அன்பால் வணங்கிப்
பண் ஆர்ந்த தமிழ் பாடிப் பரவியே செல்கின்றார்

239. திருக்கடிக்குளம் பண் - நட்டராகம்

பொடிகொள் மேனிவெண் ணூலினர் தோலினர் புலியுரி யதளாடை
கொடிகொள் ஏற்றினர் மணிகிணின் எனவரு குரைகழல் சிலம்பார்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத் துறையுங்கற் பகத்தைத்தம்
முடிகள் சாய்த்தடி வீழ்தரும் அடியரை முன்வினை மூடாவே.

240. **திருஇடும்பாவனம்** பண் - நட்டபாடை

மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்மிகு குன்றில்
இனமாதவர் இறைவர்க்கிடம் இடும்பாவன மிதுவே.

624 / 518

திரு உசாத் தானத்துத் தேவர் பிரான் கழல் பணிந்து
மருவிய செந்தமிழ்ப் பதிகமால் போற்றும் படி பாடி
இரு வினையும் பற்று அறுப்பார் என் இறந்த தொண்டருடன்
பெருகு விருப்பினர் ஆகிப் பிற பதியும் பணிந்து அருள்வார்

241. **திருஉசாத்தானம்** பண் - கொல்லி

நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
பேருடைச் சுக்கிரீ வன்னநு மன்றொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே

630 / 588

கொடும் குன்றத்து இனிது அமர்ந்த கொழும்பவளச்
செழுங் குன்றை
அடும் குன்றம் உரித்தானை வணங்கி அரும் தமிழ் பாடி
நெடும் குன்றும் படர் கானும் நிறை நாடும் கடந்து மதி
தொடும் குன்ற மதில் மதுரைத் தொன் நகர் வந்து
அணைகின்றார்

242. **திருக்கொடுங்குன்றம்** பண் - நட்டபாடை

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி வைந்தும்மமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே

243. 63 / 580
மங்கையர்க்கரசி

244. 667 / 566
நீலமாமிடற்று

245. 704, 705 / 572
செய்யனே திருவாலவாய்

246. 739, 740 / 570, 575
காட்டுமாவது,

247. வேதவேள்வியை

248. 754 / 151
பிரமனூர் வேணுபுரம்

249. 760 / 569
மானின் நேர் விழி

250. 764 / 567
மந்திரமாவது நீறு

251. 784 / 379
தளிரிள வளரொளி

252. 818 - 844 / 750
வாழ்க அந்தணர்

253. 850 / 587
வன்னியும் மத்தமும்

254. 865, 866 / 574
வீடலாலவாயிலாய்

255. 870/577

திருவிய மகத்துள்ளும் திருநிலகண்ட பாணர்க்கு
அருளிய திறமும் போற்றி அவரோடு மளவளாவித்
தெருளுடைத் தொண்டர் சூழ திருத் தொன்டின் உன்மை நோக்கி
இருள்கெட மண்ணில் வந்தார் இனிதமர்ந்து இருந்தாரன்றே

ஆல நீழலுகந்த திருக்கையே
யான பாடலுகந்த திருக்கையே
பாலின் நேர்மொழி யாலொரு பங்கனே
பாத மோதலர் சேர்புரபங்கனே
கோல நீறணி மேதகு பூதனே
கோதிலார் மனம் மேவிய பூதனே
ஆல நஞ்சமுதுண்ட களத்தனே
ஆலவாயுறை அண்டர்கள் அத்தனே

256. 880, 881 / 138
மண்ணில் நல்ல வண்ணம்

884 / 585

தேன் நிலவு பொழில் மதுரைப் புறத்துப் போந்த
    தென்னவனார் தேவியார் அமைச்சர்சிந்தை
ஊன் நெகிழும் படி அழிந்து அங்கு ஒழுகு கண்ணீர்
    பாய்ந்து இழிய உணர்வு இன்றி வீழக் கண்டே
யான் உம்மைப் பிரியாத வண்ணம் இந் நாட்டு இறைவர்
    பதி எனைப்பலவும் பணிவீர் என்று
ஞானம் உணர்வார் அருள அவரும் போத
    நம்பர் திருப்பரம் குன்றை நண்ணினாரே

257. திருப்பரங்குன்றம் பண் - குறிஞ்சி

நீடலர்சோதி வெண்பிறையோடு நிரைகொன்றை
சூடலன் அந்திச் சுடரெரியேந்திச் சுடுகானில்
ஆடலனஞ்சொல் அணியிழையாளை யொருபாகம்
பாடலன்மேய நன்னகர்போலும் பரங்குன்றே

885 / 583

ஆறு அணிந்தார் தமை வணங்கி அங்குப் போற்றி
    அணி ஆப்பன் ஊரை அணைந்து பணிந்துபாடி
நீறு அணிந்த செல்வர் பதி பிறவும் சேர்ந்து
    நிலவு திருப் பதிகங்கள் நிகழப் பாடிச்
சேறு அணிந்த வயல் பழனக் கழனி சூழ்ந்த
    சிர புரத்து வந்து அருளும் செல்வர் செங்கண்
ஏறு அணிந்த வெல் கொடியார் திருப்புத்தூரை
    எய்தி இறைஞ்சிச் சில நாள் இருந்தார் அன்றே

258. திரு ஆப்பனூர் பண் - குறிஞ்சி

முற்றுஞ் சடைமுடிமேன் முதிரா இளம்பிறையன்
ஒற்றைப் படவரவம் அதுகொண் டரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருஆப்ப னூரானைப்
பற்று மனமுடையார் வினைபற் றறுப்பாரே

259. **திருப்புத்தூர்** பண் - தக்கராகம்

வெங்கள் விம்மு வெறியார் பொழிற்சோலை
திங்க ளோடு திளைக்குந் திருப்புத்தூர்க்
கங்கை தங்கு முடியா ரவர்போலும்
எங்கள் உச்சி உறையும் இறையாரே

886 / 601, 602, 599, 504, 606

பற்றார் தம் புரங்கள் மலைச் சிலையால் செற்ற
பரமனார் திருப்புத்தூர் பணிந்து போந்து
புற்று ஆரும் பணி பூண்ட புனிதனார் தம்
பூவணத்தைப் புக்கு இறைஞ்சிப் புகழ்ந்து பாடிக்
கற்றார்கள் தொழுது ஏத்தும் கானப் பேரும்
கைதொழுது தமிழ் பாடிச் சுழியல் போற்றிக்
குற்றாலம் குறும் பலாக் கும்பிட்டு ஏத்திக்
கூற்று உகைத்தார் நெல்வேலி குறுகினாரே

260. **திருப்பூவணம்** பண் - தக்கேசி

அறையார்புனலு மாமலரும் ஆடரவார்சடைமேல்
குறையார்மதியஞ் சூடிமாதோர் கூறுடையானிடமாம்
முறையால்முடிசேர் தென்னர்சேரர் சோழர்கள்தாம்வணங்குந்
திறையாரொளிசேர் செம்மையோங்குந் தென்திருப்பூவணமே

261. **திருப்பூவணம்** பண் - காந்தாரபஞ்சமம்

மாதமர் மேனிய னாகி வண்டொடு
போதமர் பொழிலணி பூவ ணத்துறை
வேதனை விரவலர் அரணம் மூன்றெய்த
நாதனை யடிதொழ நன்மை யாகுமே

262. **திருக்கானப்பேர்** பண் - கொல்லி

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடுங்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணல்நின்
அடியலால் அடைசரண் உடையரோ அடியரே

263. **திருக்குற்றாலம்** பண் - குறிஞ்சி

வம்பார்குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்
அம்பால்நெய்யோ டாடலமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலு நமரங்காள்

264. திருக்குறும்பலா பண் - காந்தாரம்
திருந்த மதிசூடித் தெண்ணீர் சடைக்கரந்து தேவி பாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல் புரிந்த செல்வர்
இருந்த இடம்வினவில் ஏலங்கமழ் சோலையின் வண்டு
யாழ்செய்
குருந்த மணம்நாறுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற் குறும்ப லாவே

887 / 608,
புண்ணியனார் நெல்வேலி பணிந்து போற்றிப்
புரிசடையார் திருப்பதிகள் பிறவும் சென்று
நண்ணி இனிது அமர்ந்து அங்கு நயந்து பாடி
நல்தொண்டர் உடன் நாளும் போற்றிச் செல்வார்
விண்ணவரை செற்று உகந்தான் இலங்கை செற்ற
மிக்க பெரும் பாதகத்தை நீக்க வேண்டித்
திண்ணிய பொன் சிலைத் தடக்கை இராமன் செய்த
திரு இராமேச் சுரத்தைச் சென்று சேர்ந்தார்

265. திருநெல்வேலி பண் - சாதாரி
மருந்தவை மந்திரம் மறுமைநன் னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதர
துன்றுபைம்பூஞ்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே லியுறை செல்வர்தாமே.

888 / 594, 595
செங்கண் மால் வழிபட்ட கோயில் நண்ணித்
திருமுன்பு தாழ்ந்து எழுந்து தென்ன னோடு
மங்கையர்க்கு நாயகியார் தாமும் மெய்ம்மை
மந்திரியாரும் சூழ் மணி நீள் வாயில்
பொங்கி எழும் விருப்பினால் உடனே புக்குப்
புடை வலம் கொண்டு உள் அணைவார் போற்றி செய்து
பங்கயச் செங்கை குவித்துப் பணிந்து நின்று
பாடினார் மன்னவனும் பரவி ஏத்த

266. திருஇராமேச்சுரம் பண் - காந்தாரபஞ்சமம்
அலைவளர் தண்மதி யோடய லேயடக் கியுமை
முலைவளர் பாகமு யங்கவல் லமுதல் வன்முனி
இலைவளர் தாழைகள் விம்முகா னல்இரா மேச்சுரம்
தலைவளர் கோலநன் மாலையன் தானிருந் தாட்சியே

267. திருஇராமேச்சுரம் பண் - பழம் பஞ்சுரம்

திரிதரு மாமணி நாகமாடத் திளைத்தொரு தீயழல்வாய்
நரிகதிக்க எரி யேந்தியாடும் நலமே தெரிந்துணர்வார்
எரிகதிர் முத்தம் இலங்குகானல் இராமேச் சுரமேய
விரிகதிர் வெண்பிறை மல்குசென்னி விமலர் செயுஞ்செயலே

890 / 560, 563

அந்நகரில் அமர்ந்து அங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்து ஒலிக்கும் ஈழம் தன்னில்
மன்னு திருக்கோண மலை மகிழ்ந்த செம் கண் மழ
விடையார் தமைப் போற்றி வணங்கிப்பாடிச்
சென்னி மதி புனை மாடம் மா தோட்டத்தில்
திருக் கேதீச் சரத்து அன்னல் செய்ய பாதம்
உன்னி மிகப் பணிந்து ஏத்தி அன்பரோடும்
உலவாத கிழி பெற்றார் உவகை உற்றார்

268. திருக்கோணமாமலை பண் - புறநீர்மை

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும் நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும் அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங் கோணமா மலையமர்ந் தாரே.

269. 2.107 திருக்கேதீச்சரம் பண் - நட்டராகம்

விருது குன்றமா மேருவில் நாணா வாவனல் எரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளுங்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டங்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே.

891 / 597, 592

அப் பதியைத் தொழுது வடதிசை மேல் செல்வார்
அங்கை அனல் தரித்த பிரான் அமரும் கோயில்
புக்கு இறைஞ்சிப் பல பதியும் தொழுது போற்றிப்
புணரி பொரு தலை கரைவாய் ஒழியப் போந்தே
செப்ப ரிய புகழ்த் திருவாடானை சேர்ந்து
செந்தமிழ் மாலைகள் சாத்திச் சிவனார் மன்னும்
ஒப்பரிய புனவாயில் போற்றி செய்து
வணங்கினார் உலகு உய்ய ஞானம் உண்டார்

270. திருஆடானை பண் - நட்டராகம்

மாதோர் கூறுகந் தேற தேறிய
ஆதியா னுறை ஆடானை
போதினாற் புனைந் தேத்து வார்தமை
வாதியா வினை மாயுமே

271. திருப்புனவாயில் பண் - காந்தாரபஞ்சமம்

மின்னியல் செஞ்சடை வெண்பிறை யன்விரி நூலினன்
பன்னிய நான்மறை பாடியா டிப்பல வூர்கள்போய்
அன்னம்அன் னந்நடை யாளொ டும்மம ரும்மிடம்
புன்னைநன் மாமலர் பொன்னுதிர்க் கும்புன வாயிலே

896 / 512
பொன்னி வளம் தரு நாடு புகுந்து மிக்க
பொருவில் சீர்த் திருத் தொண்டர் குழாத்தினோடும்
பன்னகப் பூண் அணிந்தவர் தம் கோயில் தோறும்
பத்தர் உடன் பதி உள்ளோர் போற்றச் சென்று
கன்னி மதில் திருக்களரும் போற்றிக் கண்டம்
கறை அணிந்தார் பாதாள ஈச்சுரமும் பாடி
முன் அணைந்த பதி பிறவும் பணிந்து போற்றி முள்ளிவாய்க்
கரை அணைந்தார் முந்நூல் மார்பர்

272. திருப்பாதாளீச்சரம் பண் - வியாழக்குறிஞ்சி

மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும்மதி மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினான் புனல்சூடிப் பொற்பமரும்
அன்னம் அனநடையாள் ஒருபாகத் தமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினான் உறைகோயில் பாதாளே

273. 898 / 531
கொட்டமே கமழும்

274. 902 / 373
பாடக மெல்லடி

904 / 368

சீர் நிலவு திருத்தெளிச் சேரியினைச் சேர்ந்து
சிவபெருமாள் தனைப் பரவிச் செல்லும் போது
சார்வு அறியாச் சாக்கியர்தம் போதி மங்கை
சார்தலும் மற்ற அது அறிந்த சைவர் எல்லாம்
ஆர் கலியின் கிளர்ச்சி எனச் சங்கு தாரை
அளவு இறந்த பல்லியங்கள் முழக்கி ஆர்த்துப்
பார் குலவு தனக் காளம் சின்னம் எல்லாம் பர சமய
கோள் அரி வந்தான் என்று ஊத

275. திருத்தெளிச்சேரி பண் - இந்தளம்

பூவ லர்ந்தன கொண்டுமுப் போதும்ம் பொற்கழல்
தேவர் வந்து வணங்கு மிகுதெளிச் சேரியீர்
மேவ ருந்தொழி லாளொடு கேழற்பின் வேடனாம்
பாவ கங்கொடு நின்றது போலுநும் பான்மையே

949 / 227, 229, 236

மாடு புனல் பொன்னி இழிந்து வட கரையில்
நீடு திரு நெய்த்தானம் ஐயாறு நேர்ந்து இறைஞ்சிப்
பாடு தமிழ் மாலைகளும் சாத்திப் பரவிப் போய்
ஆடல் புரிந்தார் திருப் பழனம் சென்று அணைந்தார்

276. திரு ஐயாறு பண் - தக்கராகம்

கலையார் மதியோ டுரநீரும்
நிலையார் சடையா ரிடமாகும்
மலையா ரமுமா மணிசந்தோ
டலையார் புனல்சே ருமையாறே

277. திருவையாறு - திருவிராகம்

பண் - வியாழக்குறிஞ்சி

பணிந்தவர் அருவினை பற்றறுத் தருள்செயத்
துணிந்தவன் தோலொடு நூல்துதை மார்பினில்
பிணிந்தவன் அரவொடு பேரெழி லாமைகொண்
டணிந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே

278. திருவையாறு - திருவிராகம் பண் - இந்தளம்

திருத்திகழ் மலைச்சிறுமி யோடுமிகு தேசர்
உருத்திகழ் எழிற்கயிலை வெற்பிலுறை தற்கே
விருப்புடைய அற்புத ரிருக்குமிட மேரார்
மருத்திகழ் பொழிற்குலவு வண்டிருவை யாறே

279.954 / 164

உற்றுமை சேர்வது

962 / 647

செல்வம் மல்கிய தில்லை மூதூரினில் திரு நடம் பணிந்து ஏத்திப்
பல் பெரும் தொண்டர் எதிர் கொளப் பரமர் தன் திருத்தினை நகர் பாடி
அல்கு தொண்டர்கள் தம்முடன் திருமாணிக் குழியினை அணைந்து ஏத்தி
மல்கு வார் சடையார் திருப் பாதிரிப் புலியூரை வந்து உற்றார்

280. திருமாணிகுழி - திருவிராகம் பண் - சாதாரி

பொன்னியல் பொருப்பரையன் மங்கையொரு பங்கர்புனல் தங்குசடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல் வித்தகர் மகிழ்ந்துறைவிடங்
கன்னியிள வாளைகுதி கொள்ளவிள வள்ளைபடர் அள்ளல்வயல்வாய்
மன்னியிள மேதிகள் படிந்துமனை சேருதவி மாணிகுழியே

281.963 / 650

முன்னம் நின்ற முடக்கால்

963 / 645

கன்னி மாவனம் காப்பு என இருந்தவர் கழல் இணை பணிந்து அங்கு
முன்ன மா முடக்கு கான் முயற்கு அருள் செய்த வண்ணமும் மொழிந்து ஏத்தி
மன்னுவார் பொழில் திரு வடுகூரினை வந்து எய்தி வணங்கிப்போய்
பின்னுவார் சடையார் திருவக்கரை பிள்ளையார் அணைவுற்றார்

282. திருவடுகூர் பண் - குறிஞ்சி

சுடுகூ ரெரிமாலை யணிவர் சுடர்வேலர்
கொடுகூர் மழுவாளொன் றுடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமங் கவலை பிணியில்லார்
வடுகூர் புனல்சூழ்ந்த வடுகூ ரடிகளே

964 / 717, 721

வக்கரைப் பெருமான் தனை வணங்கி அங்கு அமரும்
நாள் அருளாலே
செக்கர் வேணியார் இரும்பை மாகாளமும் சென்று தாழ்ந்து
உடன் மீண்டு
மிக்க சீர் வளர் அதிகை வீரட்டானம் மேவுவார் தம் முன்பு
தொக்க மெய்த் திருத்தொண்டர் வந்து எதிர் கொளத்
தொழுது எழுந்து அணைவுற்றார்

283. திருவக்கரை பண் - பஞ்சமம்

கறையணி மாமிடற்றான் கரிகாடரங் காவுடையான்
பிறையணி கொன்றையினான் ஒருபாகமும் பெண்ணமர்ந்தான்
மறையவன் தன்றலையிற் பலிகொள்பவன் வக்கரையில்
உறைபவன் எங்கள்பிரான் ஒலியார்கழல் உள்குதுமே

284. திரு இரும்பைமாகாளம் பண் - செவ்வழி

மண்டுகங்கை சடையிற் கரந்தும் மதிசூடிமான்
கொண்டகையாற் புரம்மூன் றெரித்த குழகன்னிடம்
எண்டிசையும் புகழ்போய் விளங்கும் இரும்பைதனுள்
வண்டுகீதம் முரல்பொழில் சுலாய்நின்ற மாகாளமே

285. 965 / 625

குண்டை குறட்பூதம்

286. 967 / 656

குன்றவார் சிலை

967 / 654

சென்று அணைந்து சிந்தையின் மகிழ் விருப்பொடு திகழ்
திருவாமாத்தூர்ப்
பொன்ற யங்கு பூங்கொன்றையும் வன்னியும் புனைந்தவர்
அடி போற்றிக்
குன்ற வார் சிலை எனும் திருப்பதிகம் மெய் குலவிய
இசை பாடி
நன்றும் இன்புறப் பணிந்து செல்வார் திருக்கோவலூர் நகர்
சேர்ந்தார்

287. திருஆமாத்தூர் பண் - சீகாமரம்

துன்னம் பெய் கோவண முந்தேலூமுடையாடை
பின்னஞ்சடை மேலோர் பிள்ளை மதி சூடி
அன்னஞ்சேர் தண்கானல் ஆமாத்தூர் அம்மான் தன்
பொன்னங்கழல் பரவாப் பொக்கமும் பொக்கமே

968 / 641, 643

கோவல் நீடிய வீரட்டம் அமர்ந்தவர் குரை கழல் பணிந்து ஏத்தி
ஆவின் ஐந்து உகந்து ஆடுவார் அறை அணி நல்லூரை அணைந்து ஏத்தி
பா அலர்ந்த செந்தமிழ் கொடு பரவுவார் பரவு சீர் அடியார்கள்
மேவும் அன்புறு மேன்மையாம் தன்மையை விளங்கிட அருள் செய்தார்

288. திருக்கோவலூர் வீரட்டம் - திருவிராகம்
பண் - நட்டராகம்

படைகொள்கூற்றம் வந்துமெய்ப் பாசம்விட்ட போதின்கண்
இடைகொள்வா ரெமக்கிலை யெழுகபோது நெஞ்சமே
குடைகொள்வேந்தன் மூதாதை குழகன்கோவ லூர்தனுள்
விடையதேறுங் கொடியினான் வீரட்டானஞ் சேர்துமே

289. திருஅறையணிநல்லூர் பண் - காந்தாரம்

பீடினாற்பெரி யோர்களும் பேதைமைகெடத் தீதிலா
வீடினாலுயர்ந் தார்களும் வீடிலாரிள வெண்மதி
சூடினார்மறை பாடினார் சுடலைநீறணிந் தாரழல்
ஆடினாரறை யணிநல்லூர் அங்கையால்தொழு வார்களே

290. 970 / 658

உண்ணாமுலை உமையாளொடும்

291. 972 / 660

பூவார் மலர்கொண்டு

292. 980 / 676

குரும்பை ஆண்பனை

984 / 673
அங்கண் அமரர் பெருமானைப் பணிந்து போந்து ஆடு
அரவின் உடன்
பொங்கு கங்கை முடிக்கு அணிந்தார் மகிழும் பதிகள்
பல போற்றி
மங்கை பாகர் அமர்ந்து அருளும் வயல் மாகறலை வழுத்திப்
போய்க்
கொங்கு மலர் நீர்க் குரங்கணி முட்டத்தைச் சென்று குறுகினார்

293. திருமாகறல் - திருவிராகம் பண் - சாதாரி
விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை யாடல்அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி நீடுபொழில் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி
செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள் தீருமுடனே.

985 / 671
ஆதி முதல்வர் குரங்கணின் முட்டத்தை அணைந்து பணிந்து
ஏத்தி
நீதி வாழும் திருத்தொண்டர் போற்ற நிகரில் சண்பையினில்
வேதமோடு சைவ நெறி விளங்க வந்த கவுணியனார்
மாதோர் பாகர் தாம் மன்னும் மதில் சூழ் காஞ்சி மருங்கு
அணைந்தார்

294 1.31 திருக்குரங்கணில்முட்டம் பண் - தக்கராகம்
விழுநீர்மழு வாள்படை அண்ணல் விளங்குங்
கழுநீர்குவ ளைம்மல ரக்கயல் பாயுங்
கொழுநீர்வயல் சூழ்ந்த குரங்கணின் முட்டந்
தொழுநீர்மையர் தீதுறு துன்ப மிலரே

295. 995 / 663
மறையானை மாசிலாப்

999 / 662, 665, 666
திரு ஏகம்பத்து அமர்ந்த செழும் சுடரைச் சேவடியில்
ஒரு போதும் தப்பாதே உள் உருகிப் பணிகின்றார்
மருவு திரு இயமகமும் வளர் இருக்குக் குறள் மற்றும்
பெருகும் இசைத் திருப்பதிகத் தொடை புனைந்தார்
பிள்ளையார்

296. திருவேகம்பம் பண் - மேகராகக்குறிஞ்சி

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின்விரி நூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற அணங்கினொ டாடல்புரி
எந்தை மேவிய ஏகம்பந்தொழு தேத்த இடர்கெடுமே

297. திருவேகம்பம் - திருவிருக்குக்குறள் பண் - கொல்லி

கருவார் கச்சித், திருவே கம்பத்
தொருவா வென்ன, மருவா வினையே

298. 3.114 திருவேகம்பம் - திருஇயமகம்

பண் - பழம்பஞ்சுரம்

பாயுமால்விடை மேலொரு பாகனே பாவைதன்னுரு மேலொரு பாகனே
தூயவானவர் வேதத் துவனியே சோதிமாலெரி வேதத் துவனியே
ஆயுநன்பொருள் நுண்பொரு ளாதியே ஆலநீழல் அரும்பொரு ளாதியே
காயவின்மதன் பட்டது கம்பமே கண்ணுதற்பர மற்கிடங் கம்பமே

1000 / 669

நீடு திருப் பொலி காஞ்சி நெறிக்காரைக் காடு இறைஞ்சிச்
சூடு மதிக் கண்ணியார் துணை மலர்ச் சேவடி பாடி
ஆடும் அவர் இனிது அமரும் அனே கதங்கா வதம் பரவி
மாடு திருத் தானங்கள் பணிந்து ஏத்தி வைகும் நாள்

299. திருக்கச்சிநெறிக்காரைக்காடு பண் - பஞ்சமம்

வாரணவு முலைமங்கை பங்கினராய் அங்கையினிற்
போரணவு மழுவொன்றங் கேந்திவெண் பொடியணிவர்
காரணவு மணிமாடங் கடைநவின்ற கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே

1002 / 679, 681

அப்பதியில் விருப்பினோடும் அங்கணரை பணிந்து அமர்வார்
செப்பரிய புகழ்ப் பாலித் திரு நதியின் தென் கரை போய்
மைப் பொலியும் கண்டர் திருமால் பேறு மகிழ்ந்து இறைஞ்சி
முப்புரம் செற்றவர் தம்மை மொழி மாலை சாத்தினார்

300. திருமாற்பேறு பண் - பழந்தக்கராகம்

ஊறி யார்தரு நஞ்சினை யுண்டுமை
நீறு சேர்திரு மேனியர்
சேறு சேர்வயல் தென்திரு மாற்பேற்றின்
மாறி லாமணி கண்டரே

301. திருமாற்பேறு பண் - வியாழக்குறிஞ்சி

குருந்தவன் குருகவன் கூர்மையவன்
பெருந்தகை பெண்ணவன் ஆணுமவன்
கருந்தட மலர்க்கண்ணி காதல்செய்யும்
மருந்தவன் வளநகர் மாற்பேறே

1003 / 678

திருமால் பேறு உடையவர் தம் திரு அருள் பெற்று எழுந்து அருளிக்
கருமாலும் கருமாவாய் காண்பரிய கழல் தாங்கி
மரு ஆற்றல் மழவிடையார் திருவல்லம் வணங்கித் தம்
பெருமாற்கு திருப்பதிகப் பெரும் பிணையல் அணிவித்தார்

302. திருவல்லம் பண் - வியாழக்குறிஞ்சி

எரித்தவன் முப்புரம் எரியில்மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவன் உறைவிடந் திருவல்லமே

1004 / 684

அங்கு உள்ள பிற பதியில் அரிக்கு அரியார் கழல் வணங்கிப்
பொங்கு புனல் பாலியாற்றின் புடையில் வடபால் இறைவர்
எங்கும் உறை பதி பணிவார் இலம்பை அம் கோட்டூர் இறைஞ்சிச்
செங்கண் விடை உகைத்தவரைத் திருப்பதிகம் பாடினார்

303. திரு இலம்பையங்கோட்டூர் பண் - குறிஞ்சி

மலையினார் பருப்பதந் துருத்தி மாற்பேறு
  மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தானம்
நிலையினான் எனதுரை தனதுரை யாக
  நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்
கலையினார் மடப்பிணை துணையொடுந் துயிலக்
  கானலம் பெடைபுல்கிக் கணமயி லாலும்
இலையினார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
  இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே.

1005 / 687, 683

திருத்தொண்டர் பலர் சூழ திரு வில் கோலமும் பணிந்து
பொருட் பதிகத் தொடை மாலை புரம் எரித்த படி பாடி
அருள் புகலி ஆண் தகையார் தக்கோலம் அணைந்து
அருளி
விருப்பினோடும் திருவூறல் மேவினார் தமைப் பணிந்தார்

304. திருவிற்கோலம் பண் - காந்தாரபஞ்சமம்

உருவினார் உமையொடும் ஒன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவிவா னவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினான் உறைவிடந் திருவிற் கோலமே

305. திருஊறல் பண் - வியாழக்குறிஞ்சி

மாறில் அவுணரரணம் மவைமாயவோர் வெங்கணையா லன்று
நீறெழ எய்தவெங்கள் நிமலன் இடம்வினவில்
தேறல் இரும்பொழிலும் திகழ்செங்கயல் பாய்வயலுஞ் சூழ்ந்த
ஊறல் அமர்ந்தபிரான் ஒலியார்கழல் உள்குதுமே

306. 1010 / 689

துஞ்சவருவாரும்

307. 1012 / 691

சிந்தை இடையார் தலையின்

308. 1020 / 696

வானவர்கள் தானவர்கள்

1026 / 733, 735, 732

அங்கண் வடதிசை மேலும் குடக்கின் மேலும்
அரும் தமிழின் வழக்கு அங்கு நிகழாது ஆக
திங்கள் புனை முடியார் தம் தானம் தோறும் சென்று
தமிழ் இசை பாடும் செய்கை போல
மங்கை உடன் வானவர்கள் போற்றி இசைப்ப வீற்று
இருந்தார் வட கயிலை வணங்கிப் பாடி
செம் கமல மலர் வாவித் திருக்கேதாரம் தொழுது
திருப்பதிக இசை திருந்தப் பாடி

309. **திருக்கயிலாயம்** **பண் - தக்கேசி**
பொடிகொளுருவர் புலியினதளர் புரிநூல்திகழ்மார்பில்
கடிகொள்கொன்றை கலந்தநீற்றர் கறைசேர்கண்டத்தர்
இடியகுரலால் இரியுமடங்கல் தொடங்குமுனைச்சாரல்
கடியவிடைமேற் கொடியொன்றுடையார் கயிலைமலையாரே

310. **திருக்கயிலாயம் - திருவிராகம்** **பண் - சாதாரி**
வாளவரி கோளபுலி கீளதுரி தாளின்மிசை நாளுமகிழ்வர்
ஆளுமவர் வேளநகர் போளயில கோளகளி றாளிவரவில்
தோளமரர் தாளமதர் கூளியெழ மீளிமிளிர் தூளிவளர்பொன்
காளமுகில் மூளுமிருள் கீளவிரி தாளகயி லாயமலையே

311. **திருக்கேதாரம்** **பண் - செவ்வழி**
தொண்டரஞ்சுங் களிறு மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே

1027 / 723, 726, 728
கூற்றுதைத்தார் மகிழ்ந்த கோ கரணம் பாடிக்
குலவு திருப் பருப்பதத்தின் கொள்கைபாடி
ஏற்றின் மிசை வருவார் இந்திரன் தன் நீல
பருப்பதமும் பாடி மற்று இறைவர் தானம்
போற்றிய சொல் மலர் மாலை பிறவும் பாடிப்
புகலியார் தம் பெருந் தகையார் புனிதம் ஆகும்
நீற்றின் அணி கோலத்துத் தொண்டர் சூழ நெடிது மகிழ்ந்து
அப்பதியில் நிலவுகின்றார்

312. **திருக்கோகரணம் - திருவிராகம்** **பண் - சாதாரி**
என்றுமரி யானயல வர்க்கியலி சைப்பொருள்க ளாகியெனதுள்
நன்றுமொளி யானொளிசி றந்தபொன்மு டிக்கடவுள்
நண்ணுமிடமாம்
ஒன்றிய மனத்தடியர் கூடியிமை யோர்பரவு நீடரவமார்
குன்றுகள் நெருங்கிவிரி தண்டலை மிடைந்துவளர் கோகரணமே

313. **திருப்பருப்பதம்** **பண் - வியாழக்குறிஞ்சி**
சுடுமணி யுமிழ்நாகஞ் சூழ்தர அரைக்கசைத்தான்
இடுமணி யெழிலானை யேறலன் எருதேறி
விடமணி மிடறுடையான் மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே.

314. திரு இந்திரநீலப்பருப்பதம் பண் - இந்தளம்

குலவு பாரிடம் போற்ற வீற்றிருந்
திலகு மான்மழு வேந்தும் அங்கையன்
நிலவும் இந்திர நீலப் பர்ப்பதத்
துலவி னான்அடி யுள்க நல்குமே

315. 1028 / 695

சந்தமார் அகிலொடு

1030 / 703, 701

திருவேற்காடு அமர்ந்த செழும் சுடர் பொற் கோயில்
சென்று அணைந்து பணிந்து திருப்பதிகம் பாடி
வரு வேற்று மனத்து அவுணர் புரங்கள் செற்றார்
வலிதாயம் வந்து எய்தி வணங்கிப் போற்றி
உரு வேற்றார் அமர்ந்து உறையும் ஓத வேலை ஒற்றியூர்
கை தொழச் சென்று உற்ற போது
பெரு வேட்கை தருவாழ்வு பெற்ற தொண்டர் பெரும்
பதியோர் எதிர் கொள்ளப் பேணி வந்தார்

316. திருவேற்காடு பண் - பழந்தக்கராகம்

ஒள்ளி துள்ளக் கதிக்கா மிவனொளி
வெள்ளி யானுறை வேற்காடு
உள்ளி யாருயர்ந் தாரிவ் வுலகினில்
தெள்ளி யாரவர் தேவரே.

317. திருவலிதாயம் பண் - நட்டபாடை

பத்தரோடுபல ரும்பொலியம்மலர் அங்கைப்புனல் தூவி
ஒத்தசொல்லிஉல கத்தவர்தாம்தொழு தேத்தஉயர் சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறை கின்றவலி தாயஞ்
சித்தம்வைத்தஅடி யாரவர்மேல்அடை யாமற்றிடர் நோயே

318. 1031 / 699

விடையவன் விண்ணும் மண்ணும்

319. 1088, 1090 / 704

மட்டிட்ட புன்னை
உரிஞ்சாய வழ்க்கை

1123 / 706

தாழ்ந்து பல முறை பணிந்து தம்பிரான் முன் நின்று
வாழ்ந்து களிவரப் பிறவி மருந்தான பெருந் தகையைச்
சூழ்ந்த இசைத் திருப்பதிகச் சொல் மாலை வினா உரையால்
வீழ்ந்த பெரும் காதலுடன் சாத்தி மிக இன்புற்றார்

320. **2.4 திருவான்மியூர்** **பண் - இந்தளம்**

கரையு லாங்கட லிற்பொலி சங்கம்வெள் ளிப்பிவன்
திரையு லாங்கழி மீனுக ளுந்திரு வான்மியூர்
உரையு லாம்பொரு ளாயுல காளுடை யீர்சொலீர்
வரையு லாமட மாதுட னாகிய மாண்பதே

1125 / 708

அங்கண் அமர்வார் உலகு ஆள் உடையாரை அரும் தமிழின்
பொங்கும் இசைப் பதிகங்கள் பல போற்றிப் போந்து அருளிக்
கங்கை அணி மணி முடியார் பதி பலவும் கலந்து இறைஞ்சிச்
செங்கண் விடைக் கொடியார் தம் இடைச் சுரத்தைச் சேர் வுற்றார்

321. **திருவான்மியூர்** **பண் - கௌசிகம்**

விரையார் கொன்றையினாய் விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழாய் உமைநங்கையோர் பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மி யூருறையும்
அரையா வுன்னையல்லா லடையாதென தாதரவே

322. 1128 / 710
வரிவளரவிரொளி

323. 1131 / 713
தோடுடையான் ஒரு காதில்

324. 1133 / 714
பொன்றிரண்டன்ன

1135 / 719, 652

அரசிலியை அமர்ந்து அருளும் அங்கண் அரசைப் பணிந்து
பரசி எழு திருப் புறவார் பனம் காட்டூர் முதலாய
விரை செய் மலர்க் கொன்றையினார் மேவு பதி பல வணங்கித்
திரை செய் நெடும் கடல் உடுத்த திருத்தில்லை நகர் அணைந்தார்

325. **திருஅரசிலி** **பண் - பியந்தைக்காந்தாரம்**
பாடல் வண்டறை கொன்றை பால்மதி பாய்புனற் கங்கை
கோடல் கூவிள மாலை மத்தமுஞ் செஞ்சடைக் குலாவி
வாடல் வெண்டலை மாலை மருவிட வல்லியந் தோல்மேல்
ஆடல் மாசுணம் அசைத்த அடிகளுக் கிடம்அர சிலியே.

326. **திருப்புறவார்பனங்காட்டூர்** **பண் - சீகாமரம்**
விண்ண மர்ந்தன மும்ம தில்களை
வீழ வெங்கணை யாலெய் தாய்விரி
பண்ணமர்ந் தொலிசேர் புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ண மர்ந்தொரு பாக மாகிய
பிஞ்ஞ காபிறை சேர்நு தலிடைக்
கண்ண மர்ந்தவ னேகலந்தார்க் கருளாயே

327. 1147 / 470
வண்டார்குழல் அரிவையொடு

328. 1148 / 115
நம்பொருள் நம்மக்கள்

329. 1245 / 13
கல்லூர் பெருமணம்

330. 1248 / 748
காதலாகிக் கசிந்து

சேக்கிழார் குறிப்பிடாத தலப் பதிகங்கள்

331. **திருக்காட்டுப்பள்ளி** **பண் - நட்டபாடை**
செய்யரு கேபுனல் பாயஓங்கிச் செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று கானலெலாங் கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேயழல் வாயவைவாய்ப் பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேயுடை யானையுள்கி விண்டவ ரேறுவர் மேலுலகே

332. 52. **திருப்புகலி** **பண் - தக்கராகம்**
விதியாய் விளைவாய் விளைவின் பயனாகிக்
கொதியா வருகூற் றையுதைத் தவர்சேரும்
பதியா வதுபங் கயநின் றலரத்தேன்
பொதியார் பொழில்சூழ் புகலிந் நகர்தானே

333. 101 **சீகாழி** பண் - **தக்கராகம்**

அடலே றமருங் கொடியண்ணல்
மடலார் குழலா ளொடுமன்னுங்
கடலார் புடைசூழ் தருகாழி
தொடர்வா ரவர்தூ நெறியாரே

334. 86. **திருச்சிரபுரம்** பண் - **பழந்தக்கராகம்**

பல்லடைந்த வெண்டலையிற் பலிகொள்வ தன்றியும்போய்
வில்லடைந்த புருவநல்லாள் மேனியில் வைத்தலென்னே
சொல்லடைந்த தொல்மறையோ டங்கங் கலைகளெல்லாஞ்
செல்லடைந்த செல்வர்வாழுஞ் சிரபுரம் மேயவனே

335. 625 **திருச்சோபுரம்** பண் - **பழந்தக்கராகம்**

வெங்கண்ஆனை யீருரிவை போர்த்து விளங்குமொழி
மங்கைபாகம் வைத்துகந்த மாண்பது வென்னைகொலாங்
கங்கையோடு திங்கள்சூடிக் கடிகம ழுங்கொன்றைத்
தொங்கலானே தூயநீற்றாய் சோபுர மேயவனே

336. 96 **திருச்சண்பைநகர்** பண் - **தக்கேசி**

பங்கமேறு மதிசேர்சடையார் விடையார்பலவேதம்
அங்கமாறும் மறைநான்கவையு மானார்மீனாரும்
வங்கமேவு கடல்வாழ்பரதர் மனைக்கேநுனைமூக்கின்
சங்கமேறி முத்தமீனுஞ் சண்பைநகராரே

337. 91 **திருப்புறவம்** பண் - **தக்கேசி**

நறவநிறைவண் டறைதார்க்கொன்றை நயந்துநயனத்தால்
சுறவஞ்செறிவண் கொடியோனுடலம்
    பொடியாவிழிசெய்தான்
புறவமுறைவண் பதியாமதியார் புரமூன்றெரிசெய்த
இறைவனறவன் இமையோரேத்த உமையோடிருந்தானே

338. 89 **திருவெங்குரு** பண் - **குறிஞ்சி**

காலைநன் மாமலர் கொண்டடி பரவிக்
    கைதொழு மாணியைக் கறுத்தவெங் காலன்
ஓலம திடமுன் உயிரொடு மாள
    உதைத்தவ னுமையவள் விருப்பனெம் பெருமான்

மாலைவந் தணுக ஓதம்வந் துலவி
    மறிதிரை சங்கொடு பவளம்முன் உந்தி
வேலைவந் தணையுஞ் சோலைகள் சூழ்ந்த
    வெங்குரு மேவியுள் வீற்றிருந் தாரே

339. 129 திருக்கழுமலம் பண் - குறிஞ்சி

அயிலுறு படையினர் விடையினர் முடிமேல்
    அரவமும் மதியமும் விரவிய அழகர்
மயிலுறு சாயல் வனமுலை யொருபால்
    மகிழ்பவர் வானிடை முகில்புல்கு மிடறர்
பயில்வுறு சரிதையர் எருதுகந் தேறிப்
    பாடியு மாடியும் பலிகொள்வர் வலிசேர்
கயிலையும் பொதியிலும் இடமென வுடையார்
    கழுமலம் நினையநம் வினைகரி சறுமே

340. 103 சீர்காழி பண் - குறிஞ்சி

நல்லார் தீமேவுந் தொழிலார் நால்வேதஞ்
சொல்லார் கேண்மையார் சுடர்பொற் கழலேத்த
வில்லாற் புரஞ்செற்றான் மேவும் பதிபோலுங்
கல்லார் மதில்சூழ்ந்த காழிந் நகர்தானே

341. 93 திருப்புறவம் பண் - குறிஞ்சி

எய்யாவென்றித் தானவரூர்மூன் றெரிசெய்த
மையார்கண்டன் மாதுமைவைகுந் திருமேனிச்
செய்யான்வெண்ணீ றணிவான்றிகழ்பொற் பதிபோலும்
பொய்யாநாவின் அந்தணர்வாழும் புறவம்மே

342. 103 சீகாழி பண் - குறிஞ்சி

உரவார்கலையின் கவிதைப்புலவர்க் கொருநாளுங்
கரவாவண்கைக் கற்றவர்சேருங் கலிக்காழி
அரவார்அரையா அவுணர்புரமூன் றெரிசெய்த
சரவாவென்பார் தத்துவஞானத் தலையாரே

343. 53 திருப்புகலி பண் - வியாழக்குறிஞ்சி

ஆடல் அரவசைத்தான் அருமாமறை தான்விரித்தான் கொன்றை
சூடிய செஞ்சடையான் சுடுகாடமர்ந்த பிரான்
ஏடவிழ் மாமலையாள் ஒருபாகம் அமர்ந்தடியார் ஏத்த
ஆடிய எம்மிறையூர் புகலிப் பதியாமே

344. 88 திருச்சிரபுரம் பண் - வியாழக்குறிஞ்சி

வாருறு வனமுலை மங்கைபங்கன்
நீருறு சடைமுடி நிமலனிடங்
காருறு கடிபொழில் சூழ்ந்தழகார்
சீருறு வளவயற் சிரபுரமே

345. 460 திருஇராமனதீச்சரம் பண் - வியாழக்குறிஞ்சி

சங்கொளிர் முன்கையர் தம்மிடையே
அங்கிடு பலிகொளும் அவன்கோபப்
பொங்கர வாடலோன் புவனியோங்க
எங்குமன் இராமன தீச்சரமே

346.173 திருக்கடைமுடி பண் - வியாழக்குறிஞ்சி

அருத்தனை அறவனை அமுதனைநீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை யல்லதிங் குலகமேத்துங்
கருத்தவன் வளநகர் கடைமுடியே

347. 693 திருக்கள்ளில் பண் - வியாழக்குறிஞ்சி

முள்ளின்மேல் முதுகூகை முரலுஞ் சோலை
வெள்ளின்மேல் விடுகூறைக் கொடி விளைந்த
கள்ளில்மேய அண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமேல் உயர்வெய்தல் ஒரு தலையே

348. திருக்கழுமலம் பண் - மேகராகக்குறிஞ்சி

சேவுயருந் திண்கொடியான் திருவடியே
சரணென்று சிறந்தவன்பால்
நாவியலும் மங்கையொடு நான்முகன்றான்
வழிபட்ட நலங்கொள்கோயிற்
வாவிதொறும் வண்கமலம் முகம்காட்டச்
செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே

349.திருப்பூந்தராய் பண் - இந்தளம்

செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்த்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே

350. திருவனேகதங்காவதம் பண் - இந்தளம்

நீடல் மேவுநிமிர் புன்சடை மேலொர் நிலாமுளை
சூடல் மேவுமறை யின்முறை யாலொர் சுலாவழல்
ஆடல் மேவுமவர் மேய அனேகதங் காவதம்
பாடல் மேவுமனத் தார்வினை பற்றறுப் பார்களே

351. திருச்சிக்கல் பண் - இந்தளம்

வானுலா வுமதி வந்துல வும்மதின் மாளிகை
தேனுலா வுமலர்ச் சோலைமல் குந்திகழ் சிக்கலுள்
வேனல்வே ளைவிழித் திட்டவெண் ணெய்ப்பெரு மானடி
ஞானமா கநினை வார்வினை யாயின நையுமே

352. 106 சீகாழி பண் - இந்தளம்

நல்லானை நான்மறை யோடிய லாறங்கம்
வல்லானை வல்லவர் பான்மலிந் தோங்கிய
சொல்லானைத் தொன்மதிற் காழியே கோயிலாம்
இல்லானை யேத்தநின் றார்க்குள தின்பமே

353. 48 திருவேணுபுரம் பண் - இந்தளம்

நிலவும் புனலும் நிறைவா ளரவும்
இலகுஞ் சடையார்க் கிடமாம் எழிலார்
உலவும் வயலுக் கொளியார் முத்தம்
விலகுங் கடலார் வேணு புரமே

354. 55 திருப்புகலி பண் - இந்தளம்

உகலி யாழ்கட லோங்கு பாருளீர்
அகலி யாவினை யல்லல் போயறும்
இகலி யார்புர மெய்த வன்னுறை
புகலி யாம்நகர் போற்றி வாழ்மினே

355. 740 திருச்சேத்திரக்கோவை பண் - இந்தளம்

ஆரூர் தில்லையம் பலம்வல் லந்நல்லம்
வடகச் சியுமச் சிறுபாக்கம் நல்ல
கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி
கடல்சூழ் கழிப்பாலை தென்கோடி பீடார்
நீரூர் வயல்நின்றி யூர்குன்றி யூருங்
குருகா வையூர் நாரையூர் நீடுகானப்
பேரூர் நன்னீள் வயல்நெய்த் தானமும்
பிதற்றாய் பிறைசூ டிதன்பே ரிடமே.

356. **40 திருப்பிரமபுரம்** **பண் - சீகாமரம்**

எம்பிரான் எனக்கமுத மாவானுந் தன்னடைந்தார்
தம்பிரான் ஆவானுந் தழலேந்து கையானுங்
கம்பமா கரியுரித்த காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற்பிரம புரத்துறையும் வானவனே

357. **107 சீகாழி** **பண் - சீகாமரம்**

பண்ணின் நேர்மொழி மங்கை மார்பலர்
 பாடி யாடிய வோசை நாடொறும்
கண்ணின் நேரயலே பொலியுங் கடற்காழிப்
பெண்ணின் நேரொரு பங்கு டைப்பெரு
 மானை யெம்பெரு மானென் றென்றுன்னும்
அண்ண லாரடியார் அருளாலுங் குறைவிலரே

358. **59. திருக்கோட்டாறு** **பண் - சீகாமரம்**

கருந்த டங்கண்ணின் மாத ராரிசை
 செய்யக் காரதிர் கின்ற பூம்பொழில்
குருந்த மாதவியின் விரைமல்கு கோட்டாற்றில்
 இருந்த எம்பெரு மானை யுள்கி
இணையடி தொழு தேத்தும் மாந்தர்கள்
வருந்துமா றறியார் நெறிசேர்வர் வானூடே

359. **திருப்புகலி** **பண் - காந்தாரம்**

உருவார்ந்த மெல்லியலோர் பாகமுடையீ ரடைவோர்க்குக்
கருவார்ந்த வானுலகங் காட்டிக்கொடுத்தல் கருத்தானீர்
பொருவார்ந்த தெண்கடலொண் சங்கந்திளைக்கும் பூம்புகலித்
திருவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே

360. **சீகாழி** **பண் - காந்தாரம்**

நலங்கொள் முத்தும் மணியும் அணியுந் திரளோதங்
கலங்கள் தன்னில் கொண்டு கரைசேர் கலிக்காழி
வலங்கொள் மழுவொன் றுடையாய் விடையா யெனவேத்தி
அலங்கல் சூட்ட வல்லார்க் கடையா அருநோயே

361. **திருப்பிரமபுரம்** **பண் - காந்தாரம்**

கறையணி வேலிலர் போலுங் கபாலந் தரித்திலர் போலும்
மறையும் நவின்றிலர் போலும் மாசுணம் ஆர்த்திலர் போலும்
பறையுங் கரத்திலர் போலும் பாசம் பிடித்திலர் போலும்
பிறையுஞ் சடைக்கிலர் போலும் பிரம புரம்அமர்ந் தாரே.

362. **சீகாழி** **பண் - காந்தாரம்**

விண்ணி யங்குமதிக் கண்ணியான்விரி யுஞ்சடைப்
பெண்ண யங்கொள்திரு மேனியான்பெரு மானனற்
கண்ண யங்கொள்திரு நெற்றியான்கலிக் காழியுள்
மண்ண யங்கொள்மறை யாளரேத்துமலர்ப் பாதனே

363. **திருவேணுபுரம்** **பண் - காந்தாரம்**

பூதத்தின் படையினீர் பூங்கொன்றைத் தாரினீர்
ஓதத்தின் ஒலியோடும் உம்பர்வா னவர்புகுந்து
வேதத்தின் இசைபாடி விரைமலர்கள் சொரிந்தேத்தும்
பாதத்தீர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே

364. **121 திருக்கோச்சைவயம்** **பண் - பியந்தைக்காந்தாரம்**

நீலநன் மாமிடற்றன் இறைவன் சினத்த
நெடுமா வுரித்த நிகரில்
சேலன கண்ணிவண்ணம் ஒருகூ றுருக்கொள்
திகழ்தேவன் மேவு பதிதான்
வேலன கண்ணிமார்கள் விளையாடு மோசை
விழவோசை வேத வொலியின்
சாலநல் வேலையோசை தருமாட வீதி
கொடியாடு கொச்சை வயமே

365. **124 திருக்கோச்சைவயம்**

பண் - பியந்தைக்காந்தாரம்

அறையும் பூம்புன லோடு மாடர வச்சடை தன்மேற்
பிறையுஞ் சூடுவர் மார்பிற் பெண்ணொரு பாக மமர்ந்தார்
மறையி னொல்லொலி யோவா மந்திர வேள்வி யறாத
குறைவில் அந்தணர் வாழுங் கொச்சை வயமமர்ந் தாரே.

366. **113 சீகாழி** **பண் - பியந்தைக்காந்தாரம்**

பொங்கு வெண்புரி வளரும் பொற்புடை மார்பனெம் பெருமான்
செங்கண் ஆடர வாட்டுஞ் செல்வனெஞ் சிவனுறை கோயில்
பங்க மில்பல மறைகள் வல்லவர் பத்தர்கள் பரவுந்
தங்கு வெண்டிரைக் கானல் தண்வயல் காழிநன் னகரே

367. **திருச்சிரபுரம்** பண் - நட்டராகம்

அன்ன மென்னடை அரிவையோ டினிதுறை
அமரர்தம் பெருமானார்
மின்னு செஞ்சடை வெள்ளெருக் கம்மலர்
வைத்தவர் வேதந்தாம்
பன்னு நன்பொருள் பயந்தவர் பருமதிற்
சிரபுரத் தார்சீரார்
பொன்னின் மாமலர் அடிதொழும் அடியவர்
வினையொடும் பொருந்தாரே

368. **117 சீகாழி** பண் - செவ்வழி

பொடியிலங்குந் திருமேனி யாளர்புலி யதளினர்
அடியிலங்குங் கழலார்க்க ஆடும்மடி கள்ளிடம்
இடியிலங்குங் குரலோதம் மல்கவ்வெறி வார்திரைக்
கடியிலங்கும் புனல்முத் தலைக்குங்கடற் காழியே

369. **60 திருப்புகலி** பண் - செவ்வழி

விடையதேறி வெறியக் கரவார்த்த விமலனார்
படையதாகப் பரசு தரித்தார்க் கிடமாவது
கொடையிலோவார் குலமும் முயர்ந்தம் மறையோர்கள்தாம்
புடைகொள்வேள்விப் புகையும்பர் உலாவும் புகலியே

370. **80 திருப்பூந்தராய்** பண் - காந்தாரபஞ்சமம்

பந்துசேர்விர லாள்பவ ளத்துவர்
வாயினாள்பனி மாமதி போல்முகத்
தந்தமில்புக ழாள்மலைமாதொடும் ஆதிப்பிரான்
வந்துசேர்விடம் வானவ ரெத்திசை
யுந்நிறைந்து வலஞ்செய்து மாமலர்
புந்திசெய்திறைஞ் சிப்பொழிபூந்தராய் போற்றுதுமே

371. **3.007 திருப்புகலி** பண் - காந்தாரபஞ்சமம்

கண்ணுத லானும்வெண் ணீற்றினா னுங்கழ லார்க்கவே
பண்ணிசை பாடநின் றாடினா னும்பரஞ் சோதியும்
புண்ணிய நான்மறை யோர்களேத் தும்புக லிந்நகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் வீற்றிருந் தபெரு மானன்றே

372. **384 திருக்கோட்டாறு** **பண் - காந்தாரபஞ்சமம்**
வேதியன் விண்ணவ ரேத்தநின் றான்விளங் கும்மறை
ஓதிய வொண்பொரு ளாகிநின் றானொளி யார்கிளி
கோதிய தண்பொழில் சூழ்ந்தழ கார்திருக் கோட்டாற்றுள்
ஆதியை யேநினைந் தேத்தவல் லார்க்கல்லல் இல்லையே.

373. **84 திருப்பூந்தராய்** **பண் - காந்தாரபஞ்சமம்**
மின்னன எயிறுடை விரவ லோர்கள்தந்
துன்னிய புரம்உகச் சுளிந்த தொன்மையர்
புன்னையம் பொழிலணி பூந்த ராய்நகர்
அன்னமன் னந்நடை அரிவை பங்கரே

374. **446 திருக்கருக்குடி** **பண் - காந்தாரபஞ்சமம்**
நனவிலுங் கனவிலும் நாளுந் தன்னொளி
நினைவிலும் எனக்குவந் தெய்தும் நின்மலன்
கனைகடல் வையகந் தொழு கருக்குடி
அனலெரி யாடுமெம் மடிகள் காண்மினே

375. **287 திருத்தென்குடித்திட்டை** **பண் - கொல்லி**
முன்னைநான் மறையவை முறைமுறை குறையொடுந்
தன்னதாள் தொழுதெழ நின்றவன் தன்னிடம்
மன்னுமா காவிரி வந்தடி வருடநற்
செந்நெலார் வளவயல் தென்குடித் திட்டையே

376. **43 திருப்பிரமபுரம்** **பண் - கொல்லி**
கரமுனம்மல ராற்புனல்மலர் தூவியேகலந் தேத்துமின்
பரமனூர்பல பேரினாற்பொலி பத்தர்சித்தர்கள் தாம்பயில்
வரமுன்னவ்வருள் செய்யவல்லஎம் ஐயன்நாடொறும் மேயசீர்ப்
பிரமனூர்பிர மாபுரத்துறை பிஞ்ஞகனருள் பேணியே

377. **747 பொது தனித்திருவிருக்குக்குறள்**
பண் - கொல்லி
கல்லால் நீழல், அல்லாத் தேவை
நல்லார் பேணார், அல்லோம் நாமே

378. **517 திருச்சிற்றேமம்** **பண் - கொல்லிக்கௌவானம்**
நிறைவெண்டிங்கள் வாண்முக மாதர்பாட நீள்சடைக்
குறைவெண்டிங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
சிறைவண்டியாழ்செய் பைம்பொழிற் பழனஞ்சூழ்சிற் றேமத்தான்
இறைவனென்றே யுலகெலாம் ஏத்தநின்ற பெருமானே

379. **118 சீகாழி** **பண் - கௌசிகம்**

சந்த மார்முலை யாள்தன கூறனார்
வெந்த வெண்பொடி யாடிய மெய்யனார்
கந்த மார்பொழில் சூழ்தரு காழியுள்
எந்தை யாரடி யென்மனத் துள்ளவே

380. **திருப்பிரமபுரம்** **பண் - பஞ்சமம்**

இறையவன் ஈசன்எந்தை இமையோர்தொழு தேத்தநின்ற
கறையணி கண்டன்வெண்தோ டணிகாதினன் காலத்தன்று
மறைமொழி வாய்மையினான் மலையாளொடு
மன்னுசென்னிப்
பிறையணி செஞ்சடையான் பிரமாபுரம் பேணுமினே.

381. **125 திருக்கொச்சைவயம்** **பண் - சாதாரி**

திருந்துமா களிற்றிள மருப்பொடு திரண்மணிச் சந்தமுந்திக்
குருந்துமா குரவமுங் குடசமும் பீலியுஞ் சுமந்துகொண்டு
நிரந்துமா வயல்புகு நீடுகோட் டாறுசூழ் கொச்சைமேவிப்
பொருந்தினார் திருந்தடி போற்றிவாழ் நெஞ்சமே புகலதாமே

382. **72 திருவெங்குரு - திருமுக்கால்** **பண் - சாதாரி**

விண்ணவர் தொழுதெழு வெங்குரு மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே
சுண்ணவெண் பொடியணி வீரும தொழுகழல்
எண்ணவல் லாரிட ரிலரே

383. **399 திருச்சிறுகுடி** **பண் - சாதாரி**

திடமலி மதிலணி சிறுகுடி மேவிய
படமலி அரவுடை யீரே
படமலி அரவுடை யீருமைப் பணிபவர்
அடைவதும் அமருல கதுவே

384. **20 திருக்கலிக்காமூர்** **பண் - பழம்பஞ்சுரம்**

மடல்வரை யின்மது விம்முசோலை வயல்சூழ்ந் தழகாருங்
கடல்வரை யோதங் கலந்துமுத்தஞ் சொரியுங் கலிக்காமூர்
உடல்வரை யின்னுயிர் வாழ்க்கையாய் வொருவன் கழ்லேத்த
இடர்தொட ராவினை யானசிந்தும் இறைவன் னருளாமே

385. **139 திருக்கழுமலம்** **பண் - புறநீர்மை**

மடல்மலி கொன்றை துன்றுவா ளெருக்கும் வன்னியும்
மத்தமுஞ் சடைமேற்
படலொலி திரைகள் மோதிய கங்கைத் தலைவனார்
தம்மிடம் பகரில்
விடலொலி பரந்த வெண்டிரை முத்தம் இப்பிகள்
கொணர்ந்துவெள் ளருவிக்
கடலொலி யோதம் மோதவந் தலைக்குங் கழுமல
நகரென லாமே

சேக்கிழார் சம்பந்தர் வணங்கியதாகக் குறித்த ஆனால் பதிகம் கிடைக்கப் பெறாதவை

1. 287. நீடூர்

நீடு திரு நின்றி ஊரின் நிமலனார் நீள் கழல் ஏத்திக்
கூடிய காதலில் போற்றிக் கும்பிட்டு வண் தமிழ் கூறி
நாடு சீர் நீடூர் வணங்கி நம்பர் திருப் புன்கூர் நண்ணி
ஆடிய பாதம் இறைஞ்சி அரும் தமிழ் பாடி அமர்ந்தார்

2. 288. பழமண்ணிப் படிக்கரை, குறுக்கை

அங்கு நின்று ஏகி அப்பாங்கில் அரனார் மகிழ் கோயில் ஆன
எங்கணும் சென்று பணிந்தே ஏத்தி இமவான் மடந்தை
பங்கர் உறை பழ மண்ணிப் படிக்கரைக் கோயில் வணங்கித்
தங்கு தமிழ் மாலை சாத்தித் திருக்குறுக்கைப் பதி சார்ந்தார்

3. 290. எதிர்கொள் பாடி

அப்பதி போற்றி அகல்வார் அரனார் திருமணம் சேரி
செப்பரும் சீர்த் தொண்டரோடும் சென்று தொழுது இசை பாடி
எப்பொருளும் தரும் ஈசர் எதிர் கொள் பாடிப் பதி எய்தி
ஒப்பில் பதிகங்கள் பாடி ஓங்கு வேள்விக் குடி உற்றார்

4. 292. கஞ்சனூர்

திருக்கோடி காவில் அமர்ந்த தேவர் சிகாமணி தன்னை
எருக்கோடு இதழியும் பாம்பும் இசைந்து அணிந்தானை வெள்ளேனப்
பருக்கோடு பூண்ட பிரானைப் பணிந்து சொல் மாலைகள் பாடிக்
கருக்கோடி நீப்பார்கள் சேரும் கஞ்சனூர் கை தொழச் சென்றார்

5. 293. மாந்துறை, மங்கலக்குடி

கஞ்சனூர் ஆண்ட தம் கோவைக் கண் உற்று இறைஞ்சி முன் போந்து
மஞ்சணி மாமதில் சூழும் மாந்துறை வந்து வணங்கி
அஞ்சொல் தமிழ் மாலை சாத்தி அங்கு அகன்று அன்பர்முன்னாகச்
செஞ்சடை வேதியர் மன்னும் திருமங்கலக் குடி சேர்ந்தார்

6. **338. வெஞ்சமாக்கூடல்**

பருவம் அறப் பொன்னிப் பாண்டிக் கொடு முடியார் தம்பாதம்
மருவி வணங்கி வளத் தமிழ் மாலை மகிழ்ந்து சாத்தி
விரி சுடர் மாளிகை வெஞ்ச மாக் கூடல் விடையவர் தம்
பெருவில் தானம் பல போற்றிக் குணதிசைப் போதுகின்றார்

7. **339. மாணிக்க வெற்பு (வாட்போக்கி)**

செல்வக் கருவூர்த் திருவானிலைக் கோயில் சென்று இறைஞ்சி
நல் இசை வண் தமிழ்ச் சொல் தொடை பாடி அந்நாடு அகன்று
மல்கிய மாணிக்க வெற்பு முதலா வணங்கி வந்து
மல்கு திரைப் பொன்னித் தென் கரைத் தானம் பல பணிவார்

8. **342. ஆலந்துறை, செந்துறை**

தொழுது புறம்பு அணைந்து அங்கு நின்று ஏகிச் சுரர் பணிவு உற்று
எழு திரு ஆலந்துறை திருச்செந்துறையே முதலா
வழுவில் பல் கோயில்கள் சென்று வணங்கி மகிழ்ந்து அணைவார்
செழு மலர்ச் சோலைத் திருக் கற்குடி மலை சேர வந்தார்

9. **347. திருத்தவத்துறை**

கை தொழுது ஏத்திப் புறத்து அணைந்து காமர் பதி அதன் கண் சில நாள்
வைகி வணங்கி மகிழ்ந்து அணைவார் மன்னும் தவத்துறை வானவர் தாள்
எய்தி இறைஞ்சி எழுந்து நின்றே இன் தமிழ் மாலை கொண்டு ஏத்திப் போந்து
வைதிக மாமணி அம்மருங்கு மற்று உள்ள தானம் வழுத்திச் செல்வார்

10. **348. எறும்பியூர்**

ஏறு உயர்த்தார் திருப்பாற்றுறையும் எறும்பியூர் மாமலையே முதலா
வேறு பதிகள் பலவும் போற்றி விரவும் திருத்தொண்டர் வந்து சூழ
ஈறில் புகழ்ச் சண்பை ஆளியார் தாம் எண் திசையோரும் தொழுது இறைஞ்ச
நீறணி செம்பவளப் பொருப்பின் நெடுங்கள மா நகர் சென்று சேர்ந்தார்

11. 351. ஆலம்பொழில், பூந்துருத்தி

அங்கு அப்பதி நின்று எழுந்தருளி அணிந்திரு வாலம்
பொழில் வணங்கி
பொங்கு புனல் பொன்னிப் பூந்துருத்தி பொய் இலியாரைப்
பணிந்து போற்றி
எங்கும் நிகழ் திருத் தொண்டர் குழாம் எதிர் கொள்ள
எப்பதியும் தொழுது
செங்கயல் பாய் வயல் ஓடை சூழ்ந்த திருக் கண்டியூர் தொழச்
சென்று அணைந்தார்

12. 364. சேலூர், பாலைத்துறை

மன்னும் அக் கோயில் சேர் மான் மறிக் கையர்தம்
பொன் அடித்தலம் உறப் புரிவொடும் தொழுது எழுந்து
இன் இசைத் தமிழ் புனைந்து இறைவர் சேல் ஊருடன்
பன்னு பாலைத் துறைப் பதி பணிந்து ஏகினார்

13. 375. பூவனூர்

பழுது இல் சீர்த் திருப் பரிதி நல் நியமும் பணிந்து அங்கு
எழுது மாமறையாம் பதிகத்து இசை போற்றி
முழுதும் ஆனவர் கோயில்கள் வணங்கியே முறைமை
வழுவு இலார் திருப்பூவனூர் வணங்கி வந்து அணைந்து

14. 390. ஆறை மேற்றளி

திருவாறை மேல் தளியில் திகழ்ந்து இருந்த செந்தீயின்
உருவாளன் அடிவணங்கி உருகிய அன்பொடு போற்றி
மருவாரும் குழல் மலையாள் வழிபாடு செய்ய அருள்
தருவார் தம் திரு சத்தி முற்றத்தின் புறம் சேர்ந்தார்

15. 391. சத்திமுற்றம்

திருச் சத்தி முற்றத்தில் சென்று எய்தித் திருமலையாள்
அருச்சித்த சேவடிகள் ஆர்வம் உறப் பணிந்து ஏத்திக்
கருச் சுற்றில் அடையாமல் கை தருவார் கழல் பாடி
விருப்பு உற்றுத் திருப் பட்டீச்சரம் பணிய மேவும் கால்

16. **399. ஆறை வடதளி**

அப்பதியில் அமர்கின்ற ஆளுடைய பிள்ளையார்
செப்பரும் சீர் திருவாறை வட தளியில் சென்று இறைஞ்சி
ஒப்பு அரிய தமிழ் பாடி உடன் அமரும் தொண்டரொடு
எப்பொருளுமாய் நின்றார் இரும் பூளை எய்தினார்

17. **408. குடந்தைக் கீழ்க்கோட்டம்**

வந்து அணைந்து திருக்கீழ்க் கோட்டத்து இருந்த வான் பொருளை
சிந்தை மகிழ்வுற வணங்கித் திருத்தொண்டருடன் செல்வார்
அந்தணர்கள் புடை சூழ்ந்து போற்றி இசைப்ப அவரொடும்
கந்த மலர் பொழில் சூழ்ந்த காரோணம் சென்று அடைந்தார்

18. **437. மூவலூர்**

மூவலூர் உறை முதல்வரைப் பரவிய மொழியால்
மேவு காதலில் ஏத்தியே விருப்பொடும் போந்து
பூ அலம்பு தண் புனல் பணைப் புகலியார் தலைவர்
வாவி சூழ் திரு மயிலாடு துறையினில் வந்தார்

19. **573. தலையாலங்காடு, தளிச்சாத்தங்குடி**

நீடுதிரு வாஞ்சியத்தில் அமர்ந்த முக்கண்
　　நீலமிடற்று அருமணியை வணங்கிப் போற்றிப்
பாடொலி நீர்த் தலையாலங்காடு மாடு
　　பரமர் பெருவேளூரும் பணிந்து பாடி
நாடு புகழ்த் தளிச் சாத்தங் குடியில் நண்ணி
　　நம்பர் திருக்கர வீரம் நயந்து பாடித்
தேடு மறைக்கு அரியார் தம் விளமர் போற்றித்
　　திருவாரூர் தொழ நினைந்து சென்று புக்கார்

20. **622. கோடிக்குழகர்**

தென் திரை சூழ் கடல் கானல் திரு அகத்தியன் பள்ளி
அண்டர் பிரான் கழல் வணங்கி அருந்தமிழ் மா மறை பாடிக்
கொண்டல் பயில் மணல் கோடு சூழ் கோடிக் குழகர் தமைத்
தொண்டருடன் தொழுது அணைந்தார் தோணிபுரத் தோன்றலார்

21. 886. திருச்சுழியல்

பற்றார் தம் புரங்கள் மலைச் சிலையால் செற்ற
பரமனார் திருப்புத்தூர் பணிந்து போந்து
புற்று ஆரும் பணி பூண்ட புனிதனார் தம்
பூவணத்தைப் புக்கு இறைஞ்சிப் புகழ்ந்து பாடிக்
கற்றார்கள் தொழுது ஏத்தும் கானப் பேரும்
கைதொழுது தமிழ் பாடிச் சுழியல் போற்றிக்
குற்றாலம் குறும் பலாக் கும்பிட்டு ஏத்திக்
கூற்று உகைத்தார் நெல்வேலி குறுகினாரே

22. 892. மணமேற்குடி

பதி நிலவு பாண்டி நாடு அதனில் முக்கண்
பரமனார் மகிழ் இடங்கள் பலவும் போற்றி
விதி நிலவு வேத நூல் நெறியே ஆக்கி வெண்ணீற்றின்
சார்வினால் மிக்கு உயர்ந்த
கருதி அருளிக் காழி நகர் சூழ வந்தார் கண் நுதலான்
திருத்தொண்டர் பலரும் சூழ
மதி நிலவு குலவேந்தன் போற்றிச் செல்ல மந்திரியார்
மதி மண மேற்குடியில் வந்தார்

23. 962. திருத்தினை நகர்

செல்வம் மல்கிய தில்லை மூதூரினில் திரு நடம் பணிந்து ஏத்திப்
பல் பெரும் தொண்டர் எதிர் கொளப் பரமர் தன் திருத்தினை
நகர் பாடி
அல்கு தொண்டர்கள் தம்முடன் திருமாணிக் குழியினை
அணைந்து ஏத்தி
மல்கு வார் சடையார் திருப் பாதிரிப் புலியூரை வந்து உற்றா

24. 998. காமக்கோட்டம்

புறத்து அணைந்த தொண்டருடன் போந்து அமைந்த திருமடத்தில்
பெறற்கு அரும் பேறு உலகு உய்யப் பெற்று அருளும் பிள்ளையார்
மறப்பு அரிய காதல் உடன் வந்து எய்தி மகிழ்ந்து உறைவார்
அறம் பெரும் செல்வக் காமக் கோட்டம் அணைந்து இறைஞ்சினார்

25. **1000. கச்சி அனேகதங்காவதம்**

நீடு திருப் பொழில் காஞ்சி நெறிக்காரைக் காடு இறைஞ்சிச்
சூடு மதிக் கண்ணியார் துணை மலர்ச் சேவடி பாடி
ஆடும் அவர் இனிது அமரும் அனே கதங்கா வதம் பரவி
மாடு திருத் தானங்கள் பணிந்து ஏத்தி வைகும் நாள்

26. **1001. கச்சி மேற்றளி**

என் திசையும் போற்றி இசைக்கும் திருப்பதி மற்று அதன்
புறத்துத்
தொண்டருடன் இனிது ஏகித் தொல்லை விடம் உண்டு இருண்ட
கண்டர் மகிழ் மேல் தளியும் முதலான கலந்து ஏத்தி
மண்டு பெரும் காதலினால் வணங்கி மீண்டு இனிது இருந்தார்

27. **1013. வெண்பாக்கம்**

மன்னு திருப்பதிக இசைப் பாடிப் போற்றி வணங்கிப்
போந்து அப்பதியில் வைகி மாடு
பிஞ்ஞகர் வெண் பாக்கம் முதலாய் உள்ள பிறபதிகள்
பணிந்து அணைவார் பெருகும் அன்பால்
முன் நிறைந்த திருவாய் மஞ்சன நீர் ஆட்டும் முதல்
வேடர் கண்ணப்ப நாயனாரை
உன்னி ஒளிர் காளத்தி மலை வணங்க உற்ற பெரு
வேட்கை உடன் உவந்து சென்றார்

28. **1014. காரிகரை**

மிக்க பெரும் காதலுடன் தொண்டர் சூழ மென்புனல்
நாட்டினை அகன்று வெற்பும் கானும்
தொக்க பெருவன் புலக்கான் அடைந்து போகிச் சூல
கபாலக் கரத்துச் சுடரும் மேனி
முக்கண் முதல் தலைவன் இடம் ஆகி உள்ள முகில்
நெருங்கும் காரி கரை முன்னர் சென்று
புக்கு இறைஞ்சி போற்றி இசைத்து அப் பதியில் வைகிப்
பூதியரோடு உடன் மகிழ்ந்தார் புகலி வேந்தர்

திருஞானசம்பந்தர் திருநாமம் அவர்தம் புராணத்திலிருந்து (பெரியபுராணம்)

திருஞானசம்பந்தர் திருநாமம் பெரியபுராணத்திலிருந்து (அவர்தம் புராணம் நீங்கலாக)

1	அணி சண்பை மைம்மலர் கண்டத்தண்டர் பிரானார் மகனார்.	திருநாவுக்	236
2	அம்பிகை செம்பொற்கிண்ணத் தமுதஞானங் கொடுப்ப அழுகை தீர்ந்த செம்பவள பிள்ளை.	திருநாவுக்	183
3	அறம்பயந்தாள் திருமுலைப்பால் அமுதுண்டு வளர்ந்தவர். தடுத்.		111
4	ஆதி சைவநெறி விளங்கத் தெய்வநீறு நினைந்தெழுந்தார்.	திருநாவுக்	286
5	ஆழி மாநிலத் தகிலமீன் றளித்தவள் திருமுலை அமுதுண்ட வாழி ஞானசம்பந்தர். கண.		1
6	ஆழித் தோணிபுரத்தசர்.	திருநாவுக்	267
7	ஆழிவிடம் உண்டவரை அம்மைதிருப்பலமுதம் உண்டப்போதே ஏழிசைவண் டமிழ்மாலை "இவன்எம்மான்"எனக்காட்டி இயம்பவல்ல காழிவரும் பெருந்தகை.	திருநாவுக்	178
8	ஆளுடைய பிள்ளையார்.	நெடு./திருநாவுக்	2/181, 231
9	இமயப்பாவை திருமுலைப்பால் தேசம் உய்ய உண்டவர்.	திருநாவுக்	260
10	இமயமங்கைதன் திருமுலை அமுதுண்டார். நீலநக்.		28
11	இருந்தவத்தோர்.	திருநாவுக்	399
12	உடைய பிள்ளையார்.	திருநாவுக்	288 273
13	எங்கள் பிரான் சண்பையர் கோன்.	மங்கை.	1
14	எல்லை இல்லாச் சீர்த்தியினார்.	திருநாவுக்	263
15	எல்லை இல்லாப் பெரும்புகழார்.	திருநாவுக்	266
16	என்றும் புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரனார்.	நீலநக்.	33
17	ஏறுசீர் வளர்காழி மெய்ப்பெருந்திரு ஞானபோனகர்.	கண.	5

40	சிவக்கன்று.	திருநாவுக்	270
41	சீர்கொள் சண்பைத் திருமறையோர்.	திருநாவுக்	286
42	செந்தாமரை யோடைச் சண்பையர் நாதன்.	திருநாவுக்	237
43	சேவின் மேலவர் மைந்தராந் திருமறைச் சிறுவர்.	நீலநக்.	35
44	ஞாலம் மிக்கிட நாயகியுடன் நம்பர் நண்ணும் காலம் முற்பெற அழுதவர்.	நீலநக்.	29
45	ஞான போனகர்.	திருநாவுக்	293
46	ஞான முண்டவர்.	கண.	6
47	ஞான முனிவர்.	திருநாவுக்	269 283
48	ஞான வள்ளலார்.	திருநாவுக்	184
49	ஞானத் தலைவர்.	திருநாவுக்	400
50	ஞானத் தலைவனார்.	திருநாவுக்	289
51	ஞானம் உண்டார்.	யாழ்.	11
52	தமிழ் விரகர்.	நெடு.	1
53	திருஞான மாமுனிவர்.	திருநாவுக்	396
54	திருஞானசம்பந்தர்.	ஏயர்.	154
55	திருத்தொண்டர்.	திருநாவுக்	255
56	திருநீற்றின் ஒளிகண்டார்.	திருநாவுக்	391
57	திருமா மகனார்.	திருநாவுக்	260
58	துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்.	திருநாவுக்	259
59	தெருட்கலை ஞானக்கன்று.	திருநாவுக்	185
60	தெள்ளூ மறைகள் முதலான ஞானஞ் செம்பொன் பள்ளத்தில் அள்ளி அகிலம் ஈன்றளித்த அம்மை முலைப்பாலுண்ட பிள்ளையார்.	முருக.	11
61	தென் புகலிக்கோ.	திருநாவுக்	264
62	தென்னவன் கூன் நிமிர்ந்தருளினார்.	திருநாவுக்	391
63	நங்கள் புகலிப் பெருந்தகை.	திருநாவுக்	274
64	நன்று மகிழுஞ் சம்பந்தர்.	ஏயர்.	44
65	நாவார் முத்தமிழ் விரகர்.	ஏயர்.	155

66	பிரமபுரத் திருமுனிவர்.	திருநாவுக்	401
67	பிள்ளையார்.	தடுத்./நீலநக். திருநாவுக் 112, 26, 27, 34,/184, 187, 188, 242, 256, 268, 273, 283, 39768	
	பீடுபெருகும் பிள்ளையார்.	திருநாவுக்	251
69	புகலி அந்தணனார்.	திருநாவுக்	395
70	புகலி ஆண்டகை.	திருநாவுக்	287
71	புகலி ஆண்டகையார்.	திருநாவுக்	258
72	புகலி காவலனார்.	சிறுத்.	23
73	புகலி வேந்தர்.	திருநாவுக்	284
74	புகலிச் சிவக்கன்று.	கழறி.	86
75	புகலிப்பிள்ளையார்.	முருக.	13
76	புகலியர் பெருமான்.	நீலநக்.	24
77	புரமெரித்தார் திருமகனார்.	திருநாவுக்	401
78	பூசுரர் சூளாமணியாம் புகலி வேந்தர்.	மங்கை.	2
79	பொன் மதில்சூழ் புகலி காவலர்.	நெடு.	10
80	போனக ஞானம் பொழிந்த புனித வாக்கார்.	மங்கை.	2
81	மலையாள் திருமுலையில் கறந்த ஞானங்குழைத்தமுது செய்த புகலிக் கவுணியர்.	திருநாவுக்	271
82	மன்றும் புகலி வள்ளலார்.	திருநாவுக்	279
83	மன்னியசீர்ச் சண்பைநகர் மறையவனார்	திருநாவுக்	391
84	மன்னுகாழியர் வள்ளலார்.	குலச்.	10
85	மன்னுபூந்தராய் வருமறைப் பிள்ளையார்.	நீலநக்.	22
86	மாடநீடு திருப்புகலி மன்னர்.	திருநாவுக்	281
87	மூல அன்பர்.	திருநாவுக்	262
88	மெய்ப்பொருள் ஞானம் பெற்றவர்.	திருநாவுக்	241

89	மெய்ம்மை அருந்தவர்.	திருநாவுக்	254
90	யாழின் மொழியாள் உமை ஞானம் ஊட்ட உண்ட எம்பெருமான் காழி நாடன் கவுணியர் கோன்.	யாழ்.	10
91	வண் பெரும் புகழவர்.	நீலநக்.	36
92	வண்தமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்.	திருநாவுக்	180
93	வல்லமணர் தமைவாதில் வென்றார்.	திருநாவுக்	399
94	வழுதியில் புல்லியகூன் நிமிர்த்தினார்.	திருநாவுக்	399
95	வள்ளலார்.	நீலநக்.	34
96	வாழி சீகாழி ஒருவர்.	நீலநக்.	37
97	விடையின்மேல் வருவார் தம்மை அழுதழைத்துக்கொண்டவர்.	திருநாவுக்	182
98	வேணுபுரக்கோன்.	திருநாவுக்	290
99	வேணுபுரத்தெங்கள் பொற்புரி முந்நூல் மார்பர்.	திருநாவுக்	241
100	வேணுபுரி அந்தணாளர்.	திருநாவுக்	285

திருஞானசம்பந்தர் பதிகங்களில் முழுமையும் கிடைக்கப்பெறாதப் பதிகங்கள்

	தலம்	பாடல் முதல்	கி.பெ.பாடல்கள்
1.	திருக்குருகாவூர் வெள்ளடை	- சுண்ணவெண் நீறணி	7 - 11
2.	திருவேணுபுரம்	- வண்டார் குழல்	7
3.	"	- நிலவும் புனலும்	7
4.	"	- பூதத்தின் படை	11
5.	திருப்புகலி	- விடைய தேறி	7
6.	திருத்தோணிபுரம்	- கரும்பமர் வில்லியைக்	4 - 7
7.	திருப்பூந்தராய்	- செந்நெ லங்கழ	7
8.	திருசண்பைநகர்	- பங்கமேறு மதி	7
9.	சீர்காழி	- நல்லார் தீமேவுந்	4 - 7
10.	"	- உரவார் கலையின்	7
11.	"	- நல்லானை நான்மறை	9
12.	"	- பொங்கு வெண்புரி	11-வது பாடல் முழுமையாக இல்லை.
13.	"	- நம்பொருள்நம் மக்க	7
14.	திருக்கொச்சைவயம்	- நீலநன் மாமிடற்றன்	7
15.	"	- அறையும் பூம்புன	7
16.	திருநின்றியூர்	- சூலம்படை சுண்ணப்பொடி	8
17.	திருவோமாம்புலியூர்	- பூங்கொடி மடவாள்	7
18.	திருப்பந்தணைநல்லூர்	- இடறினார் கூற்றைப்	10
19.	திருவடகுரங்காடுதுறை	- கோங்கமே குரவமே	7
20.	திருமழபாடி	- களையும் வல்வினை	11-வது பாடல் முழுமையாக இல்லை.
21.	திருக்கருகாவூர்	- முத்தி லங்குமுறு	8
22.	திருஇராமனதீச்சரம்	- சங்கொளிர் முன்கையர்	11-வது பாடல் முழுமையாக இல்லை.
23.	திருச்செங்காட்டங்குடி	- பைங்கோட்டு மலர்ப்	10
24.	திருமருகல்	- அங்கமும் வேதமும்	7
25.	திருத்தேவூர்	- காடுபயில் வீடுமுடை	10-வது பாடல் முழுமையாக இல்லை.
26.	திருவாரூர்	- பாடலன் நான்மறையன்	8

27. திருக்குடவாயில்	-	கலைவாழும் அங்கையீர்	9
28. திருவுசாத்தானம்	-	நீரிடைத் துயின்றவன்	5, 6
29. திருத்தண்டலைநீணெறி	-	விரும்புந் திங்களுங்	5 - 7
30. திருக்கைச்சினம்	-	தையலோர் கூறுடையான்	10
31. திருமறைக்காடு	-	கற்பொலிசு ரத்தினெரி	10
32. திருக்கோணமலை	-	நிரைகழல் அரவஞ்	7
33. திருஏடகம்	-	வன்னியும் மத்தமும்	7
34. திருஇராமேச்சுரம்	-	அலைவளர் தண்மதி	9
35. திருஎருக்கத்தம்புலியூர்	-	படையார் தருபூதப்	7
36. திருமுதுகுன்றம்	-	தேவராயும் அசுரராயுஞ்	7, 11-வது பாடல் முழுமையாக இல்லை.
37. "	-	தேவா சிறியோம்	7
38. "	-	முரசதிர்ந் தெழுதரு	5 - 7
39. திருக்கச்சியேகம்பம்	-	வெந்தவெண் பொடிப்	7
40. திருவல்லம்	-	எரித்தவன் முப்புரம்	7
41. திருமாற்பேறு	-	ஊறி யார்தரு	7
42. "	-	குருந்தவன் குருகவன்	7
43. திருவூறல்	-	மாறில் அவுணரரணம்	6, 7
44. திருவிற்கோலம்	-	உருவினார் உமையொடும்	8
45 திருக்காளத்தி	-	சந்தமார் அகிலொடு	6, 7
46. திருவான்மியூர்	-	விரையார் கொன்றை	8
47. திருக்கழுக்குன்றம்	-	தோடுடையா னொடு	7
48. திருஅரசிலி	-	பாடல் வண்டறை	7
49. திருக்கயிலாயம்	-	பொடிகொளுருவர் புலி	7
50. பொது	-	அவ்வினைக் கிவ்வினை	7
51. "	-	ஆரூர்தில்லை யம்பலம்	5, 6 மற்றும் 8-வது பாடல் முழுமை யாக இல்லை.

சம்பந்தர் திருநாமங்கள் பிற திருமுறைகளிலிருந்து

1	அணாங்கமர் யாழ்முரித்தார்	11.1220
2	அண்ணல்	11.1246
3	அணி தவத்தவர்களுக்கு அதிக வித்தகன்	11.1325
4	அணிதமிழ் விரகன்	11.1347
5	அணியான புகலி நகரணைவான்	11.1358
6	அத்தன்	11.1271
7	அத்தன் திருநீல நக்கற்கும் அன்புடையான்	11.1374
8	அதிதரு வரதன்	11.1347
9	அந்தணர்கோன்	11.1343
10	அந்தமில் சீர் ஞானச்சுடர்விளக்கு	11.1324
11	அந்தமுந்தும் பிறவித்துயர் தீர அரனடிக்கே பந்தமுந்துந் தமிழ் செய்த பராபரன்	11.1288
12	அந்தாதி கொண்ட பிரான்	11.1126
13	அந்திச்செம் மேனியனை அடையாளம் பல சொன்னார்	11.1325
14	அமண் கணங்கழுவேற்றினார்	11.1220
15	அமணரைக் கழு நுதிக்கு அணைவுறுத்தவன்	11.1325
16	அம்பொழில்மிடச் சண்பையர்கோன்	11.1344
17	அயன் நெடிய மாலுமவ ரறிவரிய தாணுவரன் அருளினொடு நீடவனி யிடர்முழுது போயகல, வயலணிதென் வீழிமிழ லையின்நிலவு காசின்மலி மழைபொழியு மானகுணமதுரன்	11.1348
18	அரத்துறை பொற்சிவிகை ஏறப்பெற்றார்	11.1221
19	அரன் சேவடியே ஏத்திய ஞானசம்பந்தர்	11.1203
20	அரியன்	11.1325
21	அரியொடு நான்முகத்தோனாதி சுரர்க்கெல்லாந் தெரியாமைச் செந்தழலாய் நின்ற ஒருவன் சீர் தன் தலையின் மேல் தரித்த சம்பந்தன்	11.1295
22	அருகர் தங்கள் தென்னாட்டரண் அட்ட சிங்கம்	11.1224
23	அருகர் தம்மைத் தவர்க்கின்ற தண்டமிழ்ச் சைவ சிகாமணி	11.1195

24	அருகாசனி	11.119, 11.1191, 11.1257
25	அருட் காழியர் கொற்றவன்	11.1126
26	அருந்தமிழ் விரகன்	11.1325
27	அருளும் தமிழாகரன்	11.1255
28	அலர் கோகனதக் கடியார் நறுங்கண்ணி ஞானசம்பந்தன்	11.1206
29	அறவன்	11.1325
30	அறிதரு நுண்பொருள் சேர்பதிகம் அரன் கழல்மேல் அணிதரு சுந்தரம் மலி தமிழ்விரகன்	11.1369
31	அறிவாகி இன்பஞ்செய் தமிழ்வாதில் வென்றந்த அமணான வன்குண்டர் கழுவேற முன்கண்ட செறிமாட வண் சண்பை நகராளி	11.1332
32	ஆண்பனை பெண்பனையாக்கினார்	11.1220
33	ஆயிழைக்காச் சுழல்கின்ற நஞ்சந் தணித்தவன்	11.1214
34	ஆர்மலிபுகலிநாதன்	11.1336
35	ஆறதேறுஞ் சடையானருள் மேவ அவனியர்க்கு வீறதேறுந் தமிழால் வழி கண்டவன்	11.1287
36	ஆறுமண்டப் பண்டு செஞ்சொல் நடாத்தி அமண் முழுதும் பாறு மண்டக் கண்ட சைவ சிகாமணி	11.1291
37	ஆனபுகழ்ப்பயில் விப்ரசிகாமணி	11.1335
38	இக்குவலயத்தில் முத்தின் சிவிகை அரன்கொடுக்க முன்னின்று தித்தித்த பாடல் செவிக்களித்தான்	11.1374
39	இடர் முழுதும் அறவீசு தமிழ் விரகன்	11.1358
40	இரும்புகலி அதிபதி	11.1329
41	இருள் தீர்ந்த காழி முதல்வன்	11.1374
42	இழை வளராகத்து ஞானசம்பந்தன்	11.1229
43	உமைகோனைத் திருப்பதிகம் பாடவல்ல சேய்	11.1324
44	உயர்ஞானசம்பந்தர்	7.97.9
45	உயர்ந்த கோ	11.1324
46	உயர்பார் துன்றிய தகுஞானன்	11.1338
47	உரகவிடம் துடைத்தார்	11.1272

48	உரியன்	11.1325
49	உலகம் பரசும் குணந்திகழ் ஞானசம்பந்தன்	11.1189
50	உறுகின்ற அன்பினோடு ஒத்திய தாளமும் உள்ளுருகிப் பெறுகின்ற இன்பும் பிறைநுதல் முண்டமுமுங் கண்டவர்	11.1214
51	ஊழி முதல்வன் உவன் என்று காட்டவலான்	11.1374
52	எங் கற்பகம்	11.1279
53	எஞ்சாமை ஆதிச் சிவனருளால் அம்பொன்செய் வட்டிலில் கோதில் அமிர்த நுகர் குஞ்சரம்	11.1324
54	எண்டலைக்குந் தலைவன் கழல் சூடியெனுள்ளம் வெள்ளங்கண்டலைப்பத் தன் கழல் தந்தவன்	11.1290
55	எண்டிசை நிறைந்த தண்டமிழ் விரகன்	11.1309
56	என்பெருங் குன்றத்தின் அன்றமணர் கூட்டத்தை ஆசழித்துப்பொன்ற உரைகெழுவு செந்தமிழ்ப்பா ஒன்றினால் வென்றி நிரை கழுமேல் உய்த்தான்	11.1324
57	எந்தம் இறைவன்	11.1329
58	எம் கோமான்	11.1350
59	எம் சிவன் இவன் என்று அந்நாள் குதலைத் திருவாய் மொழிகள் அருளிச்செய்த என்னான்	11.1224
60	எம் பந்த வினையறுக்கும் கண்	11.1279
61	எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்டு எமையாளும் சம்பந்தன்	9.19.4
62	எம்பிரான்	11.1328
63	எம்மனையா எந்தையா என்னையாண்டு என் துயர் தவிர்த்த செம்மலர் நீள்முடி ஞானசம்பந்தன்	11.1211
64	எரியாய் இடும் பதிகம் ஆழி உலகத்து அழியாமற் காட்டினான்	11.1374
65	எவர்க்கும் மிக்க நன்னாவலர் பெருமான்	11.1257
66	எழில் அருகாசனி	11.1331
67	எழில் நீலநக்கற்கும் இன்பப் பூந்தண் புகலூர் முருகற்கும் தோழன்	11.1252

68	எழில் பூவரைஞான் மணித்தார் தழங்கத் துளிவந்த கண் பிசைந்தேங்கலும் எங்கள் அரன் துணையாங் கிளிவந்த சொல்லி பொற்கிண்ணத்தின் ஞானவமிர்தளித்த அளிவந்த பூங்குஞ்சியின் சொற் சிறுக்கன்	11.1254
69	எழில்ஞானன்	11.1344
70	எழிலாவடுதுறை நன்பொன் முத்தீச்செயப் பெற்றார்	11.1221
71	எழிற் காழியர் கோன்	11.1239
72	எளியன்	11.1325
73	என் தந்தை	11.1332
74	என்புனை தமிழ்கொண்டு இரங்கி என் உள்ளத்து அன்பினை அருளிய ஆண்டகை	11.1361
75	என்னுடைய கதி	11.1183
76	ஏழிசை யாழை எண்டிசை அறியத் துண்டப் படுத்த தண்டமிழ் விரகன்	11.1294
77	ஏழிசை வித்தகன்	11.1374
78	ஏற்ற வார் புகழ் ஞானசம்பந்தன்	11.1328
79	ஏனோரும் வானோரும் தாழும் சரணச் சதங்கைப் பருவத்தே பாலையும் நெய்தலும் பாடவலான்	11.1374
80	ஒண் சன்பைப் பிரான்	11.1268
81	ஒண்கலியைப் பொன்றுங் கவுணியன்	11.1296
82	ஒண்முத்தமிழ் பயந்தான்	11.1316
83	ஒப்பரிய தொழில் பல மிகுதர தமிழ் விரகன்	11.1359
84	ஒழியாது இன்புறுபொழில்சூழ் சண்பைமன்	11.1338
85	ஓங்கு புகழ்ச் சண்பையென்னும் ஒண் பதியில் உதித்தார்	11.1325
86	கடல்படு விடமடை கறைமணி மிடறுடை அடல்கரி உரியனை அறிவுடை அளவினன்	11.1325
87	கடற் கூடலின்வாய் வேந்தின் துயர் தவிர்த்தான்	11.1252
88	கடுவிடந் தீர்த்தார்	11.1220
89	கண்ணார் திருநுதலோன் கோலக்காவில் கரநொடியால் பண்ணார்தரப் பாடு சன்பையர் கோன்	11.1263

90	கத்தித் திரிபிறவிச் சாகரத்துள் ஆழாமே பத்தித் தனித்தெப்பம் பார்வாழத் தந்தபிரான்	11.1374
91	கதவடைத்தார்	11.1220
92	கதி	11.1279
93	கதிர்மதி நுழையும் படர்சடை மகுடத்து ஒருத்தியைக் கரந்த விருத்தனைப் பாடி முத்தின் சிவிகை முன்னாட் பெற்ற அத்தன்	11.1321
94	கம்மென் குதலைச் செவ்வாய் பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின் தையல் அருள்பெற் றனன்	11.1125
95	கமலத் தாரேயும் சென்னித் தமிழ் வரகன்	11.1368
96	கயலுடைப்புனல் வயல் வளத்தகு ஸழுமலப்பதிநாதன்	11.1342
97	கருதத் தவவருள் ஈந்தருள் ஞானசம்பந்தன்	11.1232
98	கரும்பினுக்கினிய புகழ்க் கண்ணுதல் விண்ணவன் அடிமேல் பரம்பவிரும் புவியவர்க்குப் பத்திமையை விளைத்தவன்	11.1325
99	கலிக்காழிப் பிரான்	11.1196
100	கலைத்தலைவன் சம்பந்தன்	11.1307
101	கலைபயில் நாவன்	11.1303
102	கவிநீரர் பெருமான்	11.1337
103	கவுணியர் குலபதி	11.1361
104	கவுணியர் தம் போரேறு	11.1374
105	கவுணியர் தலைவன்	11.1294
106	கவுணியர் தீபன்	11.1204
107	கவுணியர் நற்குலதிலகன்	11.1341
108	கவுணியர்கள் குலதீப சுபசரிதன்	11.1358
109	கவுனியர் தஞ்சீர் முதல்வன்	11.1352
110	கழுமல நாடன்	11.1306
111	கழுமலநற்பதி அதிபன்	11.1341
112	கழுமலநாதன்	11.1361
113	கள்ளம் பொழில் நனிபள்ளி தடங்கடமாக்கியதே வெள்ளம் பணி நெய்தலாக்கிய வித்தகன்	11.1286
114	களியுறு தேன் தார்க் கவுணியர் தீபன்	11.1248
115	கற்றாங்குரைத்த சம்பந்தன்	11.1218

116	கற்றொகு புரிசைக் காழியர் நாதன்	11.1325
117	கனமா மதிற் காழி ஞானசம்பந்தன்	11.1320
118	கனவண் கொடைநீடு அருகாசனி	11.1367
119	காதற் கவுணியன்	11.1324
120	காப்பயில் கவுணியர் தீபன்	11.1184
121	காமரு கவினார் கவுணியர் தலைவன்	11.1303
122	காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரர்	4.56.1
123	காரகிலின் தூமங் கமழ்மாடத் தோணிபுரத்தலைவன்	11.1282
124	காரங்கணை பொழிற் காழிக் கவுணியர் தீபன்	11.1241
125	காரார்பொழில் நீடிய சண்பையர்காவலன்	11.1335
126	காழி நன்னாடன்	11.1308
127	காழி நாட்டுக் கவுணியர் குலத்தை வாழத் தோன்றிய வண்டமிழ் விரகன்	11.1318
128	காழி நாடன்	11.1294
129	காழி நாதன்	11.1205
130	காழி மேவிய கொற்றவன்	11.1305
131	காழி மேவிய சீர்ஞான சம்பந்தன்	11.1302
132	காழிக் குலமதலை	11.1324
133	காழிச்சுரன்	11.1298
134	காழிஞான பெருமான்	11.1354
135	காழித் தமிழாகரன்	11.1277
136	காழித்தலைவன்	11.1225
137	காழிநாதன்	11.1343
138	காழியர்கோன்	9.19.4
139	குஞ்சரத் தெண்டலைக்குந் தலைவன்	11.1293
140	குடவெள்வளைகள் தரளஞ் சொரியுங் கடல் புடை சூழ்ந்த தராய் மன்னன்	11.1185
141	குண்டகழ் சூழ் தரு கொச்சைத் தலைவன்	11.1236
142	குராமலர்பொழில் கொச்சைவயநாதர்	11.1334
143	குலமறையோர் கோமான்	11.1374
144	குவளைக் கருங்கண் கொடியிடை துன்பந் தவிரவன்று துவளத் தொடுவிடந் தீர்த்த தமிழின் தொகைசெய்தவன்	11.1285
145	குழலியல் இன்கவி சம்பந்தன்	11.1219
146	குறுமனம் உள் கலவாத் தமிழாகரன்	11.1228

147	கூர்தவ சுந்தரன்	11.1352
148	கொங்கமலத் தண் காழிக் கோ	11.1326
149	கொங்கு தங்குங் குஞ்சி கூடாப் ப்ருவத்துக் குன்றவில்லி பங்கு தங்கும் மங்கை தன்னருள் பெற்றவன்	11.1284
150	கொச்சை நாதன்	11.1213
151	கொச்சையர் கோன்	11.1350
152	கொச்சையார் அதிபதி	11.1351
153	கொச்சைவயத்தரசு	11.1260
154	கொச்சைவயவர்	11.1234
155	கொடித்தேர் அவுணர் குழாம் அனலூட்டிய குன்றவில்லி அடித் தேர் கருத்தின் அருகாசனி	11.1269
156	கொடிநீடு விடையுடைய பெருமானை யடிபரவு குணமேதை	11.1358
157	கொழுந்தேன் நாறும் அலங்கல் தமிழாகரன்	11.1249
158	கோலக்கா தாளம் ஒற்றிப் பெற்றார்	11.1221
159	சண்பை நம்பெருமான்	11.1258
160	சண்பை நாதன்	11.1263, 11.1267
161	சண்பைத் திகழ் மாமறையோர் அதிபன்	11.1367
162	சண்பையர் காவலன்	11.1283, 11.1284 11.1285, 11.1286 1287, 1288, 1289 1290, 1291, 1292
163	சதுர்மாமறை நாவளர் சைவசிகாமணி	11.1339
164	சதுரன்	11.1352
165	சந்தார் அகலத்து அருகாசனி	11.1200
166	சமண் கையர் தம்மையழியத் துரந்தரங்கச் செற்றான்	11.1301
167	சம்பந்தன்	11.1199, 11.1283, 11.1284, 11.1285, 11.1286, 1287, 1288, 1289, 1290 1291, 1292, 11.1306, 11.1323, 11.1366

168	சயமிகுத்து அருகரை முருக்கிய தமிழ் பயிற்றிய நாவன்	11.1342
169	சிந்தையுள்ளே துறுகின்ற பாதன்	11.1215
170	சிந்தையைத் தேனைத் திருவாவடுதுறையுள் திகழும் எந்தையைப் பாடலிசைத்துத் தொலையா நிதியமெய்தித் தந்தையைத் தீத்தொழில் மூட்டிய கோன்	11.1266
171	சிரபுரத்தான்	11.1207
172	சிவனருள் பெற்ற நற்றமிழ் விரகன்	11.1312
173	சீர் மிகுஞானசம்பந்தன்	11.1311
174	சீர்த்தத்துவன்	11.1324
175	சீரார் கவுணியர்க்கோர் சேய்	11.1324
176	சீரார் கழுமலத்தார் கோ	11.1324
177	சீரேயும் கொச்சைவயன்	11.1368
178	சீலத் திருஞானசம்பந்தன்	11.1324
179	சுரும்பின் மலர்த் தமிழாகரன்	11.1253
180	சூடு நற்றார்த் தமிழாகரன்	11.1226
181	சூழொளிய கோதை வேல் தென்னன்றன் கூடற் குலநகரில் வாதில் அமணர் வலிதொலையக் காதலால் புண்கெழுவு செம்புனல் ஆறோடப் பொருது அவரை வண் கழுவில் வைத்த மறையோன்	11.1324
182	செங்கமலத் தண் தார்த் திருஞானசம்பந்தன்	11.1326
183	செந்தமிழ் உறைப்புப் பாடி அடைப்பித்தார்	5.50.8
184	செந்தமிழாகரன்	11.1251
185	செந்தமிழால் திடமன்னு மாமதில் சண்பைத் தலைவன்	11.1202
186	செந்தாமரையின் வடமன்னு நீள்முடியான்	11.1202
187	செயநிலவு மாடம்மதில் புடை தழுவு வாசமலி செறிபொழில்சு லாவிவளர் சிரபுர சுரேசன்	11.1348
188	செயலார் வரை மதிற் காழியர் கோன்	11.1276
189	செழுமலயத் தமிழ் கேசரி	11.1330
190	செழுமலர்க் கொன்றையுங் கூவிள மலரும் விரவிய சடைமுடி யடிகளை நினைந்திட்டழுமலர்க் கண்ணிணை அடியவர்	7.58.10
191	சேரும் புகழ்த் திருஞானசம்பந்தன்	11.1280

192	சைவ சிகாமணி	11.1192, 11.1296, 11.1361
193	சைவத்தவர் அரசு	11.1324
194	சோலைத் திருவாவடுதுறையில் செம்பொற் கிழி ஒன்று அருளாலே பெற்றருளும் ஐயன்	11.1374
195	ஞாலத்தணி புகழ் ஞானசம்பந்தன்	11.1327
196	ஞானசம்பந்தன்	11.1125, 11.1231, 11.1271, 11.1297, 11.1298, 11.1317, 11.1365
197	ஞானசுந்தரன்	11.1343
198	ஞானத் திரளாகி முன்னின்ற செம்பல்	11.1374
199	ஞானந் திரளையிலே உண்டார்	11.1305
200	தகட்டில் திகழ் மணிப்பூண் தமிழாகரன்	11.1260
201	தண்டமிழ விரகன்	11.1361
202	தணி மனத்தருளுடைத் தவநெறிக்கு அமிர்தம்	11.1325
203	தமிழ் நலத் தொகையினில் தகு சுவைப்பவன்	11.1325
204	தமிழ் விரகன்	11.1363
205	தமிழ்கடல்	11.1341
206	தமிழ்ஞானசம்பந்தன்	7.78.10
207	தமிழர் தங்கள் கோனாட்டு அருகர் குழாம் வென்ற கொச்சையர் கோன்	11.1217
208	தமிழ்விரகன்	11.1222, 11.1216, 11.1279
209	தருகெழு முகில்வண் கைத்தகு தமிழ்விரகன்	11.1370
210	தவமெய்க் குலதீபன்	11.1367
211	தளர்வில் புகலியரதிபன்	11.1347
212	தன்கோமானைத் தான்செய்த பச்சைப் பதிகத் துடன்பதினா றாயிரம்பா வித்துப் பொருளை விளைக்க வலபெருமான்	11.1374
213	தனமே தருபுகழ்ச் சைவ சிகாமணி	11.1259
214	தாதையொடு வந்த வேதியச் சிறுவன்	11.850
215	தாளின் சரணந் தரும் சன்பை நாதன்	11.1243
216	திகழ் இணையார் செங்கரன்	11.1338

217	திகழ் சிரபுரமன்	11.1356
218	திகழுங்கீர்த்திச் சண்பையர்கோன்	11.1340
219	திண்ணற் றொடையற் கவுணியர் தீபன்	11.1279
220	திரள் புயத்தண்ணல்	11.1323
221	திருக்கழுமலத்துப் பையரவசைத்த தெய்வ நாயகன் தன்னருள் பெற்ற பொன்னணி குன்றம்	11.1315
222	திருஞானசம்பந்தன்	11.1332, 11.1340
223	திருவளர் புகலி விளங்கப் பிறந்த வளங்கொள் சம்பந்தன்	11.1300
224	திருவளர் விப்ர சிகாமணி	11.1330
225	திருவாளன்	11.1331
226	தீந்தமிழோர் கண்ணென ஓங்கும் கவுணியர் தீபன்	11.1208
227	துத்த மொழிக்குதலைத் தூயவாய் நன்னுதலி நித்திலப் பூண்முலைக்கும் நீண்டதடங் கண்ணினுக்கும் கொத்தார் கருங்குழற்கும் கோலச்செங் கைம்மலர்க்கும் அத்தா மரையடிக்கும் அம்மென் குறங்கினுக்கும் சித்திரப்பொற் காஞ்சி செறிந்தபேர் அல்குலுக்கும் முத்தமிழ்நூல் எல்லாம் முழுதுணர்ந்த பிள்ளையார்க் கொத்த மணமிதுவென் றோதித் தமர்கள்எல்லாம் சித்தங் களிப்பத் திருமணஞ்செய் காவணத்தே அற்றைப் பொழுதத்துக் கண்டுட னேநிற்கப் பெற்றவர்க ளோடும் பெருமணம்போய்ப் புக்குத்தன் அத்தன் அடியே அடைந்தான்	11.1374
228	துதிக்கத் தகு சண்பை நாதன்	11.1227
229	துறவன்	11.1325
230	துன்றும் ஞானத்தெம்பிரான்	11.1353
231	துன்னிய கா அமர் சண்பையர் நாதன்	11.1186
232	தெருளாத் தென்னவன் ந்மெல்லாம் திருநீறு பாலித்த மன்னன்	11.1374
233	தெவ்வருயிர் அஞ்சத் திகழ்ந்த அடலுரும்	11.1324
234	தென் கோலக்காவில் தாளம் பெற்றான்	11.1374
235	தென் புகலிக்கரசு	11.1331

236	தேசம் முழுதும் மழைமறந்து ஊண்கெடச் செந்தழற்கை ஈசன் திருவருளால் எழில் வீழி மிழலையின் வாய்க்காசின் மழை பொழிந்தான்	11.1222
237	தொகு புகழ்சேர் திர்ஞானசம்பந்தன்	11.1349
238	தொழுநீரவைகைக் குழுவா எதிர்ந்த உறிகைப் பறிதலைக் குண்டர் தங்கள் கழுவாவுடலம் கழுவினவாக்கிய கற்பகம்	11.1209
239	தோடுடைய செவியன் என்றும் பீடுடைய பெம்மான் என்றும் கையில் சுட்டிக் காட்டியவர்	11.850
240	தோணி புரத்துக்கிறைவன்	11.1272
241	நகரங் கெடப் பண்டு திண்தேர் மிசை நின்று நான்மறைகள் பகரங் கழலவனைப் பதினாறாயிரம் பதிகம் மகரங் கிளர் கடல் வையம் துயர்கெட வாய் மொழிந்த நிகரங்கிலி	11.1196
242	நந்தமர் நீர்க் கண்ணியன்	11.1231
243	நலமேறிய புகழ்ச் சம்பந்தன்	11.1197
244	நல்ல செந்தமிழால் ஒப்புடை மாலைத் தமிழாகரன்	11.1278
245	நல்லிசை ஞானசம்பந்தன்	7.67.5
246	நள்ளாற்றரசு பணித்திட சுடரொளிவாய்த் தன்மையைப் படைத்தார்	11.1272
247	நற் பா மொழி எழில் ஞானசம்பந்தன்	11.1210
248	நற்றமில் வல்ல ஞானசம்பந்தன்	7.55.4
249	நற்றமிழ் விரகன்	11.1303
250	நற்றவத்தோர் கற்பகம்	11.1324
251	நற்றொகு கீர்த்தி ஞானசம்பந்தன்	11.1325
252	நன்னிதி	11.1249
253	நனி புகலி நாதன்	11.1363
254	நா மதிக்கும் புகழ் ஞானசம்பந்தன்	11.1364
255	நாடேறும் புகழ் ஞானசம்பந்தன்	11.1371
256	நாதன் நனிபள்ளி சூழ்நகர் கானகமாக்கியதே போதின் மலி வயலாக்கிய கோன்	11.1198
257	நாமுகந்தேத்திய ஞானசம்பந்தன்	11.1240

258	நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்	7.62.8
259	நாற்றிசைக் கவிஞானசம்பந்தன்	11.1365
260	நிகரில் உத்தமன்	11.1325
261	நித்தன்	11.1324
262	நித்திலங்கள் மாடத் தொளிரும் மறைக்காட்டிறை கதவைப்பாடி அடிப்பித்த பண்புடையான்	11.1374
263	நிலவியவைகையாற் றேடிட்டு வானீர் எதிரோட்டும் செய்கையால் மிக்க செயலுடையான்	11.1374
264	நிலவு முருகர்க்கும் நீலநக்கர்க்கும் தொலைவில் புகழ்ச் சிறுத்தொண்டர்க்கும் குலவிய தோழமையாய்த் தொல்லைப் பிறப்பறுத்த சுந்தரன்	11.1324
265	நிறைகுணத்தொருவன்	11.1325
266	நீடலங்காரத்து எம்பெருமான்	9.5.12
267	நீடும் திருவோத்தூர் ஆண்பனையைப் பெண்பனை ஆகென்னும் பெருவார்த்தை தான் உடைய பிள்ளை	11.1374
268	நீதிகெட்டார் குலையக் கழுவின் குழுக்கண்டவன்	11.1262
269	நீள்வயல் காழையர் கோன்	11.1250
270	நேர்வந்த புத்தன் தலையைப் புவிமேற் புரள்வித்த வித்தகப் பாடல் விளம்பினான்	11.1374
271	பண்டிதர் இன்பன்	11.1361
272	பத்திச் சிவமென்று பாண்டிமா தேவியொடும், கொற்றக் கதிர்வேல் குலச்சிறையுங் கொண்டாடும் அற்றைப் பொழுதத் தமணரிடு வெந்தீயைப் பற்றிச் சுடுகபோய்ப் பாண்டியனை என்னவல்லான்	11.1374
273	பதிகப் பெருவழி காட்டிப் பருப்பதக் கோன் பயந்த மதியத் திருநுதல் பங்கன் அருள் பெற வைத்த எங்கள் நிதி	11.1183
274	பதிகம் பல பாடி நீடிய பிள்ளை	11.1299
275	பயில் செந்தமிழாகரன்	11.1357
276	பரசமய கோளரி	11.1361
277	பலமை தரும் தமிழின் வடகலை விடங்கன்	11.1329

278	பறிதலையோர் மாலுற்றழுந்த அவதரித்தோன்	11.1283
279	பன்மறையோர்செய்தொழிலும் பரம சிவாகம விதியும் நன்மறையின் விதிமுழுதும் ஒழிவின்றி நவின்றவன்	11.1325
280	பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு வாடி வாட்டம் தவிர்ப்பார்	5.50.7
281	பாடிய செந்தமிழாற் பழங்காசு பரிசில் பெற்ற நீடிய சீர்த் திருஞானசம்பந்தன்	11.1261
282	பாணர் யாழை முரித்தான்	11.1374
283	பாணன் தன் யாழின் ஒலியை உடைத்தார்	11.1272
284	பாமாலை யாழ்முரியப் பாணழியப் பண்டருள் செய்பாமான சுந்தரன்	11.1350
285	பார் மண்டலத்தினிற் பன்னிரு பேரொடு மன்னி நின்ற நீர் மண்டலப் படப்பைப் பிரமாபுரம் நீறணிந்த கார் மண்டலக் கண்டத்து என் தண்டந்தோளன் கருணைபெற்ற தார் மண்டலமணி சம்பந்தன்	11.1182
286	பாரகத்தே விரவும் பரமத கோளரி	11.1185
287	பாலித்தெழில் தங் பார் முகம் உய்ய அவதரித்தோன்	11.1283
288	பாழி அமணைக் கழுவேற்றினான்	11.1374
289	பிணங்கலை நீர் எதிர் ஓடஞ் செலுத்தினார்	11.1220
290	பிரமாபுரத்து மற்வறு பொற்கழல் ஞானசம்பந்தன்	11.1223
291	பிரமாபுரநகர் மன்னன்	11.1183
292	பிரான்	11.1333, 11.1334
293	பிள்ளை	11.1325
294	புகலி போனகம் அருந்தினார்	11.1221
295	புகலிக்கரசு	11.1330
296	புகலித் தமிழாகரன்	11.1233
297	புகலியர் அதிபன்	11.1346
298	புகலியர் கோன்	11.1247
299	புகலியரதிபன்	11.1352
300	புகலியர்மன்	11.1345
301	புகழ் எழிலாரும் கவுணியர்தீபன்	11.1338

302	புண்டலைக் குஞ்சரப் போர்வையர் கோயிற் புதவடைக்கும் ஒண்டலைத் தண்டமிழ்க் குண்டாசனி	11.1289
303	புரிபுன் சடையோன் திருவருள் பெற்ற இருபிறப்பாளன்	11.1294
304	புறவ மன்	11.1244
305	புனற்காழிச் சம்பந்தன்	11.1304
306	புனிதன்	11.1346
307	புனைதமிழ் விரகன்	11.1346
308	பூம்புகலி நாயகன்	11.1324
309	பெரியன்	11.1325
310	பெருந்தகை	11.1221
311	பேரரவம் வரும் பத நான்மறைக் காழித் தலைவன்	11.1242
312	பொருந்திய ஞானத் தமிழாகரன்	11.1275
313	பொருளென என்னைத்தன் பொற்கழல் காட்டிப் புகுந்தெனக்கிங்கு அருளிய சீர்த் திருஞானசம்பந்தன்	11.1265
314	பொழில் சுலாவிய புகலியர் பெருமான்	11.1328
315	பொற்பமர் தோளன்	11.1303
316	பொற்புரிசை திருந்திய தோணி புரத்துக்கிறைவன்	11.1275
317	பொன்மாடப் புகலிவேந்தன்	11.1353
318	பொன்மாலை மார்பன்	11.1304
319	பொன்னார் மதில் சூழ் புகலிக்கு அரசு	11.1224
320	பொன்னி வள நாடன்	11.1324
321	போகமார்ப்பைக் காந்துங் கனலிற் குளிபடுத்தான்	11.1252
322	போற்றுவார் இடர் பாற்றிய புனிதன்	11.1328
323	போனகம் முன் நுகர்ந்தார்	11.1325
324	மஞ்சணவுகின்ற மணிமாட வேணுபுர நாதன்	11.1333
325	மண்ணில் திகழ் சண்பை நாதன்	11.1279
326	மணிபடு பொற்கழல் ஞானசம்பந்தன்	11.1273
327	மணிவளைத்தோள் அருகாசனி	11.1246
328	மதிற்புறவ் முதுபதிமன்	11.1359
329	மதுரத் தமிழ் விரகன்	11.1345

330	மயிலுகுத்த கண்டினஞ் சூழ்ந்த வளை பிரம்போர் கழுவாவுடலம் விண்டினஞ் சூழக் கழுவின ஆக்கிய வித்தகன்	11.1187
331	மயிலேந்திய வள்ளல் தன்னை அளிப்ப மதிபுணர்ந்த எயிலேந்திய சண்பை நாதன்	11.1245
332	மருகல் விடம் தீர்த்த பிரான்	11.1374
333	மருவலக்கு உருமு	11.1325
334	மலர்க்கமலத்து அரும் பத ஞானசம்பந்தன்	11.1242
335	மலைமகள் புதல்வன்	11.1303
336	மழவன் சிறுமதலை வான்பெருநோய் தீர்த்த குழகன்	11.1374
337	மறை பயில் திப்பிய வாசகன்	11.1330
338	மறைஞானமுணர் பரமகுருநாதன்	11.1348
339	மறைமுதல்வன்	11.1372
340	மறையவர் பெருமான்	11.1334
341	மறையவர்க்கொருவன்	11.1325
342	மனத்தெழு பொற்கழல் ஞானசம்பந்தன்	11.1237
343	மன்னர் தொழுதிறைஞ்சும் மாமணி	11.1324
344	மன்னிய மோகச் சுவையொளி ஊறோசை நாற்றமென்றிப் பன்னிய ஐந்தின் பதங்கடந்தோர்க்குந் தொடர்வரிய பொன்னியல் பாடகம் கிங்கிணிப் பாதர்	11.1186
345	மாடக் கழுமலத்தான்	11.1231
346	மாதமிழ் விரகன்	11.1362
347	மாதர் மதனன்	11.1324
348	மாமறைக்காடர் தம் கோயிற் கதவினை அன்று அடைத்தார்	11.1272
349	மாழை நோக்கி மலைமகள் புதல்வன்	11.1294
350	மானசம்பந்தம் மண்மிசைத் துறந்த ஞானசம்பந்தன்	11.1315
351	மானமறையவற்றின் வான்பொருள்	11.1324
352	மிக மத வெற்றிகொள் வாரணம்	11.1330
353	மிகு சைவசிகாமணி	11.1355
354	மிகு பர சமய வென்ற அரி	11.1329
355	மிகு பரசமய கோளரி	11.1348
356	மிகு பொழிலணி தரு புகலிமன்	11.1373

357	மிகு வேதியர் சிகாமணி	11.1333
358	மிகுநல்ல பொழில் சுலவு தொல்லை அணி புகலிநாதன்	11.1372
359	மிண்டி மீனுகளும் அளறு வயற் சண்பை நாதன்	11.1212
360	முத்தமிழின் செஞ்சொற் பொருள் பயந்த சிங்கம்	11.1324
361	முத்திப் பகவ முதல்வன் திருவடியை அத்திக்கும் பத்தரெதிர் ஆணைநம தென்னவலான்	11.1374
362	முத்தீ வேள்வி நான்மறை வளர ஐவேள் வுயர்த்த அறுதொழிலாளன்	11.1294
363	முதிர்பயன் நிலவு ஞானதமிழ் விரகன்	11.1348
364	மெய்த்திருஞானசம்பந்தன்	11.1334
365	மென் தார்த் திருந்தும் புகழ்ச்சண்பை ஞானசம்பந்தன்	11.1264
366	மேதகு புகலிமன்	11.1362
367	மேதகு புகழினான்	11.1351
368	மொய்த்தொளிசேர் கொச்சைச் சதுரன்	11.1374
369	வகை தகு முத்தமிழாகரன்	11.1330
370	வண் மாட மதிற் காழிக் கோன்	11.1310
371	வண்சம்பந்த மாமுனி	11.1350
372	வண்புகலிக் கவிஞன்	11.1357
373	வண்புகழரு காசனி	11.1345
374	வண்புகழாளி	11.1343
375	வம்பறா வரிவண்டு மணம் நாற மலரும் மது மலர் நற் கொன்றையான் அடியலாற் பேணா எம்பிரான் சம்பந்தன்	7.39.1
376	வயலார் மருகல் பதி தன்னில் வாலவார் கடியுண்டு அயலா விழுந்த அவனுக்கு இரங்கி அறிவழிந்த கயலார் கருங்கண்ணி தன் துயர் தீர்த்த கருணை வெள்ளப்புயலார் தருகையினான்	11.1230
377	வயற் காழிப் பிள்ளை	11.1319
378	வயற்புகலித் தாளரிக்கும் அரியான் அருள் பெற்ற பரசமயக் கோளரி	11.1235
379	வர்த்தமா னீசர் கழல்வணங்கி வாழ்முருகன் பத்தியை ஈசன் பதிகத்தே காட்டினான்	11.1374

380	வரமார் பொழில் திருஞானசம்பந்தன்	11.1281
381	வருவார் உருவின் வழிவழி வைத்த வனமருந்தும் திருவார் இருந்த செழுநகர்ச் செவ்வித் திருவடிக்காள் தருவான் தமிழாகரன்	11.1256
382	வரைகொண்ட மாமதில் சண்பைத்தலைவன்	11.1201
383	வலகலை வித்தகன்	11.1330
384	வல்லமணைப் பண்ணைக் கழுவின் நுதி வைத்தான்	11.1279
385	வழிகெழு குண்டர்க்கு வைகைக் கரையன்று வான்கொடுத்த கலிகெழு திண்தோள் கவுணியர் தீபன்	11.1193
386	வளம் மலி தமிழிசை வடகலை மறைவல முளரி நன் மலரணி தரு திரு முடியினன்	11.1325
387	வள்ளல்	11.1324, 11.1325, 11.1374
388	வளைபடு தண்கடற் கொச்சை வயவன்	11.1270
389	வன் கேழலின் பின்பு சென்ற வேட்டுவர் கோலத்து வேதத் தலைவனை மெல்விரலால் தோட்டியல் காதன் இவனென்று தாதைக்குச் சூழ்விசும்பில் காட்டிய கன்று	11.1194
390	வன்பகையாமக் குண்டரை வென்றோன்	11.1344
391	வாணிலவும் புனலும் பயில் செஞ்சடை வண் கருணாகரனை மலைமாதுமையோடும் இவனாவானென முன்னாளுரை செய்தோன்	11.1331
392	வாம்புகழ் சேர் சம்பந்தன்	11.1313
393	வான் தவர் சூழுந் தமிழாகரன்	11.1274
394	விடந்திளைக்கும் அரவல்குல் மென் கூந்தல் பெருமணத்தின் வடந்திளைக்குங் கொங்கை புல்கிய மன்மதன்	11.1292
395	வித்தகத்தால் ஓங்கு விடலை	11.1324
396	வித்தகப் பாடல் திறத்தடியார்	11.889
397	விதம் பெருகு புனித குணன்	11.1329
398	வியல் இயற்றிய திருமருகலில் கொடுவிடம் அளித்தருள் நீதன்	11.1342
399	வீழிமிழலைப் படிக்காசு கொண்ட பிரான்	11.1374

400	வீறதார் தமிழ்வரகன்	11.1351
401	வெங்குரு நாதன்	11.1238
402	வெண்பிறையோடு இணங்கிய மாடச் சிரபுரத்தான்	11.1220
403	வெய்யவிடம் மேவி இறந்தஅயில் வேற்கண் மடமகளை வாவென் றழைப்பித்திம் மண்ணுலகில் வாழ்வித்த சீர்நின்ற செம்மைச் செயலுடையான்	11.1374
404	வேனுத்தலைவன்	11.1188
405	வைகை அமண் மலைந்தான்	11.1322
406	வைகையில் தொல்லமணர் பற்செறியாவண்ணங் காத்த சம்பந்தன்	11.1314
407	வைகையிலமணரை வாது செய்தறுத்த சைவ சிகாமணி	11.1306
408	மருவினிய கொள்ளம்புதூர்க் குழகன் நாவாயது கொடுப்ப உள்ளமே கோலாக ஊன்றினான்	11.1374
409	முல்லைநகை உமைதன் மன்னு திருவருளை முந்தி உறுபெரிய செந்தண் முனிவன்	11.1372

திருஞானசம்பந்தர் பதிகங்கள் - பண்முறைப் பகுப்பு

	திருத்தலம்	திருப்பதிகம்	பாடல் வகை	திருமுறை
1.	**பண் - குறிஞ்சி**			
1.	கோயில்	கற்றாங் கெரி		1
2.	திருவெங்குரு	காலைநன் மாமலர்		1
3.	திருப்புறவம்	எய்யா வென்றித்		1
4.	சீர்காழி	நல்லார் தீமேவுந்		1
5.	“	உரவார் கலையின்		1
6.	திருக்கழுமலம்	அயிலுறு படையினர்		1
7.	“	அரனை உள்குவீர்	திருவிருக்குக்குறள்	1
8.	திருக்கண்ணார்கோயில்	தண்ணார் திங்கள்	“	1
9.	திருஅன்னியூர்	மன்னி யூரிறை		1
10.	திருச்சிராப்பள்ளி	நன்று டையானை		1
11.	திருநல்லூர்	கொட்டும் பறை		1
12.	திருவிடைமருதூர்	தோடோர் காதினன்	“	1
13.	திருநல்லம்	கல்லால் நிழல்மேய		1
14.	திருஅம்பர்மாகாளம்	அடையார் புரமுன்று		1
15.	திருவீழிமிழலை	இரும்பொன் மலை		1
16.	“	வாசி தீரவே	“	1
17.	திருநாகைக்காரோணம்	புனையும் விரிகொன்றை		1
18.	திருவாரூர்	சித்தந் தெளிவீர்காள்	“	1
19.	திருஆலவாய்	நீலமா மிடற்று	“	1
20.	திருஆப்பனூர்	முற்றுஞ் சடைமுடிமேல்		1
21.	திருப்பரங்குன்றம்	நீடலர் சோதி		1
22.	திருக்குற்றாலம்	வம்பார் குன்றம்		1
23.	திருஎருக்கத்தம்புலியூர்	படையார்தரு பூதப்		1
24.	திருமுதுகுன்றம்	நின்று மலர்தூவி	“	1
25.	திருவடுகூர்	சுடுகூர் எரிமாலை		1
26.	திருஇலம்பையங்- -கோட்டூர்	மலையினார் பருப்பத		1
27.	திருஇடைச்சுரம்	வரிவள ரவிரொளி		1
28.	திருக்கழுக்குன்றம்	தோடுடையா னொருகாதில்		1
29.	திருஅச்சிறுபாக்கம்	பொன் திரண்டன்ன		1
2.	**பண் - பஞ்சமம்**			
1.	திருப்பிரமபுரம்	இறையவ னீசன்		3
2.	திருப்பனந்தாள்	கண்பொலி நெற்றியினான்		3
3.	திருக்குடமூக்கு	அரவிரி கோடல்		3
4.	திருவேட்டக்குடி	வண்டிரைக்கும் மலர்		3
5.	திருச்செங்காட்டங்குடி	பைங்கோட்டு மலர்		3

6.	திருச்சாத்தமங்கை	திருமலர்க் கொன்றை		3
7.	திருப்பெருவேளூர்	அண்ணாவும் கழுக்குன்றும்		3
8.	திருவெண்டுறை	ஆதிய னாதிரையன்		3
9.	திருக்கச்சிநெறிக்- -காரைகாடு	வாரணவு முலை		3
10.	திருவொற்றியூர்	விடையவன் விண்ணு		3
11.	திருவக்கரை	கறையணி மாமிடற்றான்		3

3. பண் - வியாழக்குறிஞ்சி

1.	திருப்புகலி	ஆடலரவு அசைத்தான்		1
2.	திருச்சிரபுரம்	வாருறு வனமுலை		1
3.	திருக்கழுமலம்	பந்தத்தால் வந்தப்பால்	திருத்தாளச்சதி	1
4.	"	காட தணிகலங்	மொழிமாற்று	1
5.	"	பிரம புரத்துறை	ஏகபாதம்	1
6.	"	ஓருரு வாயினை	திருவெழுகூற்றிருக்கை	1
7.	திருக்கடைமுடி	அருத்தனை அறவனை		1
8.	திருவையாறு	பணிந்தவர் அருவினை	திருவிராகம்	1
9.	திருவிடைமருதூர்	மருந்தவன் வானவர்		1
10.	"	நடைமரு திரிபுரம்		1
11.	"	விரிதரு புலியுரி		1
12.	திருவீழிமிழலை	அலர் மகள்	திருவிராகம்	1
13.	திருச்சிவபுரம்	இன்குர லிசைகெழும்		1
14.	"	கலைமலி அகல்		1
15.	திருஇராமனதீச்சரம்	சங்கொளிர் முன்கையர்		1
16.	திருவாரூர்	பாடலன் நான்மறை		1
17.	திருப்பாதாளீச்சரம்	மின்னியல் செஞ்சடை		1
18.	திருவலிவலம்	பூவியல் புரிகுழல்	திருவிராகம்	1
19.	திருக்கொடிமாடச்- -செங்குன்றூர்	வெந்தவெண் நீறணிந்		1
20.	திருவல்லம்	எரித்தவன் முப்புரம்		1
21.	திருமாற்பேறு	குருந்தவன் குருகவன்		1
22.	திருஊறல்	மாறில் அவுணர்		1
23.	திருக்கள்ளில்	முள்ளின்மேல் முதுகூகை		1
24.	திருப்பருப்பதம்	சுடுமணி யுமிழ்நாக		1
25.	பொது	அவ்வினைக் கிவ்வினை	திருநீலகண்டப்பதிகம்	1

4. பண் - கௌசிகம்

1.	திருக்கழிப்பாலை	வெந்த குங்குலிய		3
2.	சீர்காழி	சந்த மார்முலை		3
3.	"	யாமாமாநீ யாமாமா	திருமாலமைமாற்று	3

7. பண் - நட்டபாடை

1.	கீ.திருக்காட்டுப்பள்ளி	செய்யருகே புனல்பாய		1
2.	திருப்பிரமபுரம்	தோடுடைய செவியன்		1
3.	திருவேணுபுரம்	வண்டார்கு ழலரிவை		1
4.	திருப்புகலியும் திருவீழிமிழலையும்	மைம்மரு பூங்குழல்	வினாவுரை	1
5.	திருநின்றியூர்	சூலம்படை சுண்ணப்		1
6.	திருவியலூர்	குரவங்கமழ் நறுமென்		1
7.	திருநெய்த்தானம்	மையாடிய கண்டன்		1
8.	திருஆவூர்ப்பசுபதீச்சுரம்	புண்ணியர் பூதியர்		1
9.	திருநள்ளாறும் திருஆலவாயும்	பாடக மெல்லடி	வினாவுரை	1
10.	திருவீழிமிழலை	சடையார்புன லுடையா		1
11.	"	தடநிலவிய மலை		1
12.	திருச்சிவபுரம்	புவமளி கனல்	திருவிராகம்	1
13.	திருப்புகலூர்	குறிகலந்த இசை		1
14.	திருமருகல்	அங்கமும் வேதமும்	வினாவுரை	1
15.	திருஇடும்பாவனம்	மனமார் தரு		1
16.	திருமறைக்காடு	சிலைதனை நடுவிடை	திருவிராகம்	1
17.	திருக்கொடுங்குன்றம்	வானிற்பொலி வெய்தும்		1
18.	திருமுதுகுன்றம்	மத்தாவரை நிறுவி		1
19.	திருவண்ணாமலை	உண்ணாமுலை உமை		1
20.	திருவலிதாயம்	பத்தரொடு பலரும்		1

8. பண் - தக்கராகம்

1.	திருவேட்களம்	அந்தமும் ஆதியும்	1
2.	திருப்புகலி	விதியாய் விளைவாய்	1
3.	சீர்காழி	பூவார் கொன்றை	1
4.	"	அடலே றமருங்	1
5.	திருக்கோலக்கா	மடையில் வாளை	1
6.	திருப்புன்கூர்	முந்தி நின்ற	1
7.	திருவாழ்கொளிப்புத்தூர்	பொடியுடை மார்பினர்	1
8.	திருவையாறு	கலையார் மதியோடு	1
9.	திருஅன்பிலாலந்துறை	கணைநீடெரி மாலர	1
10.	திருப்பாச்சிலாச்சிராமம்	துணிவளர் திங்கள்	1
11.	திருக்கற்குடி	வடந்திகழ் மென்முலை	1
12.	திருச்சோற்றுத்துறை	செப்ப நெஞ்சே	1
13.	திருவிடைமருதூர்	ஓடேகலன் உண்பதும்	1
14.	திருமயிலாடுதுறை	கரவின் றிநன்மா	1
15.	திருச்செம்பொன்பள்ளி	மருவார் குழலி	1
16.	திருப்பாம்புரம்	சீரணி திகழ்	1

17.	திருவீழிமிழலை	அரையார் விரிகோவண		1
18.	திருப்பேணுபெருந்துறை	பைம்மா நாகம்		1
19.	திருநறையூர்ச்சித்தீச்சரம்	ஊரு லாவு		1
20.	திருப்பனையூர்	அரவச் சடைமேல்		1
21.	திருப்புத்தூர்	வெங்கள் விம்மு		1
22.	திருவதிகைவீரட்டானம்	குண்டைக் குறட்பூதம்		1
23.	திருக்குரங்கணில்முட்டம்	விழுநீர் மழுவாள்		1
24.	திருவாலங்காடு	துஞ்ச வருவாருந்		1

9. பண் - நட்டராகம்

1.	திருச்சிரபுரம்	அன்ன மென்னடை		2
2.	சீர்காழி	நம்பொருள்நம் மக்களெ		2
3.	திருக்கழுமலம்	பிறையணி படர்சடை	திருவிராகம்	1
4.	திருக்கோடிக்கா	இன்றுநன்று நாளை		2
5.	திருமாந்துறை	செம்பொன் னார்தரு		2
6.	திருவலஞ்சுழி	என்ன புண்ணியம்		2
7.	திருத்துருத்தி	வரைத்தலைப் பசும்	திருவிராகம்	2
8.	திருஅம்பர்மாகாளம்	புல்கு பொன்நிறம்		2
9.	திருவிற்குடிவீரட்டம்	வடிகொள் மேனியர்		2
10.	திருக்கீழ்வேளூர்	மின்னுலாவிய சடை		2
11.	திருவாரூர்	பருக்கை யானை	திருவிராகம்	2
12.	திருக்கடிக்குளம்	பொடிகொள் மேனி		2
13.	திருக்கோட்டூர்	நீலமார் தரு		2
14.	திருவாய்மூர்	தளிரிள வளரென		2
15.	திருக்கேதீச்சரம்	விருது குன்றமா		2
16.	திருவாடானை	மாதோர் கூறுகந்		2
17.	திருக்கோவலூர்வீரட்டம்	படைகொள் கூற்றம்	திருவிராகம்	2

10. பண் - யாழ்மூரி

1.	திருப்பிரமபுரம்	மாதர் மடப்பிடியும்		1

11. பண் - தக்கேசி

1.	திருப்பல்லவனீச்சரம்	அடையார்தம் புரங்கள்		1
2.	திருப்புறவம்	நறவந் நிறைவண்டு		1
3.	திருச்சண்பைநகர்	பங்க மேறுமதி		1
4.	திருக்கழுமலம்	எரியார் மழுவொன்று	பல்பெயர்பத்து	1
5.	திருப்பழனம்	வேதமோதி வெண்ணூல்		1
6.	திருக்கானூர்	வானோர் சோதி		1
7.	திருஈங்கோய்மலை	வானத்துயர் தன்மதி		1
8.	திருக்குடந்தைக்- -காரோணம்	வாரார் கொங்கை		1

9.	திருநறையூர்ச்சித்தீச்சரம்	பிறைகொள் சடையர்		1
10.	திருப்பூவணம்	அறையார்புனலு மாமலரும்		1
11.	திருவண்ணாமலை	பூவார்மலர் கொண்டடி		1
12.	திருக்கயிலாயம்	பொடிகொளு ருவர்		1

12. பண் - செவ்வழி

1.	திருப்புகலி	விடைய தேறி		2
2.	சீர்காழி	பொடியிலங்குந் திருமேனி		2
3.	திருமுக்கீச்சரம்	சாந்தம்வெண்ணீ றெனப்பூசி		2
4.	திருநாகேச்சரம்	தாழை கொள்		2
5.	திருத்திலதைப்பதி	பொடிகள் பூசிப்		2
6.	திருப்புகலூர்	வெங்கள் விம்மு		2
7.	திருநாகைக்காரோணம்	கூனல் திங்கள்		2
8.	திருப்பாதிரிப்புலியூர்	முன்னம் நின்ற		2
9.	திருஇரும்பைமாகாளம்	மண்டு கங்கை		2
10.	திருக்கேதாரம்	தொண்ட ரஞ்சு		2

13. பண் - காந்தாரம்

1.	திருவெண்காடு	உண்டாய் நஞ்சை		2
2.	திருப்பிரமபுரம்	கறையணி வேலிலர்		2
3.	திருவேணுபுரம்	பூதத்தின் படையினீர்		3
4.	திருப்புகலி	உருவார்ந்த மெல்லியலோர்		2
5.	சீர்காழி	நலங்கொள் முத்து		2
6.	"	விண்ணி யங்குமதிக்		2
7.	திருக்கழுமலம்	பிரமனூர் வேணுபுரம்	திருச்சக்கரமாற்று	2
8.	"	விளங்கிய சீர்ப்	"	2
9.	"	பூமகனூர் புத்தேளுக்	திருக்கோமூத்திரி	2
10.	திருக்கடம்பூர்	வானமர் திங்களும்		2
11.	திருப்பெரும்புலியூர்	மண்ணு மோர்பாகம்		2
12.	திருநல்லூர்	பெண்ணமருந் திருமேனி		2
13.	திருவிடைமருதூர்	பொங்கும்நூல் மார்பினீர்		2
14.	திருவிளநகர்	ஒளிரி ளம்பிறை		2
15.	திருத்தலைச்சங்காடு	நலச்சங்க வெண்குழை		2
16.	திருக்கடவூர்மயானம்	வரிய மறையார்		2
17.	திருமீயச்சூர்	காயச் செவ்வி		2
18.	திருஅரிசிற்- -கரைப்புத்தூர்	மின்னுஞ் சடைமேல்		2
19.	திருத்தேவூர்	பண்ணி லாவிய		2
20.	திருவாரூர்	பவனமாய்ச் சோடையாய்		2
21.	திருக்குடவாயில்	கலைவாழும் அங்கையீர்		2
22.	திருஅகத்தியான்பள்ளி	வாடிய வெண்டலை		2

23.	திருஆலவாய்	மந்திர மாவது	திருநீற்றுப்பதிகம்	2
24.	திருக்குறும்பலா	திருந்த மதிசூடி		2
25.	திருநணா	பந்தார் விரல்		2
26.	திருப்பாண்டிக்- -கொடுமுடி	பெண்ணமர் மேனியினா		2
27.	திருமுதுகுன்றம்	தேவா சிறியோம்		2
28.	திருஅறையணிநல்லூர்	பீடினாற்பெரி யோர்களும்		2
29.	திருப்பாசூர்	சிந்தை யிடையார்		2

14. பண் - சீகாமரம்

1.	திருச்சாய்க்காடு	மண்புகார் வான்புகுவர்		2
2.	திருவெண்காடு	கண்காட்டும் நுதலானும்		2
3.	திருப்பிரமபுரம்	எம்பிரான் எனக்கமுத		2
4.	சீர்காழி	பண்ணின் நேர்மொழி		2
5.	திருப்புள்ளிருக்குவேளூர்	கள்ளார்ந்த பூங்கொன்றை		2
6.	திருஆக்கூர் தான்தோன்றிமாடம்	அக்கிருந்த ஆரமும்		2
7.	திருக்கோட்டாறு	கருந்தடங்கணின் மாதரார்		2
8.	திருநாலூர்மயானம்	பாலூரும் மலைப்		2
9.	திருக்களர்	நீருளார் கயல்		2
10.	திருக்கைச்சினம்	தையலோர் கூறு		2
11.	திருப்புறவார்பங்காட்டூர்	விண் ணமர்ந்தன		2
12.	திருவாமாத்தூர்	துன்னம் பெய்கோவண		2
13.	"	குன்றவார் சிலை		2
14.	திருமயிலாப்பூர்	மட்டிட்ட புன்னை		2

15. பண் - பழம்பஞ்சுரம்

1.	திருக்கலிக்காமூர்	மடல்வரை யின்மது		3
